REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 மே 8 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN 92 1932–2024 ANNIVERSARY தினகரன்
வரு. 92 இல. 109 | Wednesday 08, May, 2024 | 20பக்கங்கள் | 50/-

## நாட்டின் நிதிக் கையிருப்பு உயர்வு
## ஏப்ரல் மாதத்தில் 9.6 வீதமாக அதிகரிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டின் உத்தியோகபூர்வ நிதி கையிருப்பு அதிகரித்து வருவதாக, மத்திய வங்கி தெரிவித்துள்ளது. கடந்த மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் ஏப்ரல் மாதத்தில் அது 9.6 வீதமாக அதிகரித்துள்ளதாக 06

## ஜனாதிபதி தேர்தல் தவிர வேறு தேர்தல்கள் இவ்வருடம் இல்லை

**சபையில் ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க**



லோரன்ஸ் செல்வநாயகம்

அரசியலமைப்பின்படி, இந்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தலைத் தவிர வேறு எந்தத் தேர்தலும் நடைபெறாது என ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று தயாசிறி ஜயசேகர எம். பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் நேற்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கும் சுயாதீன எதிரணி எம்.பி. தயாசிறி ஜயசேகரவிற்குமிடையில் வாதப் பிரதிவாதம் 06

## குற்றவியல் நடவடிக்கை சட்ட கோவை சட்டமாகியது

**சபாநாயகர் சான்றுப்படுத்தியதாக பிரதி சபாநாயகர் தெரிவிப்பு**



லோரன்ஸ் செல்வநாயகம்

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சான்றுரைப்படுத்தியுள்ளதாக, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

இச்சட்டமூலம் பாராளுமன்ற விவாதத்துக்குட்படுத்தப்பட்டு 2024 ஏப்ரல் மாதம் (24) சபையில் நிறைவேற்றப்பட்டது. 06

## கட்டணம் செலுத்தாத 10 இலட்சம் மின்சார இணைப்புகள் துண்டிப்பு

**சிவப்பு எச்சரிக்கை விடுத்தும் செயற்படாததால் தீர்மானம்**



லோரன்ஸ் செல்வநாயகம்

சிவப்பு எச்சரிக்கை விடுத்தும் மின்சார நிலுவைக் கட்டணத்தை செலுத்தத் தவறிய பத்து இலட்சம் பேரின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளதாக, அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மின்விநியோகம் துண்டிக்கப்பட்டு 90 நாட்களுக்குள் நிலுவைக் கட்டணத்தை செலுத்தாவிடின், மின்விநியோகம் முழுமையாகத் துண்டிக்கப்பட்டு மின்பாவனைக்கான கணக்கும் இரத்துச் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். 06

# க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதிய புலமைப்பரிசில்

**மே 22க்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தல்**

ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கமைய க.பொ.த உயர்தரத்தில் தகவல் தொழில்நுட்பம் கற்கும் மாணவர்கள் உட்பட பிரிவெனா கற்கை நிறுவகங்களில் கற்கும் பிக்கு, பிக்குனி மாணவர்களுக்கும் ஏனைய மாணவர்களுக்கும் ஜனாதிபதி நிதியத்தினால் மேலும் இரண்டு புலைமைப்பரிசில் திட்டங்கள் இம்மாதம் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இத்திட்டத்துக்காக எதிர்வரும் 22க்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு ஜனாதிபதி நிதியம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது வழங்கப்படும் புலமைப்பரிசில் திட்டங்களுக்கு மேலதிகமாகவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கு

**பிரிவெனா, பெண்பிக்குனி கற்கை நிறுவகங்களில் கற்கும் பிக்கு, பிக்குனி மாணவர்கள் உள்ளிட்ட மாணவர்களுக்கும் வழங்க ஏற்பாடு**

**தற்போது வழங்கப்படுவதற்கு மேலதிகமாகவே ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கமைய புதிதாக இரண்டு புலமைப்பரிசில் திட்டங்கள் அறிமுகம்**

அமைய மேலும் இரண்டு புலமைப்பரிசில் திட்டங்களை ஜனாதிபதி நிதியம் ஆரம்பித்துள்ளது. இவ்வேலைத்திட்டம் இம்மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

உயர்தரத்துக்கு தெரிவாகி தகவல் தொழில்நுட்ப பாடங்களை கற்கும் மாணவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய, இலங்கை தொலைத் தொடர்

ජනාධිපති අරමුදල
ஜனாதிபதி நிதியம்
President's Fund

பாடல்கள் ஆணைக்குழுவின் ஒத்துழைப்பின் கீழ், ஜனாதிபதி நிதியம் இந்த புலைமைப்பரிசிலை வழங்கவுள்ளது.

சகல கல்வி வலயங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ள இந்த புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தின் கீழ், வலயமொன்றில் குறைந்தபட்சமாக 50 மாணவர்களுக்கு இது, வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக தெரிவு செய்யப்படும் மாணவ மாணவிகளுக்கு 2022 / 23ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி முதல் க.பொ.த 06

## விவசாயத்துறை நவீனமயப்படுத்தலுக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு

**ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன**



இலங்கையில் விவசாய மற்றும் வனப் பாதுகாப்புத் திட்டமொன்றில் இணைந்து செயற்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று (07) ஜனாதிபதி அலுவலகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கையின் காலநிலை மாற்ற செயலகம் சார்பாக காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, காலநிலை இடர் மன்றம் (CVF) சார்பாக அதன் பொதுச் செயலாளர் முன்னாள் மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நஷிட் மற்றும் போர்த்துக்கலின் *Nativa Capital* நிறுவனம் சார்பில் அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி கார்லோஸ் கோமஸ் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்..

விவசாய விளைச்சல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் மேம்படுத்தப்பட்ட மற்றும் நிலைபேறான விவசாய முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இலங்கையில் உள்ள கிராமப்புற சமூகங்களின் வீட்டு விவசாயத்தை மேம்படுத்துவதை இந்த ஒப்பந்தம் நோக்கமாகக் 06

## ஏமாற வேண்டாம்; ரஷ்ய போர் முனையில், உங்கள் கனவுகளை புதைக்க ஒரு கடத்தல் கும்பல் செயல்படுகிறது



11ஆம் பக்கம் பார்க்க

## புதிதாக 3,000 தாதியர்களை இணைக்க அரசு நடவடிக்கை

**அமைச்சர் ரமேஷ் பத்திரண சபையில் தெரிவிப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் தாதியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 3,000 தாதியர்களை புதிதாக இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. நேர்முகப் பரீட்சை நிறைவு பெற்று ஆட்சேபனைக் காலம் வழங்கப்பட்டுள்ளதாக வும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு 06



## தேசிய ஆசிரியர் பேரவையை ஸ்தாபிக்க அமைச்சரவை அனுமதி

தேசிய ஆசிரியர் பேரவையை ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. ஆசிரியர்களின் தொழில்வாண்மை மற்றும் தரப்பண்புகளை அதிகரிக்கும் நோக்கில் இவ்வனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கல்வித் துறைசார் பங்காளர்களுடன் நடத்தப்பட்ட நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர், தயாரிக்கப்பட்ட அடிப்படைச் சட்டமூலத்தின் பிரகாரம் தேசிய ஆசிரியர் பேரவை ஸ்தாபிக்கப்படவுள்ளது. இதற்காக சட்டமூலமொன்றை தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்கப்படவுள்ளது. இதற்காக ஜனாதிபதி மற்றும் கல்வி அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## சீத்தாஎலிய மஹா கும்பாபிஷேகம் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி வருகை



தெஹிவளை, கல்கிஸ்ச விசேட நிருபர்

வரலாற்றுச் சிறப்பு மிக்க நுவரெலியா சீத்தாஎலிய அருள்மிகு சீதையம்மன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதுடன் 18 ஆம் திகதி எண்ணெய் காப்பு நிகழ்வும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்வதற்காக 06

## நுண்கடன் நிறுவனங்களால் 25 வீதமானோர் கடும் பாதிப்பு

**சட்டம் கடுமையாக்கப்படும் என்கிறார் அமைச்சர்**



லோரன்ஸ் செல்வநாயகம்

நுண்கடன் நிறுவனங்களால், நாட்டின் மொத்த சனத்தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் பாதிக்கப்பட்டுள்ளதாக நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச பாராளுமன்றத்தில் தெரிவித்தார். வைரஸ் தொற்று போன்று நாட்டில் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள நுண்கடன் நிறுவனங்களின் 06

## மன்னார், பூநகரி காற்றாலை மின் உற்பத்தி; அதானி நிறுவனத்துக்கு வழங்க அனுமதி

**20 வருடங்களுக்கு மின்சாரம் கொள்வனவு**



மன்னார் மற்றும் பூநகரி பிரதேசத்தில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை, இந்தியாவின் M/s *Adani Green Energy Limited* நிறுவனம் மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடந்த 2022.03.07 இல், நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இதற்கமைய, இந்நிறுவனம் சமர்ப்பித்துள்ள கருத்திட்ட முன்மொழிவை மதிப்பீடு செய்வதற்காக, குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. 06

## இடி, மின்னலுடன் இன்று கடும் மழை

நாட்டின் ப ல பகுதிகளில் இன்று முதல் மழைவீழ்ச்சி அதிகரிக்குமென எதி ர்பார்க்கப்படுவதாக, வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று தெரிவித்துள்ளது.

இதேவேளை, இடியுடன் கூடிய மழையின் போது ஏற்படக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை குறைத்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் மக்களை கேட்டுள்ளது.

## டுபாயில் கைதான 'மன்னா ரமேஷ்' நாட்டுக்கு அழைத்து வரப்பட்டார்



ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலின் தலைவராகக் கருதப்படும் 'மன்னா ரமேஷ்' என்றழைக்கப்படும் ரமேஷ் பிரியஜனக என்பவர், டுபாயிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளார். 06

## ஊழியர் சேமலாப நிதி சட்டத் திருத்தம்; சுமந்திரன் எம்.பி தனி நபர் பிரேரணை

லோரன்ஸ் செல்வநாயகம்



ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தை திருத்தி அமைப்பதற்கான தனிநபர் பிரேரணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று பாராளுமன்றத்தில் முன்வைத்துள்ளார்.

அதற்கிணங்க 1958 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதி சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மேற்படி இப்பிரேரணையை நேற்று பாராளுமன்றத்தில் கருத்து தெரிவித்த 06

### மத்திய வங்கியின் செயற்பாடுகள்

## உரிய அதிகாரிகளை கோப் மற்றும் நிதிக் குழுவுக்கு அழைக்க தீர்மானம்

**சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த**

லோரன்ஸ் செல்வநாயகம்



மத்திய வங்கியின் செயற்பாடுகள் தொடர்பில் பாராளுமன்றத்தின் நிதிக் குழு மற்றும் கோப் குழுக்களுக்கு உரிய அதிகாரிகளை அழைத்து விசாரணைகளை நடத்த முடியும் என, சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் எதிர்க்கட்சி எம்பிக்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் 06

92 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்



## ஹம்பாந்தோட்டை பிரதேசம் முழுவதும் கடும் உஷ்ணம்

### பொதுமக்கள் பல்வேறு அசௌகரியம்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டை பிரதேசம் எங்கும் தற்பொழுது உஷ்ணமான காலநிலை நிலவி வருவதனால் மக்கள் அன்றாடம் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். சிறியவர்கள் மற்றும் முதியோர்கள் பல்வேறு நோய்களுக்கு உட்பட்டு வருவதோடு அம்மை போன்ற தொற்று நோய்கள் பரவி வருவதனையும் காணக் கூடியதாகவுள்ளது.

விவசாயிகளும் உஷ்ணம் காரணமாக விவசாய நிலங்களில் வேலை செய்வதினை தவிர்த்து வருவதோடு மீனவர்களுக்கு கடலில் பிடிபடும் மீன்களின் தொகையும் மிகவும் குறைவாகவே காணப்படுவதனால் அவர்கள் கடலுக்குச் செல்வதனை தவிர்த்தும் வருகின்றனர். கால் நடைகளும் அங்கும் இங்கும் அலைந்து திரிவதைக் காணக்கூடியதாயுள்ளது.

நாளாந்த மின் மற்றும் நீர் பாவனையும் அதிகரித்து காணப்படுவதனால் பட்டியல் விலைகளும் அதிகரித்து மக்கள் நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளனர். இளநீர் மற்றும் தர்பூசணி ஆகியவற்றிற்கு சந்தையில் கூடுதல் மவுசு ஏற்பட்டுள்ளது.

## தெவட்டகஹ பள்ளிவாசலில் நாளை கொடியேற்றம்

கொழும்பு, தெவட்டகஹ பள்ளிவாசலில் குதுபுஸ்ஸைலான் அஷ்ஷெய்கு உஸ்மான் இப்னு அப்துர் ரஹ்மான் அஸ்ஸித்தீக்கி வலியுல்லாஹ் பெயரிலான 207ஆவது வருடாந்த கொடியேற்ற வைபவம் நாளை (09) வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகும். இந்நிகழ்வில் ஸாதாத்மார்கள், ஆன்மீகத் தலைவர்கள், உலமாக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் கலந்து சிறப்பிப்பதோடு நமது தாய் நாட்டின் சுபீட்சத்திற்காக விஷேட பிரார்த்தனையும் இடம்பெறும். புனித மௌலித் தொடர்ந்து 11 நாட்களுக்கு ஓதப்படுவதோடு மார்க்க உபன்னியாசமும் மிக விமரிசையாக நடைபெறும் என தெவட்டகஹ பள்ளிவாசல் தலைவர் ரியாஸ் ஸாலி தெரிவித்தார்.

### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் வேண்டுகோளில்

## களுத்துறை நகர சபை பிரிவிலுள்ள 08 வீதிகள் காபட் வீதிகளாக புனரமைப்பு

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**





அரசாங்கத்தின் 1500 கிலோ மீற்றர் வீதி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் களுத்துறை பிரதேச செயலகப் பிரிவில் எட்டு வீதிகள் காபர்ட் வீதிகளாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் விடுத்த வேண்டுகோளின் பேரில் மேற்படி பிரதேசத்தின் 08 வீதிகளுக்கு காபட் இடுவதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த வேலைத் திட்டத்தின் ஆரம்ப வைபவம் கடந்த திங்கட்கிழமை (6) களுத்துறை மூர் வீதியில் (Moor Street) இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பிரதம அதிதியாக கலந்துகொண்டு வீதி புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

வீதி அபிவிருத்திக்கான வேலைத் திட்டங்களின் பெயர்ப் பலகையை அமைச்சர் திரை நீக்கம் செய்து ஆரம்பித்து வைத்தார். களுத்துறை நகர சபை முன்னாள் உறுப்பினர் ஹிசாம் சுஹைல் உள்ளிட்ட பிரமுகர்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பிரதேச வாழ் மக்களின் நீண்டகால தேவையை நிறைவு செய்வதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்ட அமைச்சருக்கு மக்களின் சார்பில் நன்றி தெரிவிப்பதாகவும் இது விடயத்தில் கரிசனையுடன் செயல்பட்ட இல்யாஸ் அலாவுதீனுக்கும் தனது விசேட நன்றியை தெரிவித்துக் கொள்வதாகவும் முன்னாள் உறுப்பினர் ஹிசாம் தெரிவித்தார்.

மேற்படி வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் களுத்துறை தெற்கு குரே வீதி, சேக் நூர்தீன் மாவத்தை, பெட்ரிக் பீரிஸ் மாவத்தை, வாவி வீதி (வெவ வீதி), ஜயசுந்தர மாவத்தை, விக்ரமசிங்க பிளேஸ், மரிக்கார் வீதி மற்றும் மயூர் கிரசன்ட் மாவத்தை ஆகிய வீதிகள் காபர்ட் வீதிகளாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாத்தறை மாவட்ட வைத்தியசாலைகளின் குறைபாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை

### அமைச்சர்களான ரமேஷ் பதிரன, கஞ்சன கள விஜயம்





**(வெலிகம தினகரன் நிருபர்)**

மாத்தறை அரசினர் வைத்தியசாலைக்கு புதிய CT ஸ்கேன் இயந்திரம் வழங்குதல் மற்றும் மாத்தறை மாவட்ட வைத்தியசாலைகளின் குறைபாடுகள் பற்றி கேட்டறியும் கலந்துரையாடல் ஒன்று சுகாதார அமைச்சர் ரமேஷ் பதிரன தலைமையில் மாத்தறை அரசினர் வைத்தியசாலையில் அண்மையில் இடம் பெற்றது.

இதில் கம்புறுகமுவ வைத்தியசாலைக்கு அடுத்த வருடம் புதிய கட்டடமொன்று அமைத்துக் கொடுக்க நிதி ஒதுக்கீடு செய்வதற்கும் இவ்வருடம் இவ் வைத்தியசாலைகளுக்கு நவீன உபகரணங்களை கொள்வனவு செய்யவும் 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் மின் சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, வைத்திய அதிகாரிகள், தாதிமார்கள், மக்கள் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.





மக்காவை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் உலக முஸ்லிம் லீக் ஏற்பாட்டில் மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் நேற்று (07) ஆரம்பமான சர்வதேச மதத் தலைவர்களின் இன நல்லிணக்க மாநாட்டில், பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தலைமையிலான இலங்கை குழுவினர் பங்கேற்றுள்ளதை படத்தில் காணலாம். இம் மாநாட்டில் 63 நாடுகளைச் சேர்ந்த சர்வமத தலைவர்களும் பங்கேற்றுள்ளமை விசேட அம்சமாகும்.





எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் பிரபஞ்சம் செயற்திட்டத்தின் கீழ் கெக்கிராவ கல்வி வலயத்திற்குட்பட்ட பமுனுகம முஸ்லிம் மகா வித்தியாலய கணினி அறைக்கு தேவையான கணினிகள் , ஸ்மார்ட் பலகை மற்றும் மாணவர்களின் ஆங்கில கற்றல் நடவடிக்கைகளுக்கு தேவையான பாடப் புத்தகங்களை பெற்றுக் கொள்வதற்காக ஒரு இலட்சம் ரூபா பணத்தினையும் கடந்த (05) வழங்கி வைத்த போது பிடித்த படம்.

(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)



தேசிய இராணுவ வீரர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு இராணுவ சேவை அதிகார சபையின் மூலம் இடம்பெறவுள்ள விசேட நிகழ்வுக்காக நிதி திரட்டும் வகையில் முதல் கொடி விநியோகம் வடமேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. வடமேல் மாகாண ஆளுநர் ஹாபீஸ் நஸீர் அஹமட்டுக்கு படை வீரர் ஒருவர் வழங்கி வைப்பதைப் படத்தில் காணலாம்.

படம் : மாவத்தகம தினகரன் நிருபர்)

## பேருவளை மருதானை சாதுலியா ஸாவியாவில் இன்று மனாகிப் தமாம்

**பேருவளை விசேட நிருபர்**

பேருவளை மருதானை சாதுலியா ஸாவியாவில் 157ஆவது வருட சாதுலியா மனாகிப் மஜ்லிஸின் தமாம் வைபமும் புதிதாக கலீபாக்களாக நியமிக்கப்பட்டோருக்கு நியமனக் கடிதம் கையளிக்கும் நிகழ்வும் இன்று (08) புதன்கிழமை மாலை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் ஜமாஅத் சபைத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அல் ஹாஜ் எம்.ஏ.எம் ஹனபியின் வழிகாட்டலின் கீழ் கலீபத்துஷ் சாதுலி மௌலவி எம்.ஐ.எம். றபீக் (பஹ்ஜி) தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கலீபத்துல் குலபா மௌலவி எம்.இஸட்.எம் முஹம்மத் ஸுஹூர் ஆலிம் (பாரி) விசேட பேச்சாளராக கலந்துகொள்வார்.

ஷாதுலிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய சேகுஸ் ஸஜ்ஜாதா அஷ்ஷெய்ஹ் மஹ்தி அப்துல்லாஹ் அல்பாஸி நாயகத்தினால் கலீபாக்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள மௌலவி அல்ஹாஜ் எம். ஜே.எம் பஸ்லான் (அஷ்ரபி–பீ.ஏ) மருதானை பேருவளை, அஷ் ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) (சீனன் கோட்டை), மௌலவி அல்ஹாஜ் எம்.ஐ.எம் பாரூக் (மக்கி) பேருவளை, மௌலவி மபாஸூல் ஹுஸைன் (பஹ்ஜி) தர்காநகர், மௌலவி எம்.இஸட்.எம் ரஸூக் (பஹ்ஜி) காலி, மௌலவி அப்துல் மஜீத் (ஷர்கி) வாழைச்சேனை ஆகியோருக்கே இந்நிகழ்வில் கலீபதுல் குலபாவினால் நியமனம் வழங்கப்படவுள்ளன.

## வேகந்தை ஜும்ஆ மஸ்ஜித் தலைவர் காலமானார்

**கொழும்பு தினகரன் நிருபர்**



கொழும்பு 02, வேகந்தை ஜும்ஆ மஸ்ஜித் நிருவாக சபைத் தலைவர் பஸீர் லத்தீப் நேற்று முன்தினம் இரவு (06) காலமானார். அன்னாரின் ஜனாஸா வேகந்தை ஜும்ஆ மஸ்ஜிதில் வைக்கப்பட்டு, நேற்று (07) அஸர் தொழுகையின் பின்னர் ஜாவத்தை ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்னாரின் ஜனாஸா நல்லடக்கத்தில் பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டிருந்தனர். எல்லோருடனும் இன்முகத்துடன் உறவாடும் இவர், வேகந்தை பள்ளிவாசலில் நீண்ட காலம் சேவையாற்றி பல்வேறு உதவிகளை செய்து வந்த ஒரு சிறந்த தலைவராக காணப்பட்டார்.



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் புதிய பொது முகாமையாளராக பொறியியலாளர் ரீ. பாரதிதாசன் (06) இரத்மலானையில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிரதான அலுவலகத்தில் சுப நேரத்தில் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டபோது எடுத்த படம்.

படம் ; பேருவளை விசேட நிருபர்

## ஹெரோயின் வைத்திருந்த பெண்ணொருவர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

ஹெரோயின் போதைப்பொருளினை வைத்திருந்த பெண் சந்தேக நபர் ஒருவரை அநுராதபுரம் வலய மது ஒழிப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாரால் தடுத்து வைத்து விசாரணைசெய்யும் போதைப்பொருள் விற்பனையுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் கடந்த 06 ஆம் திகதி பகல் அநுராதபுரம் மகுலாவ பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது பெண் சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் 26 கிராமும் 230 மில்லிகிராமும் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருளினை வலய மது ஒழிப்பு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர் 36 வயதுடைய மகுலாவ, ஹூரிகஸ்வெவ பகுதியைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 மே 8 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

சுபஹ் - 04.37
ளுஹர் - 12.09
அஸர் - 03.27
மஃரிப் - 06.19
இஷா - 07.32

**இன்றைய சுபதினம்**

குரோதி வருடம் சித்திரை 25

ராகுகாலம் : பகல் : 11.55 - 1.25வரை
சுபநேரம் : மாலை : 4.25 - 5.55வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

# பொருளாதார நெருக்கடியிலிருந்து முழுமையாக இன்னும் மீளவில்லை

## திட்டமிட்ட சீர்திருத்தங்களை மாற்றக் கூடாது

சுதந்திரத்துக்குப் பின்னரான வரலாற்றில் இடம்பெற்ற மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து, நாடு முழுமையாக இன்னும் மீளவில்லையென்றும், தற்போது நடைமுறைப்படுத்தப்படும் திட்டமிட்ட முக்கியமான சீர்திருத்தங்களை எந்த வகையிலும் மாற்றியமைக்கக் கூடாதென்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பி.நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.மத்திய வங்கியின் தலைமையகத்தில் நேற்று (07) நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே ஆளுநர் இவ்விடயங்களை குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரத்தை 2022 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.இருந்தபோதிலும், அதனை மிகவும் வெற்றிகரமான மற்றும் நிரந்தரமான பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு மேம்படுத்தும் போது தவறான திட்டமிடப்பட்ட கொள்கைகளை கையாளக்கூடாது .



இச்சந்தர்ப்பத்தில் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்கு பரந்த அரசியல் மற்றும் சமூக இணக்கப்பாட்டின் அடிப்படையில் பொருளாதார சீர்திருத்தங்களை தொடர்ந்து அமுல்படுத்துவது மிகவும் முக்கியமானது.

இதனுடாக நிலையான வளர்ச்சியை ஏற்படுத்தி பொது மக்களின் சேம நலன்கள் மேம்படுத்தப்படுவது உறுதி செய்யப்படும்.

2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க புதிய சட்டத்துக்கமைவாக இலங்கை மத்திய வங்கியின் 2023 வருடாந்த பொருளாதார விளக்கவுரை, மற்றும் நிதி அறிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே ஆளுநர் இந்த விடயங்களை தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட பிரதி ஆளுநர் டி.எம்.ஜே.வை பி.பெர்னாண்டோ , முனைவர், கலாநிதி சி.அமரசேகர, பொருளாதார ஆராய்வு பணிப்பாளர் கலாநிதி எஸ்.ஜெகஜீவன், பொருளாதார ஆராய்வு மேலதிகப் பணிப்பாளர் கலாநிதி எல்.ஆர்.சி.பத்பெரிய ஆகியோரும் கருத்துத் தெரிவித்தனர்

# அமைச்சர் விஜேயதாசவின் மனு நேற்று நீதிமன்றத்தால் விசாரணையின்றி நிராகரிப்பு



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக செயற்படுவதைத் தடுத்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்சவுக்கு விதித்த தடை உத்தரவுக்கு, எதிராக அவரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணையின்றி நிராகரிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நேற்று ( 07) மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இது, நிராகரிக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான பிரிவினரால் கடந்த ஏப்ரல் மாதம், 10 ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ, பதில் தலைவராக நியமிக்கப்பட்டார். இதையடுத்து , கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அவருக்கு எதிராக தடை உத்தரவு பிறப்பித்தது.

அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான, இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

# தேர்தல் வேண்டாமென கூறியவர்கள் இன்று நடத்த வேண்டுமென்கின்றனர்

**மாவத்தகம தினகரன் நிருபர்**

மாகாண சபைத் தேர்தல் நடத்தக் கூடாது, தேர்தலை ஒத்திப் போட வேண்டுமென கூக்குரலிட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினரும் தற்போது தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுப்பதாக வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், நிறுவனங்களின் தலைவர்கள் உட்பட வடமேல் மாகாண சபையின் பிரதம செயலாளர்களின் பங்களிப்புடன், வடமேல் மாகாணத்தின் எதிர்காலத் திட்டங்கள் பற்றிய கலந்துரையாடல் வடமேல் மாகாணத்தின் புதிய ஆளுநர் நஸீர் அஹமட் தலைமையில் மாகாண சபை வளாகத்தின் லிச்சாவி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.



இதன்போது தற்போதைய தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனவும் கலந்து கொண்டார். நிகழ்வில் ஆளுநர் நஸீர் அஹமட் தொடர்ந்து கருத்து தெரிவிகையில்:

சுற்றுலாத் துறை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. அதனை மேம்படுத்தி வடமேல் மாகாணத்தில் புதிய முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் சுற்றுலாத் துறையை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எதிர்காலத்தில் குருநாகல் மாவட்டத்திலுள்ள தம்பதெனிய போன்ற பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்திருந்த போது, அதனை தூக்கி நிறுத்திய ஒரே தலைவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே.

மாகாண சபை தேர்தல்களை நடத்தக் கூடாதென தமிழ் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸூம் அன்று கூச்சலிட்டன.

எதிர்காலத்தில், வடமேல் மாகாணத்தை சகல துறைகளிலும் சிறந்த வளமுள்ள மாகாணமாக கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வீதி அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளரின் விசேட அறிக்கை

மத்திய அதிவேக நெடுஞ்சாலை முதல் பகுதியின் கொங்கிரீட் பகுதி, இடிந்து விழுந்தமை தொடர்பில் 06.05.2024 அன்று வெளியான ஊடகச் செய்தி தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் நாயகம் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது:

மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின் கடவத்தை மீரிகம வீதிப் பகுதியியில் 18+100 கி.மீ. பகுதி 2024,மே 04 இடிந்து விழுந்தது.இந்த ,

30 மீட்டர் நீளம் கொண்ட இந்த கொங்கிரீட் பீம், 80 தொன்களுக்கும் அதிகமான எடையைக் கொண்டுள்ளது.

2021 நவம்பரில் , இந்த இடத்திலுள்ள கொங்கிரீட் தூண்களில் இந்த கொங்கிரீட் பீம் அமைக்கப்பட்டது. இரண்டரை ஆண்டுகள் கடந்தும் இந்த இடத்தில் மீதமுள்ள பணிகளை முடிக்க முடியாதுள்ளது.

கொங்கிரீட் தூண்களில் கொங்கிரீட் பீம்களை வைக்கும் போது, கொங்கிரீட் பீம்களின் பாதுகாப்புக்காக இறப்பர் பேரிங் வைக்கப்படும். இவ்வாறு வைக்கப்பட்ட இறப்பர் பேரிங்கில்

இந்த பீம் விழுந்து சரிந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இது தவிர மேலும் இரண்டு மின்கம்பங்களும் இதனால் சேதமடைந்துள்ளன. இவ்விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள இரண்டு விசேட குழுக்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபை நியமித்துள்ளது.இக்குழு இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளது .

இக்குழு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூலம், மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் பிரிவு1 இல் கட்டப்பட்டுள்ள சகல கொங்கிரீட் பீம்களின் தற்போதைய நிலை பரிசோதிக்கப்படும். இதன் பின்னர், அதிகாரிகள் உடனடியாக இதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு தீர்வுகளை வழங்குவர். அதிவேக

05

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
கட்டிடங்கள் திணைக்களம்

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

**அனுராதபுரத்திலுள்ள கிராமிய அருங்காட்சியகத்தின் மீதி புதுப்பித்தல் வேலை (III ஆம் படிமுறை)**

**[Contract No.: BD-0010sp01-Z3/CT003/24]**

1. 37.5 மில்லியன் ரூபா மதிப்பீட்டிலும் கீழே விபரிக்கப்பட்டதுமானதும் அனுராதபுரத்திலுள்ள கிராமிய அருங்காட்சியகத்தின் மீதி புதுப்பித்தல் வேலைக்காக (III ஆம் படிமுறை) தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கட்டிடங்கள் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை பொறியிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

   நிர்மாணக் காலப்பகுதியானது 154 நாட்களாகும்.

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமையானது 04/2016 (iii) என்ற அரச நிதி சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும்.

3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் சி5 அல்லது சி4 ஆகிய தரங்களுக்காக கட்டிட நிர்மாணத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றவர்களாகவும் விலைமனுக்களை மூடும் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். மேலும், ஒப்பந்தத்தை வழங்கும் திகதியன்றும் பதிவானது செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

   ''விலைமனுதாரர்கள் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம், இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். பதிவு செய்தலின் மூலப்பிரதியானது (பிசிஏ-3) விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிசிஏ-3 சான்றிதழை சமர்ப்பிக்காத எந்தவொரு விலைமனுதாரருக்கும் பெறுகைகள் வழங்கப்படமாட்டாது''.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை குருநாகல், வில்கொட பாதை, கட்டிடங்கள் திணைக்கள 3 ஆம் வலயத்திற்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று, அதே முகவரியில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

   தொடர்பு இலக்கங்கள் பின்வருமாறு: தொலைபேசி: 037-2222437. தொலைநகல்: 037-2222197

5. 2024.05.08 ஆம் திகதியிலிருந்து 2024.05.29 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக எண்ணாயிரம் ரூபாவை (8,000 ரூபா) செலுத்திய பின்னர், குருநாகல், வில்கொட பாதை, கட்டிடங்கள் திணைக்கள 3 ஆம் வலயத்திற்கான பிரதான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

6. 2024.05.30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டிடங்கள் திணைக்களம், 2 ஆம் மாடி, ''செத்சிரிபாய'', பத்தரமுல்ல என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். பத்தரமுல்ல, ''செத்சிரிபாய'', 2 ஆம் மாடியின் கட்டிடங்கள் திணைக்கள ஒப்பந்தக் கிளையில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் விலைமனுக்களை அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.

7. விலைமனுக்களை ஏற்றுக் கொள்வதற்காக நிருணயிக்கப்பட்டுள்ள இறுதித் திகதியிலிருந்து அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்தும் விலைமனுக்கள் 91 நாட்கள் காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

8. அனைத்து விலைமனுக்களும் பின்வருமாறு அமைந்துள்ள பாங்கில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் ஆவணத்தின் 09 ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்தில்.
   - கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டதாகவிருத்தல்.
   - 562,000 ரூபா தொகைக்கானதாகவிருத்தல்.
   - 2024 செப்டம்பர் 25 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்.
   - விலைமனுக்கோரல் தரவின் 16.2 ஆம் ITB உபவாசகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள முகவரான்மைகளின் ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.

9. பாதுகாப்பு சோதனை நிமித்தம் காரணமாக விலைமனுக்களை மூடும் நேரத்திற்கு 1 மணித்தியாலத்திற்கு முன்னராக ''செத்சிரிபாய'' இடப்பரப்பிற்குள் உட்செல்லுமாறு விலைமனுதாரர்கள் அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

**பொறியியலாளர் (திருமதி) கே.ஜி.எஸ். குமுதினி,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2 ஆம் மாடி, 'செத்சிரிபாய',**
**பத்தரமுல்ல.**
**www.buildings.gov.lk**

# கல்வி முறை டிஜிட்டல் மாற்றம் சீனா அரசாங்கம் உடன்பாடு

## அமைச்சரவையில் அங்கீகாரம்

நாட்டின் பொதுவான கல்வி முறையை டிஜிட்டல் நிலையுருமாற்றம் செய்தல் தொடர்பாக, கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கையின் பொதுவான கல்வி முறையை டிஜிட்டல் நிலையுருமாற்றம் செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்திட்ட முன்மொழிவுக்கமைய, உதவிகளை வழங்குவதற்கு சீனா அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

இக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் சாத்தியவளக் கற்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உத்தேசக் கருத்திட்டத்தின் மூலம் *Delivering Class Room ,Receiving Class Room* போன்ற பணிகளை நெறிப்படுத்துவதற்காக கல்வி அமைச்சின் கீழ் தரவு மையம் *(Data Centre)* , ஒளிப்பதிவு அறை *(Studio Room)>* மாநாட்டு அறை *(Conference Room)* போன்றவற்றை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

கலப்புக் கற்றல் முறைமையை முறைசார்ந்த வகையில் மேற்கொள்ளல், வளங்களைப் பகிர்ந்து கொள்ளல், விசேட திறன்களைக் கொண்டுள்ள ஆசிரியர்களின் அறிவை தேவையான சந்தர்ப்பங்களில் மாணவர்களுக்கு வழங்கல், ஆசிரியர் பற்றாக்குறை காணப்படும் வேளைகளில் ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தவிர்த்தல் மற்றும் உத்தேசக் கல்வி மறுசீரமைப்புக்களுக்காக வசதிகளை வழங்கல் போன்ற பணிகளை வினைத்திறனாகவும் பயனுறுமிக்க வகையிலும் மேற்கொள்ள குறித்த உபகரணங்கள் மூலம் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இதற்கமைய, இச்சாத்தியவளக் கற்கையின் அறிக்கையின் பிரகாரம் உத்தேசக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா ஸ்ரீலசுக தலைமையகம் வருகை

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஐந்து வருடங்களின் பின்னர் கடந்த (06 ) மாலை கொழும்பு டீ.பீ.ஜயா மாவத்தையிலமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்துக்கு வருகை தந்தார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுடன் அமைச்சர்கள் பலரும் இங்கு வருகை தந்திருந்தனர். இந்தக் குழுவில் அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன மற்றும் கட்சியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க ஆகியோரும் வருகை தந்தனர்.

தலைமையகத்திலிருந்து வெளியேறும் போது, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, கட்சியின் முக்கியஸ்தர்களுடன் தலைமையகத்தில் விசேட கலந்துரையாடலை மேற்கொண்டதாக தெரிவித்தார்.

தாம், எப்போதும் கட்சியில் இருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னை விட்டுப் பிரிந்து சென்றதால் அதன் பின்னர் தலைமையகத்துக்கு வரவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கட்சியின் முன்னேற்றத்துக்காக தன்னை அர்ப்பணிப்பேன் என்று கூறிய சந்திரிக்கா, நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம் என்றார்.

# சிறுநீரக நோயளர்கள் அதிகரிப்பு 2023 இல் 62,549 நோயளர்கள் பதிவு

## சபையில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண

**லோரன்ஸ் செல்வநாயகம்**

2023 ஆம் ஆண்டில் 62, 549 சிறுநீரக நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அந்த வகையில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்து வருவதாகவும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்னாள் சுகாதார அமைச்சரும் எதிர்க்கட்சி எம்.பி.யுமான ராஜித சேனாரட்ன, சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் ரமேஷ் பத்திரண சபையில் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில், சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை நாட்டில் வெகுவாக அதிகரித்துள்ளது.

அந்த வகையில் 2015 இல், 30,657 ஆகவும் 2016இல் 37 618, 2017 இல் 43 835, 2018இல் 50 310, 2019 இல் 59 283, 2020 இல் 63 914 , 2021 இல் 65 453, 2022 இல் 67 706 மற்றும் 2023 இல் 62 549 நோயாளர்களும் பதிவாகினர். வருடாவருடம் இந்த நோயளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதையே அவதானிக்க முடிகிறது. இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்தி,நாடு முழுவதிலும் சுகாதார அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மருத்துவ கட்டளை சட்டத்தை திருத்தம் செய்ய அரசு தீர்மானம்

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களிலுள்ள மருத்துவப் பட்டப்படிப்பை, நாட்டில் அங்கீகரிப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய தர நியமங்கள் மற்றும் அளவுகோல்கள் உள்ளடங்கிய தேசிய கொள்கையை தயாரிப்பதற்கும், சமகால தேவைகளுக்கு பொருத்தமான வகையில் மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளைத் திருத்தம் செய்வதற்கான விதந்துரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இதற்காக அமைச்சின் செயலாளரின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள குழு சமர்ப்பித்துள்ள விதந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக 2023.10.09 அன்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இப்பரிந்துரைகளின் பிரகாரம் மருத்துவக் கட்டளை சட்டத்தை திருத்தம் செய்வதற்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு சட்ட மாஅதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. இச் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் சித்திரை மாதம் 25ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 29

### குறள் தரும் சிந்தனை



மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்

மகன் தன் தந்தைக்குச் செய்யத் தக்க கைம்மாறு, இவன் தந்தை இவனை மகனாகப் பெற என்ன தவம் செய்தானோ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும்.

# என்றும் நினைவுகூரப்படும் பேராசிரியர் வித்தியானந்தன்

இலங்கையின் புகழ்பெற்ற தமிழ்ப் பேராசிரியர்களில் ஒருவரான பேராசிரியர் சுப்ரமணியம் வித்தியானந்தன் அவர்களின் நூறாவது பிறந்த தினம் (08.05.2024) இன்றாகும். இத்தினத்தையொட்டி பேராசிரியர் சு. வித்தியானந்தன் அறக்கட்டளையும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து நூற்றாண்டு விழாவொன்றை ஏற்பாடு செய்துள்ளன. இந்த விழா எதிர்வரும் 11 ஆம் திகதி யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இலங்கையில் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்கும் பத்திரிகைத்துறை முன்னேற்றத்திற்கும் அளப்பரிய பங்களிப்பை நல்கியவராக விளங்கும் சு. வித்தியானந்தன் முன்னணி எழுத்தாளருமாவார். நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ள வித்தியானந்தனின் பல கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. அவை இன்றும் பயன்மிக்க நூல்களாக விளங்கிக் கொண்டிருக்கின்றன.

இந்நாட்டின் வடமாகாணத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தில் 1924 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் திகதி பிறந்த சு. வித்தியானந்தன், யாழ்ப்பாணம், வீமன்காமம் தமிழ்ப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து தெல்லிப்பழை ஒன்றியக் கல்லூரி, பரி. யோவான் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி ஆகியவற்றில் இடைநிலைக் கல்வியைக் கற்ற இவர் இலங்கைப் பல்கலைக்கழகம், இலண்டன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உயர்கல்வியைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

சுவாமி விபுலானந்த அடிகள், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை ஆகியோர் இவரது ஆசிரியர்களாக இருந்துள்ளனர். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்று கலைமாணி, முதுகலைமாணி ஆகிய பட்டங்களைப் பெற்ற முதல் கல்விமானாகவும் விளங்குகிறார். தனது 26 ஆவது வயதில் பிரித்தானியா சென்று இலண்டன் பல்கலைக்கழகத்தில் இணைந்து கற்று கலாநிதி பட்டம் பெற்றுக் கொண்ட இவர், அங்கிருந்து திரும்பியதும் தினகரனில் இலண்டன் பயணம் தொடரில் பயணக் கட்டுரையை எழுதினார். அத்தோடு 1950 முதல் தினகரன் எழுத்தாளர்களில் ஒருவராகவும் விளங்கினார் சு. வித்தியானந்தன்.

அதேநேரம் லேக் ஹவுஸ் நிறுவனம் வெளியிடும் தினகரன் பத்திரிகைக்கு பேராசிரியர் கைலாசபதி, ஆர். சிவகுருநாதன் ஆகியோரை அறிமுகப்படுத்தியவரும் இவரேயாவார்.

இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்தை பெற்றுக் கொண்ட சு. வித்தியானந்தன் தாயகம் திரும்பிய பின்னர் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளராக இணைந்து கொண்டார்.

அதேநேரம், 1970 ஆம் ஆண்டில் மூன்றாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு பாரிஸில் நடத்தப்பட்டது. அம்மாநாட்டில் இலங்கையில் இருந்து கலந்து கொண்ட பேராசிரியர் வித்தியானந்தன், நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1972 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கு முன்னின்று உழைத்தவர்களில் ஒருவராகவும் விளங்குகிறார்.

இவை இவ்வாறிருக்க, 1977 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார் வித்தியானந்தன். அதன் பின்னர் 1979 ஜனவரியில் அவ்வளாகம் பல்கலைக்கழகமான போது அதன் முதலாவது துணைவேந்தரானார் அவர். பல்கலைக்கழக வளாகமாக இருந்த யாழ். பல்கலைக்கழகத்தை முழுமையான பல்கலைக்கழகமாக மேம்படுத்துவதற்கு அவர் அரும்பாடுபட்டு உழைத்தார்.

அத்தோடு பல்கலைக்கழக மாணவர்களது தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வகையில் அவர் அவ்வப்போது கட்டுரைகளையும் எழுதினார். அக்கட்டுரைகளும் தொகுக்கப்பட்டுத் தனி நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. பேராசிரியர்களான கா. சிவத்தம்பி, க. கைலாசபதி, பொ. பூலோகசிங்கம், ஆ. வேலுப்பிள்ளை போன்ற தமிழறிஞர்களும் இவரது மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

பேராசிரியர் வித்தியானந்தன் யாழ்ப்பாணம் வளாகத் தலைவராகவும் தொடர்ந்து மும்முறை யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணியாற்றியுள்ளார்.

இவ்வாறு அளப்பரிய சேவைகளை பேராசிரியர் வித்தியானந்தன் ஆற்றியுள்ளார். அவரது சேவைகளைக் கௌரவிக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகம் 'பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூலகம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. அத்தோடு இலங்கைத் தபால் திணைக்களம் பேராசிரியர் வித்தியானந்தனுக்கு 1997 நவம்பர் 11 ஆம் திகதி நினைவு தபால் முத்திரையையும் முதல் நாள் காகித உறையையும் வெளியிட்டு கௌரவித்துள்ளது.

தமிழ்மொழிக்கும் தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்கும் மாத்திரமல்லாமல் பத்திரிகைத்துறை வளர்ச்சிக்கும் அளப்பரிய பங்களிப்பு நல்கியுள்ள பேராசிரியர் வித்தியானந்தனின் சேவைகள் இந்நாட்டு வரலாற்றில் அழியாத்தடம் பதித்துள்ளன. அத்தோடு அவரது பணிகள் என்றும் நினைவு கூரப்படக் கூடியவை என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

## நுவரெலியா சீத்தாஎலிய சீதையம்மன் ஆலய கும்பாபிஷேகம்;

# இராதாகிருஷ்ணன் எம்.பியின் அழைப்பின் பேரில் 18ஆம் திகதி இலங்கை வருகிறார் ரவிசங்கர் குருஜி

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நுவரெலியா சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வாழும்கலை பயிற்சியின் நிறுவனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி எதிர்வரும் 18 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தருகின்றார். அவர் தனது வருகையை உறுதி செய்துள்ளதாக சீதைம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

"நானும் எங்களுடைய ஆலயத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களும் கடந்த மாதம் இந்தியாவின் பெங்களூர் நகருக்கு விஜயம் செய்து வாழும் கலை பயிற்சியின் நிறுவனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜியை அவருடைய ஆசிரமத்தில் சந்தித்து எங்களுடைய ஆலய கும்பாபிஷேக நிக்ழவில் கலந்து கொள்ளுமாறு அழைப்பிதழ் வழங்கினோம்.

குருஜி எமது அழைப்பிதழைப் பெற்றுக் கொண்டு தன்னுடைய வருகையை மிகவிரைவில் உறுதிப்படுத்துவதாக எங்களிடம் தெரிவித்திருந்தார்.அதற்கமைய அவர் தற்பொழுது தான் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்வதை உறுதி செய்துள்ளார். எனவே நாம் அவரை வரவேற்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகின்றோம்.

குருஜி 18 ஆம் திகதி கொழும்பை வந்தடைந்து அங்கிருந்து அன்று மாலை நுவரெலியாவுக்குச் சென்று ஆலயத்தின் என்ணெய்க்காப்பு நிகழ்விலும் கலந்து கொள்கின்றார். அதனைத் தொடர்ந்து மறுநாள் நடபெறுகின்ற மஹாகும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்கின்றார். கும்பாபிஷேக நிகழ்வில் கோய்ம்புத்தூர் நகரில் இருந்து வருகை தருகின்ற சுவாமி ஜகதாத்மானந்தா சரஸ்வதியும் கலந்து கொள்கின்றார்.

அத்துடன் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்கின்றனர். இந்தியாவில் இருந்து வருகை தருகின்ற பல முக்கியஸ்தர்களும் நிகழ்வில் கலந்து கொள்கின்றார்கள்".

இவ்வாறு இராதாகிருஷ்ணன் எம்.பி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இது தொடர்பான விரிவான ஊடக சந்திப்பு நேற்று 07.05.2024 மாலை 2.00 மணியளவில் வெள்ளவத்தை மயூரபதி அம்மன் ஆலயத்தில் நடைபெற்றது. இதன்போது அனைத்து விடயங்களும் ஊடகவியலாளர்களுக்கு விரிவாக அறிவிக்கப்பட்டன.



ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜியுடன் இராதாகிருஷ்ணன் எம்.பி





சுவாமி ஜகதாத்மானந்தா சரஸ்வதி

**எஸ். தியாகு...**
(நுவரெலியா நிருபர்)

# பாக்கினிகஹவெல முஸ்லிம் கல்லூரி நூற்றாண்டு விழாவில் பிரதம அதிதியாக கல்வி அமைச்சர்

கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த அண்மையில் மொனராகலை மாவட்டத்தின் பிபில கல்விப் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் விசேட கண்காணிப்பு விஜயத்தில் ஈடுபட்டதுடன் பாக்கினிகஹவெல முஸ்லிம் கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

அதிபர் எம். எச். எம். முபாரக் தலைமையில் நடைபெற்ற நூற்றாண்டு விழாவில், கல்லூரியின் மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்கள் தொடர்பான கள கண்காணிப்பிலும் அமைச்சர் கலந்து கொண்டார்.

கல்வி இராஜாங்க அமைச்சர் விஜித பேருகொட, ஊவா மாகாண கல்விப் பணிப்பாளர் ரோஹித அமரதாச, மெதகம பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ரஞ்சித் பியதிகம, மாவட்ட காஸி நீதவான் மௌலவி ஸல்ஸபீல் மற்றும் ஊர் ஜமாத்தினர், பள்ளிவாயல் நிர்வாகிகள், உலமாக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர்களுக்கான பரிசில்களும் தூர இடங்களிருந்து பாடசாலைக்கு வரும் மாணவைர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டதுடன் கல்வி அமைச்சருக்கு பாடசாலை அதிபரால் நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.







**எம்.ஏ.எம்.ஹசனார்...**
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# சுவிண்டன் தமிழ் வித்தியாலய அதிபர் முருகையா சேவையிலிருந்து ஓய்வு

பதுளை மாவட்டம், லுணுகலை பிரதேச சுவிண்டன் தோட்டத்தில் சிலம்பரம்_ வள்ளியம்மை தம்பதிகளின் மகனான எஸ். முருகையா தனது ஆரம்பக் கல்வியை சுவிண்டன் தமிழ் வித்தியாலயத்திலும் பின்னர் இடைநிலை, உயர்தர கல்வியை லுணுகலை இராமகிருஷ்ண இந்து கல்லூரியிலும் கற்றார்.

1990ஆம் ஆண்டு அவருக்கு ஹொப்டன் பது/ கலைமகள் தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரிய நியமனம் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து அடாவத்தை, பது/திருமகள் தமிழ் வித்தியாலயம், பது/அல்அமீன் முஸ்லிம் வித்தியாலயம், பது/ ஹொப்டன் விக்னேஸ்வரா தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராக அர்ப்பணிப்புடன் சேவையாற்றியுள்ளார்.

சக ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள், சமூகநலன் விரும்பிகள் ஆகியோரிடம் நட்புறவுடன் பழகிவந்தார். இவரிடம் கற்ற மாணவர்கள் பலர் தற்போது உயர்ந்த பதவிகளில் உள்ளனர்.

எஸ். முருகையா 2007 ஆம் ஆண்டு பது/ சுவிண்டன் தமிழ் வித்தியாலயத்திற்கு அதிபராக நியமிக்கப்பட்டார். இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அவர் அரும்பணியாற்றியுள்ளார். பசறை கல்வி வலயத்தில் சிறந்ததோர் ஆரம்பப் பிரிவு பாடசாலையொன்று உருவாகுவதற்கு வழியமைத்துள்ளார்.



இப்பாடசாலையில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர். இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்குகின்றனர். அத்தோடு அவர் சுவிண்டன் தோட்ட ஆலய அறங்காவலர் சபையின் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.

அதிபர் எஸ். முருகையா கடந்த 25.04.2024 அன்று தனது கல்வி சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார். புதிதாக இலங்கை அதிபர் சேவை போட்டிப்பரீட்சையில் நியமனம் பெற்றுவந்த அதிபர் திருமதி சண்முகப்பிரியாவை இன்முகத்தோடு வரவேற்று தனது நிர்வாகப் பொறுப்பை ஒப்படைத்தார்.

இவரது பணி ஓய்வினையொட்டி பாடசாலை சமூகத்தினரும் லுணுகலை பிரதேச சமூகநல அமைப்புகளும் பிரியாவிடை விழாக்களை நடத்தி வருகின்றன.

**ந.மலர்வேந்தன்...**
(லுணுகல நிருபர்)

# கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியின் வளர்ச்சிக்கு பாடுபட்ட மர்ஹூம் சகீது

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை முன்னாள் அதிபர், தேசகீர்த்தி சகீது அவர்கள் தனது 81 ஆவது வயதில் அண்மையில் காலமானார். ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், அதிபர், அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி ஆளுநர் சபை நிர்வாகி, சமூக சேவையாளர் என்றெல்லாம் பல்வேறு பரிமாணங்களுடன் அவர் பணியாற்றினார்.

அதிபர் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற சகீது அவர்கள், தன்னை முழுமையாக தன்னை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியுடன் பிணைத்துக் கொண்டார்.அவரது எண்ணத்திலும், பேச்சிலும் அரபுக் கல்லூரியின் அபிவிருத்தி, எதிர்காலம் குறித்த அக்கறை தோய்ந்திருந்தது. அக்கல்லூரிக்காக அன்னார் அதிகளவு பணத்தையும் நேரத்தையும் விரயம் செய்துள்ளார்.



அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை அதிபராகப் பதவியேற்ற அன்னார், பாடசாலையின் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பெரும் ஆர்வம் செலுத்தினார். பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினராகவும், கடந்த 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய மீலாதுன் நபி விழாவின் போது, அன்னார் தலைமையிலான உணவு மற்றும் உபசாரக் குழுவின் அங்கத்தவராகவும், 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி வைரவிழாக் குழுச் செயலாளராகவும் அவர் பதவி வகித்தார். நகைச்சுவையாகப் பேசும் அன்னார் விருந்தளித்து உபசரிப்பதில் முதன்மையானவராக மிளிர்ந்தார். அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி உயிர்வாழும் காலமெல்லாம் அன்னாரது பெயர் உச்சரிக்கப்படும் என்பது உறுதி.

**முகம்மட் றிஸான்...**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# ஆணைக்குழுக்கள் குறித்து நம்பிக்கை ஏற்பட வேண்டும்

## சபையில் சுமந்திரன் எம்.பி சுட்டிக்காட்டு

லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்கம் நியமித்துள்ள ஆணைக்குழுக்க ளின் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத் தாது, இன்னுமொரு நல்லிணக்கத்துக்கான செயலணியை உருவாக்க மேற்கொள்ளும் முயற்சிகள், தமிழ் மக்கள் மத்தியில் எத்தகைய நம்பிக்கையையும் ஏற்படுத்தாதென தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி எம். ஏ. சுமந்திரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

செப்டம்பரில் நடைபெறவுள்ள ஜெனிவா அமர்வை இலக்காகக் கொண்டு நல்லிணக்க செயலணியை உருவாக்க மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள், வெறும் கண்துடைப்பே என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.



வெளிவிவகார அமைச்சரின் தலைமையில் நல்லிணக்கத்துக்கான செயலணி தொடர்பாக அரசாங்கம்

யுத்த அத்துமீறல் குற்றச் சாட்டுக்களுக்கு உள்ளக பொறிமுறை மூலமாக சரியான நீதி கிடைக்காது என்பதற்கு யுத்தம் முடிவடைந்த இந்த 15 வருட காலத்தில் எதுவுமே இடம்பெறாமையே சான்றாக உள்ளதாகவும் குறிப்பிட்ட அவர்,

இன்னுமொரு நல்லிணக்க செயலணி உருவாக்கப்படுவதை எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒரு நிரந்தர அரசியல் தீர்வின்றி எந்தவித நல்லிணக்கமும் ஏற்பட முடியாது. சர்வதேச நீதிமன்ற பொறிமுறை, ரோம் சட்டத்தின் மூலம் மட்டுமே நடத்தப்படும். எனவே அரசாங்கம் ரோம் சட்டத்துக்கு இணங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் மற்றும் வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்)திருத்தச் சட்டமூலம் (பராட்டே) ஆகியன மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இந்த மே, மாதத்துடன் யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இத்தகைய சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்தில் முன்மொழியும் சட்டமூலம் தொடர்பில் நேற்று கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடப் பட்டது.

அங்கு நான் சில கருத்துக்களை முன்வைத்தேன்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்திலும் யுத்த காலம் முழுவதும் பல விதமான அத்துமீறல்கள் நடந்துள்ளன. உலகத்தில் நடக்கும் எந்தவொரு யுத்தமும் சுத்தமானது கிடையாது. சுத்தமான யுத்தம் என்று எதனையும் கூற முடியாது. ஆயுதப் போரில் அத்தமீறல்கள் நடந்தே தீரும்.ஆனால் அவ்வாறு நடக்கும் போது, அதனால் பாதிக்கப்படுபவர்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கு பொறுப்பு உள்ளது.

அத்துமீறல்கள் தொடர்பில் விசாரிப்பதற்கும் விசேடமாக காணமாலாக்கப்பட்டவர்கள் விடயத்தில் என்ன நடந்தது? யார் இதற்கு பொறுப்பு? அவர்கள் உயிருடன் இருக்கின்றனரா? இல்லையா? என்ற விபரங்களை உறவினர்களுக்கு தெளிவு படுத்துவதும் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

காணாமலாக்கப்படுவது பலரால் செய்யப்பட்டிருக்கலாம். ஆனால் சாட்சியங்களின் அடிப்படையில், கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவுக்கு முன்னால் வழங்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் யுத்தத்தின் இறுதி இரண்டு நாட்களில் மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அரச படையினரிடம் சரணடைந்தனர் என்று அரசாங்கம் நியமித்த ஆணைக் குழு வினாலேயே கூறப்பட்டது.

அவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை வெளிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இந்த விடயத்தில் பல ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக் குழு, உதலாகம ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு போன்றவற்றில் பல விடயங்கள் முன்வைக்கப்பட்டன

எந்த முன்மொழிவுகளும் இது வரையில் நடைமுறைப்படுத்தப் படவில்லை. இறுதியாக இந்த அனைத்து ஆணைக்குழுக்களின் முன்மொழிவுகளையும் ஆராய்வதற்காக இன்னுமொரு ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. அதன் முன்மொழிவுகளும் உள்ளன. இவை எவற்றையும் நடைமுறைப் படுத்தவில்லை. இவை அரசாங்கத்தின் ஆணைக்குழுக்களாகும். இவற்றின் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தாது. தற்போது இன்னுமொரு நல்லிணக்கத்திற்கான செயலணி தொடர்பில் பிரேரிக்கப்பட்டுள்ளது. அது எமது மக்கள் மத்தியில் எந்தவிதமான நம்பிக்கையையும் ஏற்படுத்தாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜேவிபியின் கூற்று நீதிமன்றத்தை அவமதிப்பதாக எம்பிக்கள் ஆவேசம்

## உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்; சபையில் நீதி அமைச்சரிடம் வலியுறுத்து

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜேவிபியினர் மக்கள் மத்தியில் வெளியிடும் கருத்துக்கள் நீதிமன்றத்தை அவமதிப்பதாக உள்ளதாகவும், இது தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சபையில் நேற்று ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவை கேட்டுக் கொண்டனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாடுகளை நாட்டு மக்கள் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும் என்றும் அக்கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர், எதிர்காலத்தில் அமையும் ஜேவிபி அரசாங்கத்தில் நீதிமன்றத்தின் அதிகாரத்தை செயற்படுத்துவதை தமது உறுப்பினர்களுக்கு வழங்குவதாக குறிப்பிட்டுள்ளார் என்பதையும் அவர்கள் சபையில் சுட்டிக்காட்டினர்.



நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது.1971,1988,1989,2022ஆகிய காலப்பகுதிகளில் மக்கள் விடுதலை முன்னணி செயற்பட்ட விதம் நினைவுக்கு வருகிறது என்றும் காட்டுமிராண்டித்தனமாக அரசாங்கத்தின் அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிக்கும் இவர்களுக்கு, அதிகாரத்தை வழங்குவதா என்பதனை நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பொலிஸ் மற்றும் நீதிமன்றத்தின் அதிகாரத்தை தமது உறுப்பினர்களுக்கு வழங்குவதாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் லால்காந்த குறிப்பிடுவதை அந்தக் கட்சியின் எம்.பி.ஹரிணி அமரசூரிய ஏற்றுக்கொள்வாரா? என அவர் சபையில் கேள்வி எழுப்பினார்.

இதன்போது இதற்கு பதிலளித்த ஜே .வி.பி யின் ஹரிணி அமரசூரிய எம்.பி, நீதிமன்றத்தின் அதிகாரத்தை செயற்படுத்துவதை, மக்கள் விடுதலை முன்னணிக்கும் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கும் வழங்குவதாக ஒரு போதும் எமது கட்சியின் உறுப்பினர் குறிப்பிடவில்லை என்று தெளிவுபடுத்தினார்.

இதன்போது அவ்வாறு "லால்காந்த குறிப்பிட்டார், லால் காந்த குறிப்பிட்டார்" என, பல தடவைகள் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கூச்சலிட்டனர். தொடர்ந்தும் சபையில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க;

ஹரிணி அமரசூரிய போன்ற படித்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், மக்கள் விடுதலை முன்னணி போன்ற காட்டுமிராண்டித்தனமான கட்சியின் மேடையில் தனது கொள்கையை மாற்றிக் கொண்டது கவலைக்குரியது. அவர் தவறான பக்கம் சென்றுவிட்டார் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச, 1988,1989 காலப்பகுதிகளில் 27 நீதிமன்றக்கட்டிடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. நுகேகொட,கல்கிசை ஹோமாகம,ஆகிய நீதிமன்றங்களின் மீது, மிக மோசமான தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஹோமாகம நீதிமன்றத்தின் நீதிபதியின் கறுப்பு மேலங்கி பலவந்தமாக கழற்றப்பட்டு மாட்டுக்கு அணிவிக்கப்பட்டு, அம்மாடு வீதியில் விரட்டப்பட்டது.மக்கள் மத்தியில் இன்றும் அந்த அச்சம் காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இதன்போது நீதிமன்றம் மற்றும் பொலிஸ் அதிகாரத்தை சாதாரண மக்களுக்கு வழங்குவதனை ஹரிணி அமரசூரிய எம்.பி. ஏற்றுக்கொள்வாரா என அரச மற்றும் எதிரணி எம்.பி.க்கள் கேள்வியெழுப்பினர்.

இதன்போது மீண்டும் எழுந்த ஹரிணி அமரசூரிய எம்.பி. ,நீதிமன்றத்தின் அதிகாரத்தை கட்சியின் உறுப்பினர்களுக்கு வழங்குவதனை நான், ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை என்றார்.

தொடர்ந்தும் சபையில் உரையாற்றிய செஹான் சேமசிங்க, மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் குறிப்பிட்ட குரல் பதிவு என்னிடம் உள்ளது. அதனை ஒலிபரப்ப அனுமதி வழங்குங்கள் என சபைக்கு தலைமைதாங்கிய உறுப்பினரிடம் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த சபைக்கு தலைமைதாங்கிய கிங்க்ஸ் நெல்சன் எம்.பி. அனைவரிடமும் குரல் பதிவு உள்ளது. அனைவரும் ஒலிபரப்பு செய்தால் அது பிரச்சினையாகும். அத்துடன் வெளிநபர்களின் குரல்களை சபையில் ஒலிபரப்ப முடியாது என்றார்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான ஹர்ஷண ராஜகருணா, மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் லால் காந்த குறிப்பிட்டதாக கூறும் குரல் பதிவை, சபையில் ஒலிபரப்பு செய்து சட்டத்தை தனிநபர் ஒருவர் செயற்படுத்தும்போது அதன் விளைவு பாரதூரமாக அமையும். ஆகவே இவரின் கருத்து எமக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதால் இதனை அலட்சியப்படுத்த முடியாது .எனவே இது குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டுமென நீதி அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

இதன்போது நீதிமன்றத்தின் அதிகாரத்தை கட்சியின் உறுப்பினர்களுக்கு வழங்குவதாக குறிப்பிடுவது நீதிமன்றத்தை அவமதிப்பதாக அமையும். ஆகவே இவ்விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஆளும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் நீதியமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

### வீதி அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளரின்... (03ஆம் பக்கத் தொடர்)

நெடுஞ்சாலையை தரத்துடன் நிர்மாணித்து பயணத்துக்கு பாதுகாப்பானதாக முன்னெடுப்பது தொடர்பாக கண்காணிப்பு ஏற்பாடுகள் உறுதி செய்யப்படும். இந்த நெடுஞ்சாலைப் பகுதி தற்போது புனரமைக்கப்பட்டு வருவதால், இதனால் ஏற்படும் நிதி இழப்பை நெடுஞ்சாலை கட்டுமான ஒப்பந்ததாரரே ஏற்க வேண்டும் என்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் நாயகம் விடுத்துள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாம்பும் கீரியும் போல எடப்பாடி_ அண்ணாமலை!



எடப்பாடி ப ழனிசாமியும் அண்ணாமலையு ம் பாம்பும் கீரியும் போல இ ருக்கிறார்கள். அண்ணாமலை வெற்றிபெறக் கூடாது ? கட்டுப்பணம் போக வேண்டும் என்று எடப்பாடி பழனிச்சாமி விரும்புகிறார், இது தொடர்பாக நிர்வாகிகளுக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து தீவிரமாக எடப்பாடி பழனிசாமி விசாரித்து வருகிறாராம்.

அண்ணாமலை ஜெயிக்கக் கூடாது? கட்டுப்பணம் இழக்க வேண்டும் என்று எடப்பாடி பழனிச்சாமி மட்டுமன்றி, இதே சிந்தனையில்தான் தி.மு.க தலைமையும் இருக்கிறது. அதாவது, ஸ்டாலினும் சரி, எடப்பாடியும் சரி, கோவையில் தி.மு.க வெற்றி பெற வேண்டும் அல்லது அ.தி.மு.க வெற்றிபெற வேண்டும். அண்ணாமலை ஜெயிக்கக்கூடாது என்கிற எதிர்பார்ப்பில் இருக்கிறார்கள்.

ஆனால், அதிமுகவில் சிலரின் உள்குத்து காரணமாக, பா.ஜ.க இரண்டாவது இடத்துக்கு வருவதாக கிடைத்த தகவலால்தான் எடப்பாடி கோபத்தில் உள்ளதாக கூறுகிறார்கள் விபரமறிந்த அதிமுகவினர்.

# ரேவண்ணா பாலியல் குற்றச்சாட்டு விவகாரம்; குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை அவசியம்!

## காங்கிரஸ் ஆட்சியில் நடந்த குற்றங்களை தற்போது ஏன் வெளியிடுகிறார்கள் என வினவுகிறார் பிரதமர் மோடி

கர்நாடகாவில் முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் பேரனும், பா.ஜ.க கூட்டணியில் அங்கம் வகிக்கும் மதசார்பற்ற ஜனதா தளம் (JDS) கட்சியின் வேட்பாளருமான ஹாசன் தொகுதி எம்.பி பிரஜ்வல் ரேவண்ணா தொடர்புடைய 3,000 பாலியல் வீடியோக்கள் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு வெளியாகின.

இந்த விவகாரத்தை கர்நாடக அரசு சிறப்பு விசாரணைக் குழு அமைத்து விசாரித்துவர, நாளும் பல பெண்கள் பிரஜ்வல் ரேவண்ணாவால் பாலியல் வன்கொடுமைக்குள்ளானதாகப் புகாரளித்து வருகின்றனர். பிரஜ்வல் ரேவண்ணா மட்டுமல்லாது அவரின் தந்தையும் முன்னாள் மாநில அமைச்சருமான ரேவண்ணா மீதும் பாலியல் வன்கொடுமை புகார்கள் வந்தவண்ணம் இருக்கின்றன.

இதில், பாலியல் புகாரளித்த பெண் கடத்தப்பட்ட வழக்கில் ரேவண்ணா கடந்த வாரம் கைதுசெய்யப்பட்டார். அதோடு, பிரஜ்வல் ரேவண்ணா வெளிநாட்டுக்கு தப்பியோடியிருப்பதால் அவரை கைதுசெய்து மீட்டுவர மத்திய அரசை மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இன்னொருபக்கம், பிரஜ்வல் ரேவண்ணா விவகாரம் தொடர்பாக பா.ஜ.க நிர்வாகியொருவர் ஓராண்டு முன்பே கட்சித் தலைமையிடம் தெரிவித்ததாகத் தகவல் வெளியாக, இது மாநில அரசின்



சட்டம் ஒழுங்கு பிரச்சினை என பா.ஜ.க ஒதுங்கியது. இந்த நிலையில், பிரஜ்வல் ரேவண்ணா விவகாரம் தன்னுடைய பிரச்சினை இல்லையென்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்திருக்கிறார்.

தனியார் ஊடகத்துடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பிரஜ்வல் ரேவண்ணா விவகாரம் குறித்து பேசிய மோடி, "வெளியான ஆயிரக்கணக்கான வீடியோக்கள், ஜே.டி.எஸ் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் நடந்த சம்பவம் என்பதை உணர்த்துகின்றன. காங்கிரஸ்காரர்கள் தங்களுடைய ஆட்சிக் காலத்தில் இந்த வீடியோக்களை சேகரித்து, தேர்தல் சமயத்தில் குறிப்பிட்ட சமூகத்தினரின் வாக்குகளைப் பெறுவதற்கு வெளியிட்டிருக்கின்றனர். அதுவும், பிரஜ்வல் ரேவண்ணா வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட பிறகு இந்த வீடியோக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

மாநில அரசுக்கு இதுபற்றி தகவல் தெரிந்திருந்தால் விமான நிலையத்தில் கண்காணிப்பு செய்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் எதையுமே செய்யவில்லை. மத்திய அரசுக்கும் தெரிவிக்கப்படவில்லை. இதன் அர்த்தம் என்னவென்றால், இது முழுக்க முழுக்க ஒரு அரசியல் விளையாட்டு. இந்த வீடியோக்கள் அவர்களின் கூட்டணி ஆட்சி நடைபெற்ற சமயத்தில் எடுக்கப்பட்டவை என்று



அவர்களுக்கே தெரியும். இது என்னுடைய பிரச்சினை இல்லை" என்று கூறியுள்ளார்.

ஆனால், எந்தக் குற்றவாளியும் தப்பக் கூடாது. அதுதான் இப்போது என்னுடைய பிரச்சினை. இதுபோன்ற விளையாட்டுகள் நாட்டில் நிறுத்தப்பட வேண்டும். பா.ஜ.க மற்றும் அரசியல் சாசனத்தை பொறுத்தவரை, இத்தகைய நபர்களுக்கு எதிராகத் துளியும் சகிப்புத் தன்மை இருக்கக் கூடாது. அதுவே என்னுடைய கருத்தும் ஆகும். அனைத்து சட்ட வாய்ப்புகளையும் பயன்படுத்தி கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்" என்று கூறினார் பிரதமர் மோடி.

கர்நாடகாவில் 2018 இல் நடந்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பின் ஜே.டி.எஸ் கட்சியுடன் கூட்டணியாட்சி அமைத்த காங்கிரஸ், முதல்வர் பதவியை குமாரசாமிக்கு விட்டுக்கொடுத்து. பின்னர், 2019 இல் நடந்த மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு இரு கட்சிகளும் கூட்டணியை முறித்துக் கொண்டதால்,மாநிலத்தில்ஆட்சிக்கவிழ்ப்பு ஏற்படவே பா.ஜ.க ஆட்சியமைத்தது. அதன் பின்னர், மீதமிருந்த ஆட்சிக்காலத்தை பா.ஜ.க முழுமையாக நிறைவு செய்தது.

# நீரிழிவு, இரத்த அழுத்தம் வியாதியேதும் இல்லாத எனக்கு மாரடைப்பு வந்ததற்கான காரணமென்ன?

## உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சியை உரியபடி கடைப்பிடிக்கும் பொலிவுட் நடிகர் ஷ்ரேயஸ் தல்படே கூறுகின்ற விளக்கம்

கொரோனா பெருந்தொற்றுக்குக் கண்டுபிடிக்கப்பட்ட கொவிஷீல்ட் தடுப்பூசி, தற்போது உலகம் முழுவதும் பேசுபொருளாக மாறியிருக்கிறது. இந்நிலையில், இந்திய பொலிவுட் நடிகர் ஒருவர், தனக்கு மாரடைப்பு ஏற்பட்டதற்கு கொவிட் தடுப்பூசி காரணமாக இருக்கலாம் என்று கூறியிருப்பது பேசுபொருளாக மாறியிருக்கிறது. ஹிந்தி மற்றும் மராட்டிய மொழி படங்களில் நடித்து வருபவர் நடிகர் ஷ்ரேயஸ் தல்படே . 48 வயதாகும் இவருக்கு, கடந்த ஆண்டு படப்பிடிப்பில் இருந்தபோது மாரடைப்பு ஏற்பட்டது. மும்பையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, அஞ்சியோபிளாஸ்டி சிகிச்சை செய்யப்பட்டு இதயத்தில் ஸ்டென்ட் பொருத்தப்பட்டது.

தற்போது நலமுடன் இருக்கும் ஷ்ரேயஸ் சமீபத்தில் அளித்த நேர்காணல் ஒன்றில், தனக்கு மாரடைப்பு ஏற்பட்டதற்கும் கொவிட் தடுப்பூசிக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில், "என் உடல் நலனைப் பாதுகாக்க நான் உடற்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு போன்ற அனைத்தையும் மேற்கோண்டும், மாரடைப்பு ஏற்பட்டதை எதிர்ப்பார்க்கவில்லை. சமீப காலமாக விளையாடும்போதும், உடற்பயிற்சி செய்யும்போதும் பலருக்கும் மாரடைப்பு ஏற்பட்டு இறப்பது நடந்து கொண்டு இருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

"தற்போது கொவிட் தடுப்பூசி அரிதான பக்கவிளைவுகளை ஏற்படுத்தலாம் என்று



சொல்லப்படுகிறது. நான் புகைப்பிடிப்பது இல்லை, தினசரி மது அருந்தும் பழக்கமும் இல்லை, அரிதாக எப்போதாவது மட்டுமே மது அருந்துவேன். என் உடலில் கொலஸ்ட்ரால் அதிகமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். அதற்கும் மருந்துகள் எடுத்து பிரச்சினையை கட்டுக்குள் வைத்திருக்கிறேன்.

எனக்கு நீரிழிவு நோயும் இல்லை, இரத்த அழுத்தப் பிரச்சினைகளும் இல்லை. அப்படி இருக்க மாரடைப்பு ஏற்பட என்ன காரணமாக இருக்க முடியும்? கொவிட் தடுப்பூசி இது போன்ற பக்கவிளைவுகளை ஏற்படுத்துகிறது என்ற கூற்றை என்னால் மறுக்க முடியவில்லை. அதில் உண்மை இருக்குமோ என்று தோன்றுகிறது. உண்மையில், முழுமையான டோஸ் தடுப்பூசியை எடுத்துக் கொண்ட பிறகு நான் மிகவும் சோர்வாக உணர்ந்தேன்.

கொவிட் தடுப்பூசியோ, கொரோனா



நோய்த்தொற்றோ இந்தப் பிரச்சினை ஏற்படக் காரணமாக இருந்திருக்கலாம். என்ன மருந்து எடுத்துக்கொள்கிறோம், அது நம் உடலில் என்ன செய்யும் என்றே தெரியாமல் மருந்து நிறுவனங்களை நம்பியே மருந்தை எடுத்துக்கொள்கிறோம். கொவிட்டுக்கு முன்னர் இப்படி ஒரு பிரச்சினையை நான் ஏதிர்கொண்டது இல்லை. இப்படி பக்கவிளைவுகள் ஏற்படும் என்று கேள்விப்பட்டதும் இல்லை" என்று தெரிவித்திருக்கிறார் நடிகர் ஷ்ரேயஸ் தல்படே.

# பாரதம்

## சமகால நடப்புகள்



இந்திய நாடாளுமன்றத் தேர்தலின் மூன்றாம் கட்ட வாக்களிப்பு நேற்று நடைபெற்றது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அமைச்சர் அமித்ஷா ஆகியோர் குஜராத் மாநிலத்திலுள்ள வாக்குச் சாவடியில் நேற்றுக்காலை வாக்களித்து விட்டுச் செல்லும் போது எடுக்கப்பட்ட படம்.




தமிழ், சிங்கள புத்தாண்டையொட்டி ஐ டி எம் என் சி இன்டர்நெஷனல் (IDMNC International) கல்வி நிறுவனம், அதன் தவிசாளர். கலாநிதி.வி. ஜனகன் தலைமையில் கொழும்பு பொலிஸ் பார்க் மைதானத்தில் "வசந்த உதயம் 2024" எனும் தொனிப்பொருளில் தமிழ், சிங்கள புத்தாண்டு விழாவைக் கொண்டாடியது. இவ்விழாவில், பிரித்தானிய எட்ஹாட் கல்வி நிறுவனத்தின் முதன்மை கல்வியியலாளர் அலன் கிளர்க்கும் அவரது பாரியாரும் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டார்கள். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் கலாநிதி பிரதீப் மஹானாமஹேவ, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் ரோஷன் டயஸும் அவரது பாரியர் மேரி டி. டிக்மனும் இவ்விழாவில் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டார்கள். இவ்விழாவில், நிறுவனத்தின் பணிப்பாளரும் அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

## ஜனாதிபதி தேர்தல் தவிர வேறு...

இடம்பெற்றது. தயாசிறி ஜயசேகர எம்.பி கருத்தொன்றை சபையில் முன்வைத்தார். உள்ளூராட்சி சபைத் தேர்தல் கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அத்தேர்தலுக்கு பணம் வழங்க முடியாது என அரசாங்கம் தெரிவிக்கிறது.

ஆனால், அரசாங்கம் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் 2023.12.29 ஆம் திகதி சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதன் பிரிவு 8.3 இன் படி, குறித்த அபிவிருத்தித் திட்டங்களை ஜுலை 31க்குள் நிறைவு செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளது. ஒரு வருட வேலைத் திட்டத்தை ஏழு மாதங்களில் முடிக்குமாறு அதன் மூலம் கூறப்படுகிறது. இது ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்ட வேலைத்திட்டம் என்பது தெளிவாகிறது. இது அமைச்சர்களுக்குத் தேவையானதை செய்யும் செயற்பாடாகும். இது அரசியல் கட்சிகளுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகவும் இதுவுள்ளது. இவை அனைத்துக்குமான நிதி 3.4 பில்லியனாகும். உள்ளூராட்சித் தேர்தலை நடத்த அரசாங்கத்திடம் பணமில்லை என தெரிவித்தனர். இது முற்றிலும் தவறானது. இதை, நடைமுறைப்படுத்த வேண்டாம் என பிரதமரைக் கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுங்கள் என்றும் அவர் சபையில் பிரதமரிடம் கேட்டுக் கொண்டார். அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதற்கு பதிலளிக்கையில், அவர் என்ன நிதியைப் பற்றி பேசுகின்றார் என்று எனக்குத் தெரியவில்லை. அபிவிருத்திப் பணிகளையா நிறுத்தச் சொல்கிறீர்கள்? உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மாகாண சபைத் தேர்தலும் பிற்போடப்பட்டுள்ளது. ஆனால், அரசியலமைப்பின் பிரகாரமே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலைத் தவிர வேறு எந்தத் தேர்தலும் இந்த வருடத்தில் நடைபெறாது. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக எம்.பி.க்களுக்கென, எந்த நிதியையும் ஒதுக்க வில்லை. உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்தை வற்புறுத்துவதன் மூலம் எதிர்க்கட்சிகள் இந்த தருணத்தில் அரசாங்கத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் தவறான கருத்தை நாட்டுக்கு தெரிவிக்க முயல்கின்றன. அவ்வாறான தவறான எண்ணத்தை ஏற்படுத்த வேண்டாம். இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

## கட்டணம் செலுத்தாத 10 இலட்சம்...

துண்டிக்கப்பட்ட இணைப்புக்களை மீளப் பெறுவதற்காக அறவிடப்படும் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி எம்.பி கெவிந்து குமாரதுங்க எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் சபையில் மேலும் தெரிவித்த அமைச்சர், மின்கட்டணத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. கட்டணத்தை மேலும் குறைக்க முடியுமா என்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. முன்வைக்கப்பட்டுள்ள யோசனை தொடர்பில் இலங்கை பொதுபயன்பாட்டு ஆணைக்குழுவுடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. மின்கட்டணத்தை செலுத்தாத தரப்பினரை இலக்கு வைத்து அவர்களின், மின் விநியோகத்தை துண்டிக்குமாறு எவருக்கும் அறிவுறுத்தப்படவில்லை.கட்டணம் செலுத்தாவிடின் மின்விநியோகம் துண்டிக்கப்படும். இது, நான், அமைச்சரான பின்னர் எடுத்த தீர்மானமல்ல. காலம் காலமாகவே இத்தீர்மானம் நடைமுறையில் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## விவசாயத்துறை நவீனமயப்படுத்தலுக்கு...

கொண்டுள்ளது. இலங்கையில் உள்ள பல விவசாய நிலங்கள் தற்போது சிறிய அளவில் உள்ளன. எனவே, குறைந்த விளைச்சல் மற்றும் குறைந்த வருமானம் ஆகியவற்றால் இவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இதன் காரணமாக 100 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் 15,000 விவசாயிகளுக்குத் தேவையான ஒத்துழைப்பையும் தொழில்நுட்ப அறிவையும் வழங்கும் முன்னோடித் திட்டம் அனுராதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ளடங்கியுள்ள விவசாயம் மற்றும் காடுவளர்ப்புத் திட்டங்கள், காலநிலை பாதிப்பு மன்றத்தின் (CVF) ஆதரவுடன் இலங்கையால் வரையப்பட்ட இலங்கையின் காலநிலை தாங்கும் திட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

நிலையான விவசாயத்தின் மூலம் வலுவான ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்க முடியும் என காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்த்தன ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்த்தன,

"நவீன விவசாயத்தை உருவாக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வேலைத்திட்டத்தின் பிரகாரம், விவசாயத்திற்கான நவீன தொழில்நுட்பத்தை உருவாக்கும் வேலைத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க போர்த்துக்கேய நிறுவனம் ஒன்று முதலீடு செய்ய முன்வந்துள்ளது. இது சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு என்பது குறிப்பிடத்தக்கது. இதற்காக அநுராதபுரம் மாவட்டத்தில் 15,000 குடும்பங்களும் 15,000 ஏக்கரும் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த முன்னோடித் திட்டத்தில் 15 குடும்பங்களும் பதினைந்து ஏக்கர்களும் இணைக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு குடும்பத்திற்கு சுமார் 6,000 அமெரிக்க டொலர்கள் செலவை முதலீட்டு நிறுவனம் ஏற்க ஒப்புக்கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி அடுத்த 25 ஆண்டுகளுக்கு விவசாயத்துக்கு தொழில்நுட்ப உதவி வழங்கப்படும்.

விவசாயம் தொடர்பான நவீன தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குவதும் இத்திட்டத்தின் மூலம் செய்யப்படுகிறது. மேலும், விவசாயிகளுக்கு பிரச்சினையாக இருந்த அவர்களின் விளைச்சலுக்கு சந்தையை உருவாக்க முடியும். இந்த திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை கொள்வனவு செய்ய முதலீட்டு நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது. தற்போது மிளகாய், தக்காளி, தர்பூசணிபயிர்ச்செய்கையில் கவனம் செலுத்தி வருகின்றது. எதிர்காலத்தில், ஏனைய பயிர்களின் உற்பத்தியில் கவனம் செலுத்தப்படவுள்ளது. இந்த முன்னோடித் திட்டம் வெற்றியடைந்ததையடுத்து, ஏனைய மாவட்டங்களுக்கும் நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இந்த நவீன விவசாயத்தின் மூலம் ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அதே சமயம் விவசாயிகளின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும் முடியும்" என்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

விவசாயத்தை நவீனமயமாக்குவது தொடர்பான மிகவும் இலட்சியமான மற்றும் பயனுள்ள திட்டத்தை இலங்கை கொண்டுள்ளது என்று இங்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் மாலைத்தீவு ஜனாதிபதி, காலநிலை இடர் மன்றத்தின் (CVF) பொதுச் செயலாளர் மொஹமட் நஷிட் தெரிவித்தார்.

இலங்கையின் காலநிலை சுபீட்சத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

## நுண்கடன் நிறுவனங்களால்...

செயற்பாடுகளுக்கு எதிராக கடுமையான சட்டம் நடைமுறைப்படுத்தப்ப டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். ஆதிவாசிகளைக்கூட இந்த நுண்கடன் நிறுவனங்கள் விட்டு வைக்கவில்லை என்றும் சபையில் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் மற்றும் வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடல் (விசேட ஏற்பாடுகள்)திருத்தச் சட்டமூலம் (பராட்டே) என்பன மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்:

நடைமுறையில் உருவாகியுள்ள பிரச்சினைகளுக்கு பாரம்பரியமான சட்டங்கள் மூலம் தீர்வு காண முடியாதுள்ளது. பிரிவிடல் சட்டத்தின் ஏற்பாடுகள் நாட்டின் தற்போதைய சூழ்நிலைக்கு பொருத்தமற்றதாகும். இதனைக் கவனத்திற்கொண்டே இச்சட்டத்தில் திருத்தம் செய்யப்படவுள்ளது.

வங்கிகளால் வழங்கப்பட்டுள்ள கடன்களை அறவிடல் திருத்தச் சட்டமூலம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.நீதிமன்ற அனுமதி யின்றி சொத்துக்களை ஏலமிடும் உரிமை வங்கிகளுக்கு ஆரம்ப காலத்தில் வழங்கப்படவில்லை.

1990 இல், முன்னெடுக்கப்பட்ட திருத்தத்தைத் தொடர்ந்து அதிகாரம் வங்கிகளின் நிறைவேற்று சபைக்கு வழங்கப்பட்டது. இலங்கை வங்கி,மக்கள் வங்கி உள்ளிட்ட அரச வங்கிகள் கடன்கள் வழங்குவதற்கு மக்களிடமிருந்து பெற்ற சொத்துக்களை ஏலம் விடும் போது நீதிமன்ற செயற்பாடுகளை முன்னெடுத்தன. பின்னரான காலத்தில் நிதிச் சட்டம் திருத்தம் செய்யப்பட்டு வங்கி உருவாக்கம் விரிவாக்கப்பட்டது.இதன் பின்னர் சொத்துக்களை ஏலம் விடும் உரிமத்தை தனியார் வங்கிகள் முறையற்ற வகையில் செயற்படுத்தின. 2020 பொருளாதார பாதிப்புக்குப் பின்னர், சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்களின் சொத்துக்களை ஏலம் விடும் சூழல் ஏற்பட்டது. இவ்வாறான பின்னணியில் இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியது.தொழில் முயற்சியாளர்கள் இருந்தால்தான் வங்கி கட்டமைப்பு நிலைத்திருக்கும். இதை வங்கிகள் உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

வாடிக்கையாளர்களை முழுமையாக நெருக்கடிக்குள்ளாக்கி, அவர்களின் சொத்துக்களை சுவீகரித்து சொந்தமாக்குவதை விடுத்து தொழில் முயற்சியாளர்கள் மீண்டெழுதற்கு வங்கிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அமுல்படுத்தப்பட்ட பராட்டே அல்லது வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் சட்டத்தை எதிர்வரும் டிசம்பர் மாதம் 15 வரை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டது.

டிசம்பருக்குப் பின்னர் தொழில் முயற்சியாளர்கள் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு விடுவார்களா என்பதை உறுதியாக குறிப்பிட முடியாது. அந்த வகையில் வங்கிக் கட்டமைப்பு தொழில் முயற்சியாளர்களுடன் இணக்கமாக செயற்பட வேண்டியது முக்கியம். நாட்டில் நிதி விவகாரம் மற்றும் பல்வேறு பட்ட பிரச்சினைகள் உருவாவதற்கு மத்திய வங்கியே பொறுப்புக் கூற வேண்டும்.

## டுபாயில் கைதான 'மன்னா ரமேஷ்'...

அண்மையில் டுபாயில் கைது செய்யப்பட்ட மன்னா ரமேஷை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட பொலிஸ் குழு, நேற்று (07) காலை டுபாயிலிருந்து நாட்டுக்கு அழைத்து வந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார். சர்வதேச பொலிஸாரால் சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 'மன்னா ரமேஷ்' அண்மையில் துபாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கொலை, போதைப்பொருள் கடத்தல், கப்பம் பெறுதல் உள்ளிட்ட பல குற்றங்கள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளது.

அவிசாவளை பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர்களிடம் கப்பம் பெறும் சம்பவங்கள் தொடர்பில் சந்தேக நபருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அண்மைக் காலமாக சில கொலைகள் இவரின் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்றுள்ளமையும் தெரியவந்துள்ளது. நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட மன்னா ரமேஷ் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஊழியர் சேமலாப நிதி சட்டத் திருத்தம்;...

சுமந்திரன் எம்.பி: நாட்டின் பாரிய நிதியமாக ஊழியர் சேமலாப நிதியம் செயற்படுகிறது. அதில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் வெளிப்படைத் தன்மையுடன் இருப்பது அவசியம். இதன்படி இத்திருத்தம் ஊடாக மாதாந்தம் நடக்கும் அனைத்து பரிவர்த்தனைகளும் வெளிப்படைத் தன்மையானதாக இருக்கும்.

## உரிய அதிகாரிகளை கோப் மற்றும்...

பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபாநாயகர் இதற்கான பணிப்புரையை வழங்கினால், அதனை மேற்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் இதன் போது குறிப்பிட்டார். பாராளுமன்றத்தில் நேற்று பேராசிரியர் சரித்த ஹேரத் எம்பி கூற்றை முன்வைத்து உரையாற் றினார். இங்கு பேசிய அவர்: மத்திய வங்கிக்கும் அரசாங்கத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இந்த நிலைப்பாட்டிலே மத்திய வங்கி செயற்படுகிறது. இந்த செயற்பாடுகள் பாரதூரமானவை, எனவே, மத்திய வங்கி அதிகாரிகளை பாராளுமன்றத்திற்கு அழைத்து விசாரணை நடத்த வேண்டும் என்றார். இதற்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் சபையில் நேற்று கருத்து தெரிவித்த எதிர்க்கட்சியின் பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்பி: புதிய அறிக்கையின் படி மத்திய வங்கி கடந்த வருடத்தில் ஆயிரம் மில்லியன் ரூபா நட்டமீட்டியுள்ளது. எனினும், அங்குள்ளோருக்கு 70 வீத சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. இது எந்த வகையில் நியாயமாகும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

இவ்விடயம் தொடர்பில் விமல் வீரவன்ச எம் பி சபையில் தெரிவிக்கையில், சம்பள அதிகரிப்பு ஒரு புறம் இருக்க, மத்திய வங்கி ஒரு அரசாங்க நிறுவனமல்ல, அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டு செயற்பட வேண்டியதில்லை என்ற சிந்தனையுடன் செயற்படுகிறது. இது பாரதூரமான விடயமாகும். இது தொடர்பில் முதலில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். இந்த சிந்தனையிலிருந்து மத்திய வங்கியை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியமாகும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இது தொடர்பில் சபையில் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித்த ஹேரத், அரசாங்கம் என்றால் என்ன என்பது தொடர்பில் மத்திய வங்கியின் சட்டத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மத்திய வங்கி என்பது அரசாங்கத்தின் கீழ் வரும் நிறுவனம் என்பது அதில்,தெளிவாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்படி மூவரின் கேள்விகளுக்கும் பதில ளித்த சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, மூன்று எம்பிக்களும் சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த முடியும். நிதியமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மத்திய வங்கி கையளித்துள்ள அறிக்கையை, கோப் குழுவுக்கு கொண்டு வரவும் முடியும். ஏனென்றால், மத்திய வங்கி கோப் குழுவுக்கு கட்டுப்பட்ட நிறுவனமாகும். மறுபுறம் அதனை நிதி குழுவுக்கு அழைக்கவும் முடியும். சபாநாயகர் உரிய பணிப்புரை விடுத்தால் அதனை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு...

சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு 24 மாதங்களுக்கு 6,000 ரூபா வழங்கப்படும்.

இது தொடர்பிலான மேலதிக தகவல்களை www.facebook.com/president.fund உத்தியோகபூர்வ Face Book பக்கம் மற்றும் www.presidentsfund.gov.lk இணையத்தளம் , கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணைத்தளமான www.moe.gov.lk, தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல்கள் ஆணைக்குழுவின் இணைய பக்கத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

அத்தோடு, 2024 பெப்ரவரி 07 ஆம் திகதி ஜனாதிபதியால் பாராளுமன்றத்தில் முன்மொழியப்பட்ட கொள்கைப் பிரகடன உரைக்கு அமைவாக, 2024 ஆம் ஆண்டுக்குள் பாடசாலை மாணவர்களுக்கான பல புலைமைப் பரிசில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பொருளாதார சிக்கல்களை எதிர்கொள்ளும் 2022/2023 க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்து, உயர் தரத்திற்கு தெரிவான மாணவர்கள் உயர்தர பரீட்சைக்கு தோற்றும் வரையில் 6,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

தற்போதும் இந்த புலமைப்பரிசில் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட 6,000 மாணவர்களின் விவரம் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ Face Book பக்கத்திலும் இணையத் தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது. அவர்களுக்காக 2024 ஆம் ஆண்டிலிருந்து புலமைப் பரிசுத் தொகை நிலுவை தொகையுடன் சேர்த்து வழங்கப்படவுள்ளது.

அதேநேரம் கல்விச் செயற்பாடுகளுக்காக பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் 01 11 தரம் வரையிலான 1,00,000 பிள்ளைகளுக்கான ஜனாதிபதி நிதியத்தின் புலமைபரிசில் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியிலிருக்கு 10,126 பாடசாலைகளை உள்வாங்கி ஒரு பாடசாலைக்கு குறைந்த பட்சமாக 04 புலமைப் பரிசில்களும் அதிகட்சமாக 04 புலமைப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. 1,00,000 மாணவர்களுக்கு மாதாந்தம் 3,000 ரூபா என்ற அடிப்படையில் வழங்குவதற்கான வேலைத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக தற்போதும் விண்ணப்பதாரர்களின் தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

விண்ணப்பதாரர்களின் தகவல்கள் வலயக் கல்வி அலுவலங்களூடாக ஜனாதிபதி நிதியத்துக்கு அனுப்பப்பட்டு வரும் நிலையில், தரவுகள் முழுமையாக கணினி மயப்படுத்தப்பட்ட பின்னர் மாணவர்களுக்காக திறக்கப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு புலமை பரிசுத் தொகை அனுப்பி வைக்கப்பட்டு பின்னர் (SMS) ஊடாக அறிவிக்கப்படும்.

## புதிதாக 3,000 தாதியர்களை...

பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கல்வி பொதுத் தராதர உயர்தரத்தில் கணிதம், உயிரியல், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் தோற்றியுள்ள மாணவர்கள் தாதியர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்கான வர்த்தமானி அறிவித்தல் கடந்த வருடம் செப்டம்பர் 15 இல், வெளியிடப்பட்டுள்ளது. தற்போது 3,100 பேர் இதற்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அந்த வகையில் மேலும் 3,863 பேர் இந்த சேவையில் இணைத்துக் கொள்வதற்காக காத்திருப்பு பட்டியலில் உள்ளனர். இவ்விடயத்தையும் எதிர்க்கட்சித் தலைவர் தனது கேள்வியில் குறிப்பிட்டார். இதற்குப் பதிலளிக்கையிலேயே 3,000 தாதியர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை விரைவில் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார். அத்துடன் நாட்டில் 45,000 தாதியர்கள் சேவையில் உள்ளதாகவும் தற்போது சுமார் 1,000 பேருக்கான வெற்றிடமே நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டார். எதிர்க்கட்சித் தலைவர் கூறுவது போல் 45 ஆயிரம் வெற்றிடங்கள் காணப்படவில்லை. 45 ஆயிரம் பேர் தற்போது சேவையில் உள்ளனர் என்பதே உண்மை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள்

(08.05.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
அவசியமான காரியங்களை அதிக முயற்சியோடு செயற்பட்டு வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தில் சிலருக்கு இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

**ரிஷபம்:**
உங்கள் முயற்சிகளில் முன்னேற்றம் தென்பட்டாலும் தடை தாமதங்கள் ஏற்படுவதை தவிர்க்க இயலாது. உத்தியோகத்தர்கள் தங்கள் பதிவேடுகளை பாதுகாப்பாக வைத்து கொள்வது அவசியம்.

**மிதுனம்:**
தடைகள் இருந்தாலும் உங்கள் சாமர்த்தியத்தால் அதனை வென்று விடுவீர்கள். சிலருக்கு புதிய பதவி, சம்பள உயர்வு, விரும்பிய விட மாற்றம் கிடைக்க நேரலாம்.

**கடகம்:**
தேவையற்ற பிரச்சனைகள் தோண்டி வரும். வழக்கமான பொறுமையால் அதை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தர்கள் சிலருக்கு விரும்பிய இடம் மாற்றம் கிடைக்கலாம்.

**சிம்மம்:**
எதிர்பார்த்த பண வரவு தாமதமாகலாம். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சிலருக்கு வெளியூர் மாற்றம், பதவி உயர்வு கிடைக்கலாம்.

**கன்னி:**
ஒப்பந்தங்களில் கையெழுத்து இடுவதை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும்.

**துலாம்:**
புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்து விடுவதை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு, விரும்பிய இட மாற்றம் ஏற்படும்.

**விருச்சிகம்:**
உற்சாகத்தோடு பணிகளில் ஈடுபட்டு பல காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தர்கள் அவசர வேலை ஒன்றை சிறப்பாக செய்து உயர் அதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

**தனுசு:**
செய்யும் காரியங்களில் சிறு சிறு தொல்லைகள் ஏற்படலாம். அவற்றை உங்கள் திறமையால் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தர்கள் பணிகளில் கவனமாக இருந்து மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

**மகரம்:**
திட்டமிட்ட காரியங்களில் தீவிர முயற்சியுடன் வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தில் சிலருக்கு விரும்பிய இட மாற்றம், சம்பள உயர்வு கிடைக்கக்கூடும்.

**கும்பம்:**
நண்பர்களின் உதவியுடன் முன்னேற்றம் காண்பீர்கள். உத்தியோகத்தர்கள் பணியில் கவனமாக இல்லாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோப பார்வைக்கு இலக்காக நேரிடும் .

**மீனம்:**
எதையும் சிந்தித்து முடிவெடுங்கள். உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளில் கவனமாக இல்லாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோப பார்வைக்கு இலக்காக நேரிடும்.

## ஏப்ரல் மாதத்தில் 9.6...

மத்திய வங்ககி தெரிவித்துள்ளது. அதற்கிணங்க, கடந்த 2024 மார்ச் மாதத்தில் 4. 96 பில்லியன் டொலராக காணப்பட்ட நாட்டின் உத்தியோகபூர்வ நிதி கையிருப்பு, ஏப்ரல் மாதத்தில் 5.43 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அதேவேளை, நிதி பரிமாற்ற இணக்கப்பாட்டின் கீழ், சீன அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள 1.4 பில்லியன் டொலர் நிதியும் இத்தொகையில் உள்ளடங்குவதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## குற்றவியல் நடவடிக்கை...

இதற்கமைய குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் 2024 ஆம் ஆண்டு 25ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமாக கடந்த (03) முதல் நடைமுறைக்கு வருகிறது.

## மன்னார், பூநகரி காற்றாலை மின் உற்பத்தி...

இக்குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் உத்தேசக் கருத்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் மின்சார அலகொன்று, கிலோ வோட் (மணிக்கு) 8.26 அமெரிக்க டொலர் பெறுமதி (உண்மையான வெளிநாட்டு செலாவணி சரி விகிதத்துக்கமைய இலங்கை ரூபாயில் செலுத்துவதற்கு) இறுதிக் கட்டணமாக அங்கீகரிப்படவுள்ளது.

இருபது வருடங்களுக்கு மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கான விலை மனுக்கோரலை M/s Adani Green Energy SL Limited க்கு வழங்குவதற்கும், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## சீத்தாஎலிய மஹா கும்பாபிஷேகம்...

எதிர்வரும் 18 ஆம் திகதி வாழும் கலை பயிற்சியின் நிறுவனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி இலங்கைக்கு வருகை தருவதாகவும் சீதைம்மன் ஆலய அறங்காவலர் சபை தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இது தொடர்பாக அவர் கருத்து தெரிவித்தார்.

ஆலயத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களுடன் கடந்த மாதம் பெங்களூர் நகருக்கு விஜயம் செய்து வாழும் கலை பயிற்சியின் நிறுவனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜியை ஆசிரமத்தில் சந்தித்து எங்களுடைய ஆலய கும்பாபிஷேக நிக்ழவில் கலந்து கொள்ளுமாறு அழைப்பிதழ் வழங்கினோம்.

குருஜி அழைப்பிதழை பெற்றுக் கொண்டு தன்னுடைய வருகையை மிகவிரைவில் உறுதிப்படுத்துவதாக எங்களிடம் தெரிவித்திருந்தார்.

அதற்கமைய அவர் தற்பொழுது தான் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்வதை உறுதி செய்துள்ளார்.எனவே நாம் அவரை வரவேற்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகின்றோம் என்றார்.

# இருதய நோயால் உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகரிப்பு

(பலாங்கொடை தினகரன் நிருபர்)



பலாங்கொடை பிரதேசத்தில் கடந்த மூன்று மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் மரண பரிசோதனைகளில் இருதய நோயால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பலாங்கொடை ஆதார வைத்தியசாலையின் திடீர் மரண பரிசோதகர் பத்மேன்திர விஜயதிலக தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில், கடந்த மூன்று மாதங்களில் 30-50 வயதுகளையுடையவர்களில் 70% வீதமானோர் இருதய நோயினால் உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

குறிப்பாக இளம் மற்றும் நடுத்தர வயதுகளையுடையவர்கள் இருதய நோயால் உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

30 வயதுக்கு மேற்பட்ட நபரொருவர் திடீரென வயிறு மற்றும் நெஞ்சு பகுதியில் எரிச்சல், மயக்கம் போன்ற நோய்அறிகுறிகள் தென்படும் சந்தர்ப்பத்தில் உடனடியாக வைத்தியரொருவரை சந்தித்து குருதி மற்றும் ஈ.சி.ஜி பரிசோதனையை மேற்கொள்ளுமாறு திடீர் மரண பரிசோதகர் ஆலோசனை வழங்கியுள்ளார்.




# முச்சக்கர வண்டி வீதியை விட்டு விலகி விபத்து; யுவதி பலி

பன்விலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹுலுகங்கை அரத்தன பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 21 வயதான யுவதியொருவர் உயிரிழந்தார்.

தெல்தெனிய ஆடைத்தொழிற்சாலையில் வேலையை முடித்து விட்டு முச்சக்கர வண்டியில் வீடு திரும்பிக் கொண்டிருக்கும்போதே இவர் விபத்துக்கு முகம்கொடுத்துள்ளார். முச்சக்கர வண்டி வீதியை விட்டு விலகி சுமார் 35 அடி பள்ளத்தில் வீழ்ந்ததில் முச்சக்கர வண்டியில் பயணித்த திருமணமாகாத யுவதி உயிரிழந்துள்ளார்.

மேலும் முச்சக்கர வண்டியில் பயணித்த இரு பெண்கள் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மடுல்கலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதேசமயம் முச்சக்கரவண்டி சாரதி காயமடைந்த நிலையில் தெல்தெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பன்விலை தவலந்தன்ன ஆகலை தோட்டத்தைச் சேர்ந்த நிலு என்றழைக்கப்படும் செல்வராஜ் சபியா (21) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக தெல்தெனிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தெல்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




மத்திய மாகாண வத்தேகம கல்வி வலயத்துக்குட்பட்ட தவலந்தன்ன நக்கிள்ஸ் தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி அதிபர் எம்.சிவகுமார் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட வத்தேகம கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி டபிள்யூ.எம்.டி.என்.குணரட்ண உரையாற்றினார். இங்கு வெற்றிபெற்ற வள்ளுவர் இல்லத்துக்கு வெற்றிக் கேடயத்தை வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

(படம்: புசல்லாவை தினகரன் நிருபர்)

# கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவு

தலவாக்கலை குறூப் நிருபர்



நுவரெலியா கல்வி வலயத்தின் கோட்டக் கல்வி பணிப்பாளரும் ஏறத்தாழ 40 வருடங்களுக்கு மேலாக கல்வித்துறையில் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக, கோட்டக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற பெரியசாமி அரியான் ஹரிசந்திரன் அகில இலங்கை ரீதியில் 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று கல்வி நிர்வாக தரத்திற்கு சேவை மூப்பு அடிப்படையில் நான்காவது இடத்தைப் பெற்றுள்ளார்,

இதில் முதல் மூன்று இடங்களை பெரும்பான்மை சமூகத்தினர் பெற்றுக்கொண்டுள்ளனர். சிறுபான்மையினர் சார்பாக தேசிய ரீதியில் முதலிடத்தை பெற்றுள்ளார். இவர் ஹோல்புறூக் பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். தனது ஆரம்பக் கல்வி மற்றும் இடைநிலைக் கல்வியை ஹோல்புறூக் தமிழ் மகா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்திலும் கற்றார். வெளிவாரி பட்டத்தாரியாக கண்டி பேராதனை பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை பூர்த்தி செய்த இவர் கொட்டகலை ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்து ஆசிரியராக 1984ஆம் ஆண்டு ஆசிரியர் சேவையில் இணைந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.




மாவனல்லை தனாகம அஹதிய்யா பாடசாலையின் கலாசார நிகழ்வுக்கான பரிசளிப்பு நிகழ்வும் , ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வும், மாவனல்லை இல்மா மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. பாடசாலை அதிபரும், ஆயிஷா சித்தீக்கா கல்லூரி விரிவுரையாளருமானஅஷ்சேக் எம்.எஸ்.எம்.சியாஸ் கபூரி தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் இஸட். ஏ.எம். பைஸல், கௌரவ அதிதிகளாக கேகாலை மாவட்ட அஹதிய்யா சம்மேளன தலைவர் எம்.ஜே.எம். அக்ரம் ஜுனைத், அதன் செயலாளர் லியா உர்ரஹ்மான் என பலரும் கலந்துகொண்டனர்.

# இந்திய கலாசார சங்க ஏற்பாட்டில் கிரிக்கட் சுற்றுப் போட்டி கொழும்பில்





(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கையில் உள்ள இந்திய கலாசார சங்கம் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயம் இணைந்து ஒழுங்கு செய்த முழுநாள் கிரிக்கட் போட்டி, கலாசார நிகழ்வுகள் கொழும்பு, பார்க் வீதியிலுள்ள கோல்ட் மைதானத்தில் (05) இந்திய உயர்ஸ்தானிகர் ஸ்ரீ சந்தோஷ் சா தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டியில் 10க்கும் மேற்பட்ட இந்திய கழகங்கள் கலந்துகொண்டதோடு இறுதிப்போட்டிக்கு வெற்றி பெற்ற அணியுடன் இலங்கையின் 96ஆம் ஆண்டு உலகக் கோப்பையை வென்ற அணியும் மோதியது.

இப்போட்டியில் அர்ஜுன ரனதுங்க மற்றும் அரவிந்த டி சில்வா, உபதலைவர், ருவான் சொய்சா, உபுல் சந்தன, ரவிந்திர புஸ்பக்குமார ஆகியோர்கள் கொண்ட அணி 110/1 என்ற ஓட்டத்தினைப் பெற்று வெற்றியீட்டியது. வெற்றிக்கிண்ணம் இந்திய உயர் ஸ்தானிகரால் அர்ஜுன ரனதுங்கவிடம் கையளிக்கப்பட்டது.



# சேனையூர் ஸ்ரீநாகம்மாள் கோயில் வருடாந்த வைகாசி பொங்கல்

அன்புவழிபுரம் தினகரன் நிருபர்



திருகோணமலையினுடைய மூதூர் கிழக்கின் கட்டைபறிச்சான் வடக்கிலுள்ள சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் கோயிலில் வருடாந்த வைகாசி பொங்கல் விழா எதிர்வரும் 19ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 8.00 மணி 52 நிமிட சுபவேளையில் சேனையூர் ஸ்ரீவருணகுல விநாயகர் கோயிலிலிருந்து பாரம்பரிய முறைப்படி மடைப்பெட்டி ஊர்வலமாக நாகம்மாள் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பக்திபூர்வமான கிரியைகளுடன் மடைப்பெட்டி பிரதமகுரு சிவஸ்ரீ அ.அரசரெத்தினத்தால் கையேற்கப்பட்டு பொங்கல் பெருவிழா ஆரம்பமாகும். இதன்போது நூல் கட்டுதல், பொங்கல் சாடி வைத்தல், பால்பழ பூஜை, சிவலிங்க நாகதம்பிரானுக்கு புனித மஞ்சள் நீர் வார்க்கும் நிகழ்வு நடைபெறும். இதன் பின்னர் விசேட தீபாராதனையுடன் பூஜை நடைபெறுமென, மேற்படி கோயில் பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

இந்நிலையில் அடியார்களின் நலன் கருதி மூதூரிலிருந்து நாகம்மாள் கோயில்வரை பேருந்து வசதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் வழமை போன்று கோயிலில் இந்த வருடமும் அன்னதானம் வழங்கப்படுமெனவும், கோயில் பரிபாலான சபையினர் மேலும் தெரிவித்தனர்.

**உதவி தேவை**

செனரத்வெல நித்துலேமட 79 இல் வசிக்கும் எம். புவனலோஜினி 15 வருடமாக லியூகேமியா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார், உங்களுடைய உதவிகள் தேவை,

**அழையுங்கள் : 077-3694836**

**இலங்கை வங்கி திகன 92340981**

# சிலாபம், முத்துப்பந்திய தீவின் சில பகுதிகள் கடலரிப்பு பாதிப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்



சிலாபம், முத்துப்பந்திய தீவின் கரையோர பகுதி கடுமையான கடலரிப்புக்கு உள்ளாகி வருகின்றது.

சில நாட்களாக கடல் சீற்றம் காரணமாகவே (05) முதல் குறித்த தீவுப் பகுதியின் கடல் இவ்வாறு கடுமையாக அரிக்கத் தொடங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் கரையோர அரிப்பைக் குறைக்க அங்கு அமைக்கப்பட்ட மிகப்பெரிய மணல் தடுப்பு உடைந்துள்ளதுடன், கரையோரப் பகுதிகள் சில மீட்டர் தூரம் வரை கடுமையாக சேதமடைந்துள்ளன.

கடலோரப் பகுதிக்கு இணையான முத்துப்பந்தி தீவில் உள்ள சிறிய வீதியொன்றும் கடலரிப்பால் சேதமடையத் தொடங்கியுள்ளது என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும், முத்துப்பத்திய தீவின் வடக்குப் பகுதியில் கடல் அரிப்பு ஏற்பட்டு ஆங்காங்கே பெரும் பாறைகள் படிந்துள்ளதால் கரையோரப் பகுதி தற்போது பாதுகாப்பாக மாறியுள்ளது.

## பொயிலர் வெடித்து மஸ்கெலியா இளைஞன் மரணம்

மலேசியாவுக்கு பணிக்கு சென்ற மஸ்கெலியா பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் அங்கு பொயிலர் வெடித்து மரணித்துள்ளார். இந்த அனர்த்தம், ஞாயிற்றுக்கிழமை (05) இடம்பெற்றுள்ளது. மஸ்கெலியா ப்ரௌன்ஸ்வீக் தோட்ட மோட்டிங்ஹேம் பிரிவைச் சேர்ந்த துரைராஜ் ராஜ்குமார் டேவிட்சன் (வயது 24 வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இலங்கையிலிருந்து மலேசியாவிலுள்ள மினரல் வோட்டர் நிறுவனமொன்றுக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் பணிக்கு சென்றிருந்தார். அவரது சடலத்தை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை உறவினர்கள் மேற்கொண்டுள்ளனர்.

ஜாதிக லொத்தரய் மண்டலய
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

திங்கள் 2024.05.06

உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5467 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,070,740.00

ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 2 5 7 3 6 2

**அத சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 042 — ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 7 3 6 2

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3709 — சீட்டிழுப்பு திகதி 2024.05.06 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 76,242,642.16

ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 13 47 48 72 — விசேட எழுத்து U — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 12215

**Mega POWER** — சீட்டிழுப்பு இலக்கம் 1815 — 2024.05.06 — 63528 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 431,471,674.00

ஆங்கில எழுத்து Y — சுப்பர் இலக்கம் 19 — வெற்றி இலக்கங்கள் 28 33 39 69 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**லக்கி 7 VIP** — திகதி 2024.05.06 — சீட்டிழுப்பு இலக்கம் 0293 — ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 9 7 5 9 4 6 — L7 எழுத்து R — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 29,407,304.88

**ராசி சுப பலன்** — திகதி 2024.05.06 — சீட்டிழுப்பு இலக்கம் 776 — செவ்வாய் அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,300,569.44

வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 39 40 53 56 — தனயோக இலக்கம் 44718 — நாளுக்கான விதி எண் 25

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1497 — 2024.05.06 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 90,808,801.84

ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 03 60 77 78 — விசேட எழுத்து S — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 20740

# திருகோணமலை மாணவருக்கு சைக்கிள்கள் அன்பளிப்பு

தம்பலகாமம் குறூப், கிண்ணியா மத்திய நிருபர்கள்



திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மாணவர்களுக்கு சைக்கிள்களை அம்மாவட்ட அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாரச்சி நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கி வைத்தார்.

இலங்கை சிறுவர் நிதியத்துக்கு ஜப்பான் சிறுவர் நிதியத்தால் வழங்கப்பட்ட சைக்கிள்களே சிறுவர் நிதியத்தின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

குச்சவெளி, கோமரங்கடவெல, மொரவெவ பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த 60 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் பாடசாலை கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்கு தொழிற்பயிற்சிக்கான காசோலை மற்றும் சுயதொழிலுக்கான காசோலைகளும் வழங்கி வைக்கப்பட்டன. திருகோணமலை சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அரியரட்ணம் தலைமையில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாராச்சி, மேலதிக மாவட்ட செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட செயலக ஊழியர்கள், மாணவர்கள், பெற்றோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கிழக்கின் குரல்



## அம்பாறையில் டெங்குநோய் பரவும் அபாயம்; மக்களை அவதானமாக இருக்க அறிவுறுத்து

### கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

தற்போது அம்பாறை மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் நிலவுவதால் பொதுமக்களை மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ளுமாறு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீன் அறிவுறுத்தியுள்ளார்.

குறிப்பாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களில் பரவலாக டெங்கு நோய் பரவக்கூடிய ஆபத்தான நிலைமை தோன்றியுள்ளது. ஆகையால் டெங்கு நுளம்பு பெருக்கம் மற்றும் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரப் பிரிவினருக்கும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.



தற்போது இடைவிட்ட மழை பெய்வதாலும் உஷ்ணமான காலநிலை நிலவுவதாலும் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு சாதகமான சூழ்நிலை தோற்றுவிக்கப்படக் கூடுமென்பதால் பொதுமக்கள் தமது வீடுகள் மற்றும் சுற்றுப்புறச்சூழல், பாடசாலைகள் உள்ளிட்ட பொதுவிடங்களை சுத்தம் செய்து துப்புரவாக வைத்திருக்குமாறும், அவர் கேட்டுக்கொண்டார்.

நீர் தேங்கியிருக்கும் பொருட்கள், நீர் தேங்கும் இடங்கள் , கடற்கரையோரம் தோணிகள், படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இடங்கள் சுத்தம் செய்யப்பட வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார். இதேவேளை மக்கள் வசிக்கும் குடியிருப்பு பிரதேசங்களில் அமைந்துள்ள வடிகான்களில் நீண்டகாலமாக கழிவுநீர் தேங்கியுள்ளதாகவும் வடிகான்களை சுத்தம் செய்வது தொடர்பாக கல்முனை மாநகர சபையின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## சம்மாந்துறையில் சில அமைப்புகளுக்கு நிதி உதவி

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன், சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்கள்**



சம்மாந்துறை பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்காக அப்பிரதேசத்தில் அமைந்துள்ள சில அமைப்புகளுக்கு நிதி உதவியை பெற்றுக் கொள்வதற்கான ஆவணங்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (06) சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமால் ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியே சம்மாந்துறை பிரதேசத்தை சேர்ந்த சில அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவு எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட சமூக சேவை நிறுவனங்கள், விளையாட்டுக்கழகங்கள், பாடசாலைகள், முன்பள்ளி பாடசாலைகள், கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், மதஸ்தலங்கள், மாதர் சங்கங்கள், மாற்றுத்திறனாளிகள் சங்கம், பொது நிறுவனங்கள் ஆகியவை பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமிடம் விடுத்த நீண்டகால கோரிக்கைக்கமையவே இந்த நிதி உதவி வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதற்குரிய ஆவணங்களை பைசால் காசிம் எம்.பி. வழங்கி வைத்தார்.

## காரைதீவு கண்ணகை அம்மன் கோயில் வைகாசி திருக்குளிர்த்தி

### விழா 13ஆம் திகதி ஆரம்பம்

**காரைதீவு குறூப் நிருபர்**



வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மன் கோயிலின் வருடாந்த வைகாசி திங்கள் திருக்குளிர்த்திச் சடங்கு விழா எதிர்வரும் 13ஆம் திகதி (திங்கட்கிழமை ) மாலை கடல் தீர்த்தம் எடுத்து வரப்பட்டு திருக்கல்யாணக்கால் நடும் வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்த விழா தொடர்ந்து 8 தினங்கள் நடைபெறுவதுடன், எதிர்வரும் 21ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) அதிகாலை 4.30 மணிக்கு திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடையவுள்ளதாக, அக்கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இரண்டாம் நாளான 14ஆம் திகதி மாலை சடங்கு பூஜையும் ஊர்சுற்றுக் காவிய பாடலும் நடைபெறும். 15ஆம் திகதி முதல் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை தொடர்ந்து பிற்பகல் ஒரு மணிக்கு பூஜையும் இரவு 7.00 மணிக்கு சடங்கு பூஜையும் ஊர்சுற்றுக் காவிய பாடலும் நடைபெறும்.

20ஆம் திகதி காலை மடிப்பிச்சை எடுக்கும் நிகழ்வும் பிற்பகல் 3.00 மணிக்கு பொங்கலுக்கு நெல் குத்தும் வைபவமும் நடைபெறும். 21ஆம் திகதி அதிகாலை திருக்குளிர்த்தி பாடப் பெறும். 27ஆம் திகதி இரவு 7.00 மணிக்கு 8ஆம் சடங்கு நடைபெறுமெனவும், கோயில் நிர்வாகத்தினர் கூறினர்.

இந்த விழா தொடர்பான ஆலோசனை குழுக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் தலைமையில் காரைதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றதுடன், இந்த வருட திருக்குளிர்த்தி விஞ்ஞாபனமும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த விழாவை சிறப்பாக நடத்த ஒத்துழைப்பு வழங்குமாறு கோயில் தர்மகத்தாவும் பிரதம பொறியியலாளருமான பரமலிங்கம் இராஜமோகன் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

### ரூ. 20 மில்லியன் செலவில்

## களுவாஞ்சிக்குடியில் மாதுளை பதப்படுத்தல் நிலையம்



**பெரிய போரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மாதுளை பயிர்ச் செய்கையையிட்டு மாதுளை பதப்படுத்தும் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு அடிக்கல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நாட்டி வைக்கப்பட்டது. அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் களுவாஞ்சிக்குடியில் மாதுளை செய்கை மிகவும் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இதற்கான பதப்படுத்தும் நிலையம் சுமார் 20 மில்லியன் ரூபா செலவில் களுவாஞ்சிக்குடி கடற்கரை வீதியை அண்டி நிர்மாணிக்கப்படவுள்ளது.

விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் 150 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு மாதுளை செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

களுவாஞ்சிக்குடி அக்றி விலேஜ் அமைப்பின் தலைவர் சீ.மதிசிவம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் இ.ஞானசெல்வம், மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபைச் செயலாளர் ச.அறிவழகன், விவசாய விஞ்ஞானி அருள்நந்தி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## மூதூரில் பல்லின மரக்கறி செய்கை

**மூதூர் தினகரன் நிருபர்**

திருகோணமலையின் மூதூர் கமநல சேவைகள் நிலையப் பிரிவுக்குட்பட்ட வண்ணாங்குழி குளத்தை அண்டிக் காணப்படும் மேட்டுநிலத்தில் தற்போது மரக்கறிச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இடைக்கால பயிரினமாக பல்லின வகை மரக்கறிச் செய்கையை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

உள்ளூர் மரக்கறி உற்பத்தியை பெருமளவில் உற்பத்தி செய்து பொருளதார நிலையை மேம்படுத்தும் முகமாகவும் மரக்கறிச் செய்கைக்கு தேவையான நீரை குளம் மற்றும் தோட்டக் கிணறுகள் மூலமாக பெற்றுக்கொள்ளக் கூடிய வசதி காணப்படுவதாலும் தாம் பல்லின மரக்கறிச் செய்கையில் ஈடுபடுவதாக, விவசாயிகள் தெரிவித்தனர்.

## அம்பாறையில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறிய 66 வர்த்தகருக்கு அபராதம்

**ஒலுவில் விசேட நிருபர்**

கடந்த ஏப்ரல் மாதம் அம்பாறை மாவட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 66 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களால் 3 இலட்சத்து 39 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம்.சாலிய பண்டார தெரிவித்தார்.

சம்மாந்துறை, கல்முனை, அக்கரைப்பற்று, பொத்துவில், அம்பாறை, தெஹியத்தகண்டி ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்துக்குட்பட்ட பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 103 வர்த்தகர்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன், இவர்களில் 66 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதன்போதே மேற்படி வர்த்தர்களுக்கு அபராதத்தொகை நீதிமன்றங்களால் விதிக்கப்பட்டதாகவும், அவர் கூறினார்.

இவ்வாறிருக்க ஏனைய வர்த்தகர்களுக்கு எதிராகவும் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அத்தியாவசிய பொருட்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதல் விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்கு பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலாவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதல் விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் செய்த முறைப்பாட்டை அடுத்து பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் இச்சுற்றிவளைப்புகளை மேற்கொண்டதாகவும், அவர் கூறினார்.

## கிண்ணியாவில் காட்டு யானை அட்டகாசம்; 03 வீடுகள் சேதம்

**கிண்ணியா மத்திய நிருபர்**



திருகோணமலையின் கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட உப்பாறு கிராம அலுவலர் பிரிவின் சோலை வெட்டுவான் மேல் குடியேற்ற பிரதேசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை 12.30 மணியளவில் காட்டு யானையொன்று புகுந்து மூன்று வீடுகளை சேதப்படுத்தியுள்ளதாக, அப்பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

காட்டுப்பகுதியிலிருந்து ஊருக்குள் புகுந்து இந்த யானை வீடுகளை உடைக்கும் போது, அவ்வீடுகளில் இருந்தவர்கள் கதறி அழுதுகொண்டு வெளியேறியதுடன், அயலவர்களை உதவிக்கு அழைத்தனர். இந்நிலையில் யானைக்கு வெடி போட்டு யானையை காட்டுக்குள் விரட்டியதாகவும், அப்பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

இந்த பிரதேசத்தில் யானைகளின் தொல்லை அதிகரித்து வருவதாகவும், அப்பிரதேசவாசிகள் கூறினர்.

## கிழக்கு ஊடகவியலாளர்களுக்கு சம்மாந்துறையில் செயலமர்வு



**சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்**

கிழக்கு மாகாணத்திலுள்ள இளம் ஊடகவியலாளர்களுக்கு "பத்திரிகை வடிவமைப்பும் நெறியாள்கையும், தொலைக்காட்சி செய்தி தயாரித்தல் மற்றும் சமாதான ஊடக கோட்பாடுகள்" ஆகிய தலைப்புகளை மையப்படுத்திய செயலமர்வு சம்மாந்துறை சமாதான கற்கைகளுக்கான நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

சம்மாந்துறை மீடியா போரத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இச்செயலமர்வில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த இளம் ஊடகவியலாளர்கள் 20 பேர் கலந்துகொண்டு பயனடைந்தனர். இவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

சம்மாந்துறை மீடியா போரத்தின் தலைவரும் மூத்த ஊடகவியலாளருமான எம்.ஐ.பி.பௌசுதீன் தலைமையில் ஆரம்பமான செயலமர்வில் வளவாளர்களாக சிரேஷ்ட ஊடகவியலாளர்களான யூ.எல்.எம். றியாஸ், கியாஸ் ஏ.புஹாரியும் சிறப்பு வளவாளராக பேராசிரியர் எஸ்.எல். றியாஸும் கலந்துகொண்டு விரிவுரையாற்றினர்.

### போதைப்பொருளுடன் தொடர்புடைய

## சந்தேக நபர்கள் 67 பேர் காத்தான்குடியில் கைது

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**



போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனை உள்ளிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட 67 சந்தேக நபர்கள் கடந்த ஒரு வாரத்தில் மட்டக்களப்பின் காத்தான்குடியில் கைது செய்யப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

திருட்டுச் சம்பவம், கசிப்பு விற்பனை, கசிப்பு உற்பத்தி, சட்டவிரோத சாராய விற்பனை, ஐஸ் போதைப்பொருள், ஹெரோயின், கேரள கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனை போன்ற குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டவர்களே கைது செய்யப்பட்டதாகவும் இவர்களிடமிருந்து கசிப்பு பரல்கள் உள்ளிட்ட பொருட்களை கைப்பற்றியதாகவும், அவர் கூறினார்.

ஏற்கெனவே பிணை வழங்கப்பட்ட மற்றும் விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்கள் அடங்கலாக இச்சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாகவும், காத்தான்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இச்சந்தேக நபர்களிடம் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

### இலங்கை திறந்த பல்கலையின்

## பிராந்திய கிளையை அட்டாளைச்சேனை பிரதேசத்தில் திறக்குமாறு வேண்டுகோள்

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**



இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய கிளையை அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கலாசாலை வளாகத்தில் திறந்து வைத்து பிராந்திய கல்வியியலாளர்களுக்கு உதவுமாறு, தென்கிழக்கு பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் கணித, விஞ்ஞானப்பிரிவு துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ.எல்.ஹனிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதேச சபைச் செயலாளர் எம்.ஐ.எம். பாயிஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லாவிடமே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கலாசாலையானது, தற்பொழுது பயிற்சி ஆசிரியர்கள் இல்லாத நிலையில் தொழிற்பாடின்றி காணப்படுகிறது. எதிர்காலத்திலும் இந்நிலையத்தில் ஆசிரியர்கள் பயிற்சிக்காக அனுமதிக்கப் போவதில்லையெனத் தெரியவருகிறது. ஆகையால் இந்தக் கலாசாலையில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய கிளை திறக்கப்படுமானால், அது பிராந்திய கல்வியியலாளர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும்" என்றார்.

இதற்கு பதிலளித்த அதாஉல்லா எம்.பி., இந்த வேண்டுகோள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று நம்பிக்கை வெளியிட்டார்.

# வடக்கின் உதயம்

## நெடுந்தீவுக்கு 24 மணிநேர தடையில்லாத மின்சார விநியோகம் உறுதிப்படுத்தப்படவேண்டும்

### அமைச்சர் டக்ளஸ் பணிப்பு

(யாழ்.விசேட நிருபர்)



நெடுந்தீவு பிரதேசத்தில் தடையற்ற 24 மணிநேர மின்சார விநியோகம் உறுதி செய்யப்பட வேண்டுமென துறைசார் தரப்பினருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த சில நாட்களாக நெடுந்தீவு பகுதியில் அடிக்கடி மின்சாரம் தடைப்பட்டதால் அப்பகுதி மக்கள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர். குறிப்பாக தற்போதைய அதி வெப்பமான சூழ்நிலையில் பல்வேறு அசௌகரியங்களை சந்திக்க நேரிட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மின்தடைக்கு இயந்திரங்களில் ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறுகளே காரணம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டது.

இதனையடுத்து துறைசார் தரப்பினருடன் மின்சார தடை தொடர்பில் தொலைபேசியில் கேட்டறிந்துகொண்ட அமைச்சர் சீரமைக்கும் பணிகளை மிக விரைவாக முன்னெடுத்து தடையற்ற மின்சார வழங்கலை உறுதிசெய்யுமாறு பணித்திருந்தார்.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர்,

தற்போது சாதாரண தர பரீட்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் நாட்டில் அதி வெப்பநிலையும் காணப்படுகின்றது. இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படும் ஏதுநிலைகள் அதிகளவில் உள்ளன. அதுமட்டுமல்லாது மக்களின் பல்வேறு வாழ்வாதார தொழில் நடவடிக்கைகளுக்கும் பாதிப்புகள் ஏற்பட கூடும். இதேவேளை நாடு முழுவது இருளில் மூழ்கிய சந்தர்ப்பங்களில் கூட இப்பகுதியில் மின்சாரம் தடைப்பட்டது கிடையாது.

அந்தவகையில் எந்த வித தடைகளும் ஏற்படாத வகையில் சேவையை வழங்குவது துறைசார் தரப்பினரது கடமையாகும்.

இதேநேரம் இப்பகுதியில் காற்றலை மின் உற்பத்திக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவை நிறைவுற்றதும் தடையற்ற மின்சாரத்துடன் குறைந்த செலவிலும் இப்பகுதி மக்கள் மின்சார சேவையை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும் என அவர் தெரிவித்தார்.

## எழுதுமட்டுவாள் தெற்கு கமக்கார அமைப்பினருக்கான காலபோக பதிவுகள்

(சாவகச்சேரி விசேட நிருபர்)

சாவகச்சேரி கமநலசேவை நிலையத்துக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பினருக்கான கால போக பதிவுகள், ஏக்கர் வரி மற்றும் சந்தாபணம் அறவிடும் செயற்பாடுகள் இன்று (8) இடம்பெறவுள்ளதாக கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை எழுதுமட்டுவாள் பொதுச்சந்தையில் மேற்படி பதிவுகள் இடம்பெறவிருப்பதால் கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற் செய்கையாளர்கள் உரிய நேரத்தில் வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். வருகை தரும்போது வயல்களை ஒளிப்படம் எடுத்து கமநலசேவை நிலையத்தில் ஒப்படைத்தமைக்கான குறியீட்டு இலக்கத்தையும் சமர்ப்பிக்க வேண்டுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழில் வீடொன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட பெண்!

### சந்தேகத்தில் மகன் கைது

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பகுதியில் வீடொன்றிலிருந்து பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் அவரது 16 வயது மகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதுமட்டுமின்றி 'அம்மாவின் கழுத்தை நானே நெரித்து கொலை செய்தேன் எனவும் சிறுவன் பொலிஸ் விசாரணையின் போது வாக்குமூலம் அளித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பகுதியில், கடந்த வெள்ளிக்கிழமை வீடொன்றிலிருந்து சந்தேகத்திற்கு இடமான முறையில் உயிரிழந்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது.

தெல்லிப்பழை பகுதியை சேர்ந்த ஹெனடிக் ஜஸ்மின் (வயது 37) எனும் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் தனது இரு பிள்ளைகளுடன் வசித்து வந்ததுடன் அவரது கணவன் வெளிநாட்டில் வசித்து வருகின்றார்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை வீட்டில் தாயும் மகனும் மட்டுமே இருந்துள்ளனர்.

மறுநாள் பெண் உயிரிழந்த நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார். பெண்ணின் மகனான 16 வயதுடைய சிறுவன் வீட்டில் இருந்து காணாமல் போயிருந்ததுடன், வீட்டின் சுவர்களில் இரத்த கறைகளும் காணப்பட்டன.

இதனையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன் காணாமல் போன 16 வயது சிறுவன் நேற்றைய தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட சிறுவனிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், 'தானே தாயின் கழுத்தை நெரித்து கொலை செய்தேன் என வாக்குமூலம் அளித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுவனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை , சிறுவன் மனநலம் பாதிக்கப்பட்டவர் என அயலவர்கள் தெரிவித்துள்ளனர். சிறுவன் கைபேசி விளையாட்டுக்களுக்கு (மொபைல் கேம்ஸ்) அடிமையானவர் எனவும், அதனால் சிறுவன் கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளாகி இருந்ததாகவும் தெரியவருகின்றது.

## யாழில்.அதிக வெப்பத்தால் ஐவர் உயிரிழப்பு

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் நிலவும் அதீத வெப்பம் மற்றும் வெப்ப அலை காரணமாக 05 பேர் உயிரிழந்துள்ளதாக யாழ்.போதான வைத்தியசாலையின் பொது மருத்துவ நிபுணர் ரி.பேரானந்தராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் தற்போது அதிக வெப்பமான காலநிலை காணப்படுகிறது. ஒரு மனிதனின் உடலானது 40.5 சென்டிகிரேட் அல்லது 105 பரனைட் வெப்பத்தையே தாங்கும். அதனை தாண்டும் போது, தீவிரமான பாதிப்புகள் ஏற்படும்.

அதனால் வியர்வை அதிகரிப்பு, வியர்குருக்கள் போடுதல், போன்றவை ஏற்படும். வியர்வை அதிகரிப்பால், உடலில் நீரின் அளவு குறைவடைந்து, மயக்கம் ஏற்படும்.

இந்நிலை தொடர்கின்ற போது "ஹீட் ஸ்ரோக்" ஏற்படும். அத்துடன், சிறுநீரகம், இருதயம், சுவாசப்பை போன்றவை செயழிக்கும். அதேவேளை குருதி சிறுதட்டுக்களின் எண்ணிக்கை குறைவடைந்து, உடல் நிலை மிக மோசமாக பாதிக்கப்படும். மூளை செயலிழந்து மயக்கம் ஏற்படும் சம்பவங்களும் நிகழும்.

யாழ்.போதனாவில் சிகிச்சை பெற்று வந்த சுமார் 05 பேர் "ஹீட் ஸ்ரோக்" காரணமாக உயிரிழந்துள்ளனர். அவர்களின் உயிரிழப்புக்கு அவர்களுக்கு ஏற்கனவே இருந்த நோய் நிலைமைகள் காரணமாக இருந்தாலும், அதிகரித்த வெப்ப நிலையே நோயை தீவிரப்படுத்தி அவர்களின் உயிரிழப்புக்கு காரணமாக அமைந்துள்ளது.

எனவே எம்மை வெப்பத்தின் பேராபத்தான நிலையிலிருந்து காப்பாற்றி கொள்ள வேண்டும்.

'ஹீட் ஸ்ரோக்" வரமால் தடுக்க குளிர்மையான பானங்களை அருந்த வேண்டும். வீட்டில் உள்ள வயோதிபர்களுக்கு போதிய நீராகாரங்களை வழங்க வேண்டும்.

வயதானவர்களுக்கு தண்ணீர் தாகம் எடுப்பது தெரியாது. எனவே அவர்களுக்கு தொடர்ச்சியாக நீராகாரங்களை வழங்க வேண்டும்.

குறிப்பாக தர்ப்பூசணி, வெள்ளரிப்பழம், தோடம்பழம் போன்ற பழங்களை உண்ண வேண்டும். குளிர்ந்த நீரினால், முகத்தை கழுவ வேண்டும். கண் புருவங்களை அடிக்கடி நீரினால் கழுவிக்கொள்ள வேண்டும். அதன் ஊடாக உடலின் வெப்ப நிலையை தணிக்க முடியும்.

உடலின் வெப்ப நிலையை குறைப்பதன் ஊடாகவே "ஹீட் ஸ்ரோக்" வராமல் தடுக்க முடியும் என அவர் தெரிவித்தார்.



வற்றாப்பளை கண்ணகி அம்மன் பொங்கல் உற்சவத்தின் ஆரம்ப உற்சவம் மிக சிறப்பாக நேற்று முன்தினம் அதிகாலை நடைபெற்றது.

(படம் :புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

## திருநெல்வேலி வர்த்தகருக்கு ஒரு இலட்சத்து ரூ. 50 ஆயிரம் அபராதம்

(கரவெட்டி தினகரன் நிருபர்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியிலுள்ள பல்பொருள் அங்காடி ஒன்றின் உரிமையாளருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதார பரிசோதகரினால் முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது உரிய சுகாதார விதிமுறைகளை பின்பற்றாத குற்றச்சாட்டின் கீழ் கடந்த மார்ச் மாதம் 18ஆம் திகதி உரிமையாளருக்கு எதிராக யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. இந்நிலையில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தன, நேற்றைய தினம் உரிமையாளர் கடுமையாக எச்சரிக்கப்பட்டு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

### மன்னார் பொது வைத்தியசாலைக்கு

## ரூ.600 மில்லியன் நிதி நன்கொடையாக வழங்க இந்திய அரசாங்கம் அனுமதி

(மன்னார் குறூப் நிருபர்)



மன்னார் பொது வைத்தியசாலைக்கு 600 மில்லியன் ரூபா நிதியை நன்கொடையாக வழங்க இந்திய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கமைய இதற்கான அனுமதி கிடைத்துள்ளது.

மன்னார் பொது வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுக்கான கட்டட நிர்மாண பணிகளுக்கும், மருத்துவ உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்குமாக இந்த 600 மில்லியன் ரூபா நன்கொடை பயன்படுத்தப்படவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸின் நெறிப்படுத்தலின் கீழ், மாகாண சபையால் திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டு சுகாதார அமைச்சின் ஊடாக இந்திய உயர்ஸ்தானிகராலயத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட இந்திய அரசாங்கம் 600 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்குவதற்கான அனுமதியை அளித்துள்ளது.

மன்னார் பொது வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு இன்மையால் மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் முகமாக வடக்கு மாகாண ஆளுநரினால் இந்திய அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வட.மாகாண அபிவிருத்திக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கத் தயார்

### இலங்கைக்கான நோர்வே தூதுவர் உறுதி

(யாழ்.விசேட நிருபர்)



வடக்கு மாகாண அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்புகளை தொடர்ச்சியாக வழங்கத் தயார் என இலங்கைக்கான நோர்வே தூதுவர் மேஎலின் ஸ்டெனர் (MayElin Stener) தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான நோர்வே தூதுவர் மேஎலின் ஸ்டெனர் (MayElin Stener) வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடினார். இக் கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் இக்கலந்துரையாடலில் ,

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள், காணி விடுவிப்பு, கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகள், சுற்றுலாத் துறை அபிவிருத்தி, கல்வி, இயற்கை சக்தி வளங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும், சுற்றுலா வழிகாட்டிகள், தங்குமிட வசதிகள் போதுமான அளவு இல்லை என ஆளுநர் இதன்போது சுட்டிக்காட்டியதுடன் சுற்றுலாத் துறையை மேம்படுத்த முதலீடுகள் தேவைப்படுவதாகவும் தெரிவித்தார்.

மேலும் கற்றல் செயற்பாடுகள் மற்றும் தொழிற்கல்வியை பெற முடியாது போகும் இளைஞர், யுவதிகள் தொடர்பில் மாற்று வழிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

விடயங்களை கேட்டறிந்துக் கொண்ட இலங்கைக்கான நோர்வே தூதுவர் மேஎலின் ஸ்டெனர் வடக்கு மாகாண அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்புகளை தொடர்ச்சியாக வழங்கத் தயார் எனவும், ஒருங்கிணைந்த வேலைத் திட்டங்களை முன்னெடுக்க ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

## மருமகனின் தாக்குதலில் மாமன் உயிரிழப்பு

(வவுனியா விசேட நிருபர்)

வவுனியா, மதுரா நகர் பகுதியில் மருமகனின் தாக்குதலுக்கு இலக்கான மாமனார் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

வவுனியா, மதுராநகர் பகுதியிலுள்ள வீடொன்றில் வசிக்கும் இருவருக்குமிடையில் நீண்ட நாட்களாக கருத்து முரண்பாடுகள் இருந்து வந்துள்ளன.

இந்நிலையில் வெளியில் சென்றுவிட்டு மாலை வீடு திரும்பிய மாமன் மீது மருமகன் கோடாரியால் தாக்கியுள்ளார்.

இதில் படுகாயமடைந்த மாமனாரை உறவினர்கள் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுச் சென்ற போதும் அவர் வைத்தியசாலைக்கு செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் மதுராநகர் பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய மோகன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற சிதம்பரபுரம் பொலிஸார், இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை கொண்டு வருகின்றனர்.

## யாழில் கேரளா கஞ்சா மீட்பு; இருவர் கைது

(வவுனியா விசேட நிருபர்)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது 30 கிலோ 500 கிராம் கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் போதைப்பொருள் கைமாறுவதாக வவுனியா விசேட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் அதிகாலை மருதங்கேணி பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த 36, 35 ஆகிய வயதுகளையுடைய இரு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து 30 கிலோ 500 கிராம் கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட கேரளா கஞ்சா ஆகியவை மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்பு பொலிஸ் பிரிவினருடன் இணைந்து மருதங்கேணி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மக்கள் குரல் கொடுக்க வேண்டும்

### சட்டத்தரணி அம்பிகா சிறிதரன்

(சாவகச்சேரி விசேட நிருபர்)

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அதனைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் மக்கள் குரல் கொடுக்க வேண்டும் என்பதே சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் நோக்கம் என அந்நிலையத்தின் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான அம்பிகா சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் அனுசரணையில் ஊர்காவற்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஆவணங்களை பெறுவதற்கான இலவச நடமாடும் சேவையில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

மக்களை அணிதிரட்டி மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்பதே எமது இலக்கு. அதற்காக பொதுமக்கள் மற்றும் பெண்களை வலுப்படுத்தும் செயற்பாடுகளில் நீண்டகாலமாக சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையம் ஈடுபட்டு வருகின்றது.

மக்களுக்கு இலவச சட்ட உதவி வழங்கல், விழிப்புணர்வு நிகழ்வுகளை மேற்கொள்ளல் உள்ளிட்ட செயற்பாடுகள் எம்மால் முன்னெடுக்கப்படுகின்றன.

சட்டத்தால் வழங்கப்படுகின்ற உரிமைகளை முறையாக அனுபவிக்க வேண்டுமானால் ஆவணங்கள் மிக அவசியமானவை. அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் நலன்புரி மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டங்களைப் பெற ஆவணங்கள் அவசியமானவை.

சட்டம் வழங்கும் நலன்களை பெற ஆவணங்களே சிறந்த சான்று.

பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவு மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியன மிக அவசியமான ஆவணங்கள். இவ்வாறான ஆவணங்களை இதுவரை பெற்றிராத மக்களுக்கு அதனைப் பெற்றுக் கொடுத்து நலன்களை கிடைக்கச் செய்வதற்காகவே பிரதேச செயலகங்கள் ஊடாக நடமாடும் சேவைகளை முன்னெடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

## திண்ம கழிவுகளை சேகரிக்கும் நிலையத்தை அகற்றுமாறு மக்கள் ஆர்ப்பாட்டம்



இணுவில் காரைக்காலில் அமைந்துள்ள நல்லூர் பிரதேச சபையின் திண்ம கழிவுகளை சேகரிக்கும் நிலையத்தினால், சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அதனால், அப்பகுதி மக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் தெரிவித்து அப்பகுதி மக்களால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த நான்கு, ஐந்து வருடங்களுக்கு மேலாக இணுவில் காரைக்கால் சிவன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள நல்லூர் பிரதேச சபையின் திண்ம கழிவுகளை சேகரிக்கும் நிலையம் அமைந்துள்ளது. அதனை அகற்றுமாறு கோரியே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# தினகரன் வர்த்தக உலா

எம்.எஸ். பாஹிம் E-mail: businesstkn@gmail.com



மக்கள் வங்கியின் 2023 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை, அண்மையில் கொழும்பு 01 இல் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்தில் வைத்து, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ வழங்கினார். மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமான கிளைவ் பொன்சேகா மற்றும் நிதித்துறை பிரதம அதிகாரி அஸ்ஸாம் ஏ. அஹமத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## கூட்டாண்மை அட்டைகளை அறிமுகப்படுத்துவதில் சிறந்து விளங்குகின்றமைக்காக கொமர்ஷல் வங்கிக்கு அங்கீகாரம்

உலகளாவிய கொடுப்பனவுகளுக்கான தீர்வு நிறுவனமான வீசா (Visa) அண்மையில் கொழும்பில் நடைபெற்ற வீசா வணிக தீர்வுகள் வாடிக்கையாளர் மன்றம் (Visa Commercial Solutions Client Forum) ஒன்றில், இலங்கையின் கொமர்ஷல் வங்கியானது உள்நாட்டு சந்தையில் வீசாவின் கூட்டாண்மை அட்டைகள் தொடரினை அறிமுகப்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமையை அங்கீகரிக்கும் வகையில் 'வசதியான மற்றும் பெருந்திரளான கூட்டாண்மை அட்டை வகைகளை அறிமுகப்படுத்துவதில் சிறந்து விளங்கியமைக்காக' கொமர்ஷல் வங்கி கௌரவிக்கப்பட்டது.

வீசா வணிக தீர்வுகள் சிறப்பு (Visa Commercial Solutions Excellence) விருதானது வீசாவின் இலங்கை மற்றும் மாலைத்தீவுகளுக்கான வதிவிட முகாமையாளர் திருமதி அவந்தி கொலம்பகே அவர்களால் வழங்கப்பட்டதுடன் இதனை வங்கியின் சார்பாக பிரதி பொது முகாமையாளர் கூட்டாண்மை வங்கியியல் செல்வி. தமரா பேர்னார்ட் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

கொமர்ஷல் வங்கியானது அண்மையில் இலங்கையில் கூட்டாண்மை மற்றும் பிற வர்த்தக நிறுவனங்களின் ஊழியர்களுக்காக வீசா சிக்னேச்சர் மற்றும் வீசா பிளாட்டினம் கூட்டாண்மை கடன் அட்டைகளை அறிமுகப்படுத்தியிருந்தது. இந்த புதிய தயாரிப்பானது கூட்டாண்மை நிறுவனங்களுக்கு ஊழியர்களின் செலவுகளை நிர்வகிக்க உதவுவதுடன் இந்த அட்டையானது ஒவ்வொரு நிறுவனத்தின் கூட்டாண்மை கடனட்டை கணக்குடன் இணைக்கப்பட்டுள்ளது.

கூட்டாண்மை நிறுவனங்களின் ஊழியர்கள், அந்தந்த நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட பயணம், பொழுதுபோக்கு மற்றும் பிற செலவுகளுக்கு உலகில் எப்பகுதியில் இருந்தும் பணத்தினை செலுத்த இந்த அட்டைகளைப் பயன்படுத்தலாம். மேலும் வீசா சிக்னேச்சர் கூட்டாண்மை கடனட்டைகளும் தங்கள் பயனர்களுக்கு சர்வதேச விமான நிலையங்களில் ஓய்வறை அணுகல் மற்றும் பயணம் தொடர்பான விடயங்களுக்கு சலுகைகளை வழங்குகின்றன.

## புதிய கூட்டணி மூலம் இலங்கையின் தொழில்நுட்ப சூழலைப் புரட்சிகரமாக்கும் செயலியை வெளியிடும் Hatch மற்றும் Orion City



பெருமைக்குரிய தொழில் தொடக்க விரைவுபடுத்துனரும்/ அடைகாப்பாளருமான Hatch மற்றும் முன்னணி IT பூங்காவான Orion City ஆகியன இணைந்து, இலங்கையின் தொழில்நுட்ப சூழல்தொகுதியிலும் வணிக நடவடிக்கைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் ஒரு புத்தாக்கமான டிஜிட்டல் தளத்தை வெளியிட்டுள்ளன.

இந்த புத்தாக்கமான செயலியானது, கொழும்பு 01 Hatch Works, கொழும்பு 09 Orion City யில் உள்ள Orion Nest, கொழும்பு 03 புதிதாக வரவுள்ள Orion City Colombo ஆகிய மூன்று முக்கிய இடங்களில் இருந்து, அத்தியாவசிய சேவைகள் மற்றும் வசதிகளுக்கான அணுகலை ஒழுங்குபடுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டிணைவின் மூலம், இலங்கையின் வளர்ந்து வரும் தொழில்நுட்ப சூழல் தொகுதியில், தொழில்முனைவோர் மற்றும் வணிகங்கள் போன்றவற்றிற்கு வளர்ச்சி மற்றும் ஒத்துழைப்புக்கான சிறந்த வாய்ப்புகளையும், சிறந்த அனுபவத்தை பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்படும்.

இதேவேளை, கொழும்பில் 1910 ஆம் ஆண்டுக்கு முந்தைய காலப் பகுதிக்குரிய, புதுப்பிக்கப்பட்ட கட்டடத்தில் அமைந்துள்ள Hatch ஆனது, தொழில் முனைவோருக்கான மையமாக செயற்படுகிறது. அதன் வலையமைப்பில் 1,000 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் மற்றும் 700 தொழில் தொடக்கங்கள் உள்ளன. கொழும்பு 09 இல் அமைந்துள்ள Orion City ஆனது, பல்வேறு சந்திப்புகள், ஓய்வு மற்றும் உணவகம் போன்ற வசதிகளை வழங்குகின்ற, 40 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்ற உயர் மட்ட பணியிடங்களைக் கொண்டுள்ள மையம் என புகழ் பெற்று விளங்குகின்றது.

## புத்தகங்களுக்கு உறையிடும் பெற்றோரின் கவலையை போக்கும் Printcare Agile இன் "Book Wonders"



Printcare Digital Solutions (Pvt) Limited ஆனது, வேலைப் பளு மிக்க பெற்றோர்கள் எதிர்கொள்ளும் முதன்மையான சவால்களில் ஒன்றான, தங்களது பிள்ளைகளின் பாடசாலை புத்தகங்களுக்கு உறை இடும் ஒரு புதிய தீர்வை, Printcare Agile எனும் வர்த்தக நாமத்தின் கீழ் அறிமுகப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறது. "Book Wonders" எனும் பெயரிடப்பட்டுள்ள இந்தப் புத்தாக்கமான தயாரிப்பானது, வழக்கமாக புத்தகங்களுக்கு உறை இடும் செயன்முறையை விரைவாகவும், எளிதாகவும், திறமையாகவும் மாற்றுவதை உறுதியளிக்கிறது.

பாடசாலை புத்தகங்களுக்கு உறையிடும் செயன்முறையானது, நீண்ட காலமாக பெற்றோருக்கு நேரத்தை எடுத்துக் கொள்கின்றதும் சிக்கலானதுமான பணியாகும். உறை இடும் காகிதங்களை கொள்வனது செய்வது முதல் அளவாக வெட்டி, மாணவர்களின் பெயர் விபரங்கள் கொண்ட ஸ்டிக்கர்களை ஒட்டுதல், பாதுகாப்பிற்காக பொலித்தீன் உறை போடுதல் வரை, முழுச் செயன்முறையும் சோர்வானதாகவும் திறனற்றதாகவும் இருக்கும். அது மாத்திரமன்றி, சில பாடசாலைகள் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு வர்ண்ணத்திலும் அமைய வேண்டுமென்பது கட்டாயம் என்பதோடு, பெற்றோர்கள் அவற்றை தேடுவதிலும் சிக்கலை எதிர்கொள்கின்றனர். அத்துடன் காகிதங்களையும் வளங்களையும் தேவையில்லாமல் வீணாக்கவும் செய்கிறார்கள்.

Printcare Agile ஆனது, இந்த கவலைகளை உணர்ந்து, Book Wonders மூலம் ஒரு விரிவான தீர்வை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த தனித்துவமான தயாரிப்பானது, பாடசாலை இலச்சினை, பாடங்களின் நிறங்கள், மாணவர் பெயர், தரம், மாணவரின் புகைப்படம் உள்ளிட்ட மாணவர்களின் அத்தியாவசியமான விபரங்களை முன்கூட்டியே அச்சிடுகிறது. இது புத்தகத்தை உறையிடும் செயன்முறையை உரிய முறையில் மேற்கொள்வதற்கு வழிவகுப்பதோடு மட்டுமல்லாமல், புத்தக அட்டையில் இடப்படும் விசேட பாதுகாப்பு கூறு காரணமாக, புத்தகங்களுக்கு மேலதிக பாதுகாப்பையும் வழங்குகிறது.

## நிலையான நீர் முகாமைத்துவத்தின் மூலம் சமூகங்களை மேம்படுத்துதல்



இலங்கையின் வரலாற்றில், 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் பண்டைய நாகரிகங்கள் நீர்ப்பாசன பொறியியல் முறைகளை உருவாக்கியுள்ளன. இன்று, 1,000 க்கும் மேற்பட்ட அருவிகள் மற்றும் 15,000 சிறிய குளங்களை உள்ளடக்கிய இந்த நீர்த்தேக்கங்கள், கிராமப்புற சமூகங்களின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்து, நவீன சவால்களுக்கு மத்தியில் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்துவதையும் உணவு பாதுகாப்பையும் உறுதி செய்கின்றன.

Acted and We Effect உட்பட முன்னணி INGOக்கள் மற்றும் NGO நிறுவனங்களின் கூட்டணி, The CocaCola Foundationஇன் ஆதரவுடன் இணைந்தது. மொனராகலை, அநுராதபுரம் மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் உள்ள சமூகங்களை வலுவூட்டுவதற்கு இந்த கூட்டமைப்பு முயற்சி செய்கின்றது.

CocaCola அறக்கட்டளையின் நிதியுதவியுடன் We Effect, சமூகத்தை வலுவூட்டும் அதே வேளையில் நீர்ப்பாசனம் மற்றும் குடிநீரின் தரத்தை மேம்படுத்த தம்மென்னாவ கிராமத்தில் முயற்சிகளை மேற்கொண்டது. இதில் நூற்றாண்டு பழமை வாய்ந்த நீர்த்தேக்கங்களை புத்துயிர் அளிப்பது, நீர் கொள்ளளவை அதிகரிப்பது மற்றும் 200 ஏக்கரில் ஆண்டு முழுவதும் விவசாய செய்கை மேற்கொள்வதன்மூலம், 476குடும்பங்கள் பயனடைகின்றன. 300 க்கும் மேற்பட்ட பெண்கள் கிராம விவசாயக் கூட்டுறவு சங்கத்தில் ஒருங்கிணைக்கப்பட்டனர், 100 பேர் தொழில் முனைவோர் பயிற்சி பெற்றனர், இது நீர் இருப்பு, விவசாய உற்பத்தித் திறன் மற்றும் பெண்களின் பொருளாதார மேம்பாடு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது.

### தொடர்ந்து 2ஆவது வருடமாக

## சர்வதேச கைத்தொழில்துறை கண்காட்சி; 2024 உடன் இணையும் செலான் வங்கி




பலராலும் எதிர்பார்க்கப்படும் சர்வதேச கைத்தொழில்துறை கண்காட்சி 2024 உடன் செலான் வங்கி தொடர்ந்து 2வது வருடமாக இணைகிறது. கைத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் ஏற்பாடு செய்யப்படும் இக்கண்காட்சியானது ஜூன் 19ஆம் திகதி முதல் ஜூன் 24ஆம் திகதி வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெறவுள்ளது.

சர்வதேச கைத்தொழில்துறை கண்காட்சி 2024இற்கான செலான் வங்கியின் ஆதரவு, இலங்கையின் கைத்தொழில்கள் மற்றும் சிறிய, நடுத்தர நிறுவனங்களின் (SMEs) வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு ஊக்கமளித்து சாதகமான பொருளாதார சூழலில் உள்ளூர் வர்த்தகங்களை வலுவூட்டும் வங்கியின் நோக்கத்துடன் நன்கு எதிரொலிக்கிறது. இந்த கண்காட்சியை ஆதரிப்பதன் மூலம் அன்புடன் அரவணைக்கும் வங்கியானது பொருளாதார செழுமையை வளர்ப்பதையும், நாட்டை ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி செலுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## டயலொக் ஆசிஆட்டாவின் Genie மற்றும் Dialog Finance ஆகிய சேவைகளுக்கு விருது



டயலொக் ஆசிஆட்டாவின் genie மற்றும் Dialog Finance PLC ஆகிய சேவைகள் LankaPay Technnovation Awards 2024 விருது விழாவில் டிஜிட்டல் நிதிச் சேவைகளுக்கான பங்களிப்புகளுக்காக அங்கீகரிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது. புதுமையான மற்றும் உள்ளடக்கிய நிதித் தீர்வுகளுடன் இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் டயலொக் முன்னெடுத்து வரும் முயற்சிகளின் பிரதிபலிப்பாகவே இந்த அங்கீகாரம் கருதப்படுகின்றது.

Genie இரண்டு தங்க விருதுகளை வென்றுள்ளது: இதில் முதலாவது விருதானது, 'மிகவும் பிரபலமான டிஜிட்டல் கொடுப்பனவு தயாரிப்பு Fintech பிரிவு' க்கு இலங்கை நுகர்வோரால் வாக்களிக்கப்பட்டு வெல்லப்பட்டுள்ளது. இரண்டாவது விருதானது, 'Lanka QR Fintech பிரிவு மூலம் சில்லறை விற்பனையாளர் கொடுப்பனவுகளுக்கான சிறந்த மொபைல் Application' என வெல்லப்பட்டுள்ளது. இவ்வாறு Genie இரண்டு விருதுகளை வென்றமையானது, இலங்கையில் விருப்பமான டிஜிட்டல் கட்டண தளமாக genie அங்கீகாரத்தை பெற்றுள்ளதை குறிக்கின்றது எனலாம்.

மேலும், Dialog Finance PLC ஆனது, 'சிறந்த டிஜிட்டல் கொடுப்பனவு மூலோபாயத்திற்கான ஆண்டின் நிதி நிறுவனத்திற்கான' தங்க விருதையும், 'சிறந்த டிஜிட்டல் கொடுப்பனவுகள்' மற்றும் 'வங்கி அல்லாத நிதி நிறுவனங்களின் பிரிவில் சிறந்த வாடிக்கையாளர் வசதி' ஆகியனவற்றிற்கு வெள்ளி விருதுகளையும், மேலும் சிறந்த 'நிதி உள்ளிணைக்கை' என்பதற்கான தகுதி விருதையும் பெற்று சிறப்பை சேர்த்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## இலங்கை வங்கியின் 'பிட்ட பிட்ட ரட்ட தாகி' வெற்றியாளருக்கு வீடுகள் கையளிப்பு



இலங்கை வங்கியானது அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளருக்கு ஆடம்பர வீடொன்றைப் பரிசளித்து தனது புகழ்பெற்ற 'பிட்ட பிட்ட ரட்ட தாகி' நிகழ்ச்சித்திட்டத்தின் அண்மைய பகுதியை நிறைவுசெய்தது. இதன் மூலம் புலம்பெயர் தொழிலாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட பரிசுத் திட்டத்தின்கீழ் வீடொன்றைப் பரிசாக வழங்கும் முதல் வங்கி என்ற பெருமையையும் தனதாக்கிக்கொண்டது.

புலம்பெயர் தேசங்களில் அரும்பாடுபட்டு உழைத்த வெளிநாட்டு நாணயத்தை பாதுகாப்பாக தமது குடும்பங்களுக்கும் அன்புக்குரியவர்களுக்கும் அனுப்பும் எமது புலம்பெயர் தொழிலாளர்களை ஊக்குவிக்குமுகமாக அறிமுகப்படுத்தப்பட்ட இப்பரிசுத்திட்டம் இவ்வாறு இனிதே நிறைவுற்றது.

இலங்கை வங்கியின் மூன்றாவது பகுதியான 'பிட்ட பிட்ட ரட்ட தாகி' பரிசுத் திட்டம் வெளிநாடுவாழ் எம்மவர்க்கு உச்சபட்சமாக ரூ. 30 மில்லியன் பெறுமதியான வீடு உட்பட தினசரி, வாராந்த மற்றும் மாதாந்த குலுக்கல்களில் பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பை வழங்கியது. பரிசுகளை வெல்வதற்கான பல வாய்ப்புகள் இத்திட்டத்தில் இருப்பதால் வீட்டை வெற்றிபெறும் அதிர்ஷ்டசாலி யார் என்ற அறிவிப்புக்காக பங்கேற்பாளர்கள் ஆவலுடன் காத்திருந்தனர்.

கடுமையான தேர்வு நடைமுறையைத் தொடர்ந்து, கே.கே. ருவான் சிந்தக்க என்பவரை 30 மில்லியன் பெறுமதியான தளவாடங்களுடனான வீட்டை வெல்லும் வெற்றியாளராக அறிவிப்பதில் இலங்கை வங்கி பெருமகிழ்ச்சியடைகிறது.

2024.04.28ஆம் திகதி கட்டுநாயக்காவின் 'மிலேனியம் சிட்டி – றிவர் வியூ' பகுதியில் நடைபெற்ற இப்பரிசளிப்பு நிகழ்வில் பெரும் ஆரவாரங்களுக்கும் கைதட்டல்களுக்கும் மத்தியில் சிந்தக்க தனது புதிய வீட்டின் சாவியைப் பெற்றுக்கொண்டார்.

## '1303' எனும் உடனடி தொலைபேசியை அறிமுகப்படுத்தியுள்ள HNB பொதுக் காப்புறுதி



HNB பொதுக் காப்புறுதி (HNB General Insurance) அண்மையில் அதன் பிரத்தியேக உடனடி தொலைபேசி இலக்கமான '1303' இனை அறிமுகப்படுத்தியுள்ளது. இது மேம்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்திற்காக அவர்களது சமீபத்திய முயற்சியை வெளிப்படுத்துகிறது. புதிய உடனடி தொலைபேசியான '1303' ஆனது, நிறுவனம் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு புரட்சியை ஏற்படுத்துவதன் மூலம் அதன் சேவையை புதிய உயரத்திற்கு கொண்டு சென்று, வாடிக்கையாளர்களின் வசதியையும் அணுகலையும் மேம்படுத்துகிறது.

HNB பொதுக் காப்புறுதி இலங்கை முழுவதும் உள்ள அதன் வாடிக்கையாளர்களுக்கு ஒப்பிட முடியாத சேவை மற்றும் பராமரிப்பை வழங்குவதில் நீண்ட காலமாக உறுதி பூண்டுள்ளது. உடனடி தொலைபேசி இலக்கமான '1303' ஆனது, உடனடி உதவி மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட ஆதரவை உறுதிப்படுத்துகின்றது.

வாடிக்கையாளர்கள் தற்போது ஒரு இலகுவான தொலைபேசி அழைப்பின் மூலம் நிபுணர் உதவியை அணுகலாம் என்பதோடு, நீண்ட காத்திருப்பு நேரங்கள் மற்றும் சிக்கலான செயன்முறைகளிலிருந்து தவிர்ந்து கொள்ளலாம். காப்புறுதி கோரிக்கையை தாக்கல் செய்யவும், காப்புறுதியைப் புதுப்பிக்கவும் அல்லது தகவல்களை அறியவும், '1303' எனும் உடனடி தொலைபேசி இலக்கமானது, வாடிக்கையாளர்கள் தங்கள் விரல் நுனியில் உடனடியான மற்றும் நம்பகமான சேவையைப் பெறுவதை உறுதி செய்கிறது.

"வாடிக்கையாளர் வசதி மற்றும் அணுகல் தன்மைக்கு முன்னுரிமை அளிக்கும் எமது தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் ஒரு அங்கமாக '1303' எனும் உடனடி தொலைபேசியை அறிமுகப்படுத்துவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம் என்று HNB பொதுக் காப்புறுதியின் பிரதம நிறைவேற்று அதிகாரி சித்துமின ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

# ஏமாற வேண்டாம்; ரஷ்ய போர் முனையில், உங்கள் கனவுகளை புதைக்க ஒரு கடத்தல் கும்பல் செயல்படுகிறது



## பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட

1. குழுவி னரை அனுப்புவது யுத்தம் செய்யவல்ல, பலி கொடுக்க...

2. ஒரு சுயாதீன நாட்டைச் சேர்ந்த ஒருவ ர் மற்றொரு சுயாதீன நாட்டின் தே சிய ராணுவத்தில் சேர சட்டபூர்வ அனுமதி இல்லை

3. ரஷ்ய உக்ரேனிய எல்லைகளில் இப்போது பலர் அவதிப்படுகின்றனர்.

3. கிடைக்கப்பெறும் செய்திகளின் படி, கணிசமானவர்கள் உயிர் இழந் துள்ளனர்.

ரஷ்ய உக்ரைன் போர் முனையில் இராணுவ உதவியாளர்களாக வேலை பெற்றுத் தருவதாகவும், அந்த வேலை களுக்கு இலட்சக்கணக்கான ரூபா சம்பளம் பெற்றுத் தருவதாகவும் மக்களை ஏமாற்றி மனித கடத்தல் நடைபெறுவதாக பாராளுமன்ற உறுப் பினர் காமினி வலேபொட சுட்டிக்காட்டி யுள்ளார். மனித கடத்தல் மற்றும் அதன் அடிப்படை விடயங்கள் குறித்து அவருடன் நடத்தப்பட்ட கலந்துரையா டல்.

**இந்நாட்டிலுள்ள ஓய்வுபெற்ற ராணுவ வீரர்களை உக்ரைன் மற்றும் ரஷ்ய போர் முனைகளுக்கு கடத்து வதாக இந் நாட்களில் அதிகம் பேசப் படுகிறது. இந்த வெளிப்பாட்டின் பின்னணியில் உங்கள் பங்களிப்பு தெரிகிறது. உண்மையில், ரஷ்ய மற்றும் உக்ரேனிய போர் முனைக ளுக்கு இலங்கையர்கள் கடத்தப்பட்ட தன் உண்மை பின்னணி என்ன?**

தற்போது, ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே போ ர் தொடங்கி இரண்டு ஆண்டுகள் க டந்துவிட்டன. இந்தப் போரின் தொடக்கத்தில் இரு நாட்டுப் படைகளுக்கும் இடையே நடந்த போராக இருந்தாலும், பின்னர் பல்வே று கூலிப்படையினரும், தொழி லாளர்களும் இந்தப் போரில் ஈடுபட்டனர். எப்படியிருந்தாலும், தொழில்முறை கூலிப்படையினர் ரஷ்ய இராணுவத்துடன் வேலை செய் கிறார்கள். சமீபத்தில், ரஷ்யாவில் கூலிப்படை கிளர்ச்சி பற்றி அதிகம் பேசப்பட்டது. எனவே, இத்தகைய தொழில்முறை கூலிப்படை குழுக்கள் ரஷ்ய முனைகளில் செயல்படுகின்றன. அவர்கள் ரஷ்ய இராணுவத்துடன் நேர டியாக தொடர்புடையவர்கள் அல்ல. இருப்பினும், போருக்காக வேலை செய்யும் குழுக்கள் ரஷ்யாவிற்கு மட்டுமே என்று நான் கூறவில்லை, அத்தகைய குழுக்கள் உக்ரைனுடனும் வேலை செய்கின்றன. இந்தப் போர் முனைகளுக்குச் செல்லும் மக்களுக்கு மிகப் பெரிய தொகை வழங்கப்படுவ தாகக் கூறப்படுகிறது. இதனாலேயே எமது மக்கள் இந்தப் போர்முனையில் இணைய தயாராக உள்ளனர்.

**இப்படி போர்முனைக்கு அனுப்பப்ப டும் ஆட்களுக்கு அதிக சம்பளம் தரப் படும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?**

இந்தப் போரில் ஈடுபடும் இந்நாட்டு ராணுவ வீரர்களுக்கு லட்சக்கணக் கான ரூபாய் சம்பளம் வழங்கப்படும் என்று கூறி ஒரு தோற்றம் உருவாக் கப்பட்டுள்ளது. அந்த தோற்றம் அவர் கள் காட்டுவது போல. அழகாகவோ, ஆடம்பரமாகவோ இல்லை என்பது சில காலம் கழித்து உறுதியாகிறது. இந்தக் கடத்தல்காரர்கள் அழகான கனவுகளைக் காட்டி, கிடைக்கும் பணத் தைக் காட்டி மக்களை ஏமாற்றுகிறார் கள். அப்படி ஏமாந்த பலர் தற்போது ரஷ்ய உக்ரைன் எல்லையில் தவித்து வருகின்றனர். உண்மையில் நடப்பது என்னவென்றால், கடத்தல்காரர்கள் அப்பாவி ராணுவத்தினரை ஏமாற்றி பெருமளவு பணம் பறிக்கிறார்கள்.

**இந்த கடத்தல்காரர்கள் ஒருவரிடமி ருந்து உண்மையில் எவ்வளவு பணம் பெறுகிறார்கள்?**

எங்களுக்கு கிடைத்த தகவலின்படி ஒருவரிடம் பத்து முதல் பதினைந்து லட்சம் ரூபாய் வரை பெற்றுக் கொள் கிறார்கள்.

**ஓய்வுபெற்ற ராணுவ வீரர்கள் தாமாக முன்வந்து போர் முனைக்கு செல்வதில் தவறில்லை, இல்லையா?**

உண்மையில் அவர்கள் பெரும் ஏமாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார் கள். அங்கு இந்த கடத்தல்காரர்கள் வாங்கனட் கூலிப்படைக்கு அல்லது வேறு எந்த கூலிப்படைக்கும் வீரர் களை அனுப்புவதாக கூறுவதில்லை. அவர்கள் முறையான ரஷ்ய இராணு வத்திற்கு அனுப்பப்படுவதாக கூறு கின்றனர். ஆனால், இந்த வாக்குறுதி முற்றிலும் பொய்யானது. சமீபத்தில், முறையான ரஷ்ய இராணுவத்திலோ அல்லது உக்ரேனிய இராணுவத் திலோ வேலைக்கு யாரும் அனுப்பப் படவில்லை. இந்த கடத்தல்காரர்கள் இந்த மக்களை ஏமாற்றியுள்ளனர். இவ்வாறு ஏமாற்றப்பட்ட மக்கள் எல் லைகளின் கடுமையான தட்பவெப்ப நிலையை எதிர்கொள்ள முடியாமல் கடும் இன்னல்களுக்கு ஆளான சம்ப வங்கள் பலவற்றைப் பற்றி அறிக்கை கள் எமக்குத் தெரிவிக்கின்றன. உண் மையில், இந்த பணிகள் எந்த சட்ட அடிப்படையிலும் செயல்படவில்லை, அவை கடத்தலாக செயல்படுகின்றன.

**இந்தக் கடத்தலில் முதன்மையாக ஈடுபடும் குற்றவாளிகள் யார்? அவர் களை அடையாளம் காண முடிந்ததா?**

இதற்குக் காரணமானவர்கள் இதுவரை அடையாளம் காணப்பட வில்லை, ஆனால் இந்த நடவடிக்கை களில் முதன்மையாக ஈடுபட்ட பல ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட் டுள்ளன. உண்மையில் இந்த மோச டிக்கு மூளையாக செயல்பட்டவர்கள் யார் என்பதை கண்டறிய வேண்டும். விரைவாகக் கண்டறிந்து நடவடிக்கை எடுத்தால், ஆட்களை மரணத்துக்கு அனுப்பும் இந்தக் கடத்தல்காரர்களின் விபரங்களை அடையாளம் காண முடியும்.

**ஒரு நாட்டின் ராணுவத்துக்கு ராணுவ வீரர்களை அனுப்ப சட்ட ரீதியான முறை இல்லையா ?**

ஒரு சுயாதீன நாட்டைச் சேர்ந்த ஒருவர் மற்றொரு சுயாதீன நாட்டின் தேசிய ராணுவத்தில் சேர சட்டப்பூர்வ அனுமதி இல்லை, அவ்வாறு செய்ய , இரு நாட்டு அரசுகளுக்கும் இடையே ஒப்பந்தம் இருக்க வேண்டும். ஹைட்டி உட்பட ஐக்கிய நாடுகள் சபையின் போர் முயற்சிகளுக்கு நமது படைகள் இவ்வாறுதான் அனுப்பப்படுகின்றன. இருப்பினும், இன்று நாம் பேசும் ரஷ்ய போர் முனைக்கு மக்களை அனுப்புவதில் அத்தகைய சட்ட கட்ட மைப்பு எதுவும் இல்லை. இந்த செயல் முறை ஒரு மோசடி மட்டுமே, இது முற் றிலும் சட்ட கட்டமைப்பிற்கு வெளியே உள்ளது.

**நாட்டின் குடியேற்றச் சட்டங்கள் கடு மையாக இருந்தபோதும், அறுநூறுக் கும் மேற்பட்டோர் ரஷ்ய, உக்ரைன் போர் முனைகளு க்குச் சென்றது எப்படி?**

இவர்கள் அனைவரும் சுற்றுலா விசாவில் வெளிநாடுகளுக்குச் சென் றிருப்பதால் இதற்குக் குடிவரவுத் திணைக்களம் பொறுப்பு என நிச்ச யமாக நான் குற்றஞ்சாட்டவில்லை. டூரிஸ்ட் விசாவில் நாட்டை விட்டு வெளியேறும்போது இப்படி ஒரு செயலைச் செய்யப் போகிறார் என்ற சந்தேகமில்லை. இவற்றை மனித கடத்தல் என அடையாளம் காணும் போது, நடக்க வேண்டிய அனைத்தும் நடந்து முடிந்து விடுகிறது.

**இந்த வழியில், ரஷ்ய மற்றும் உக் ரேனி ய போர்க்களங்களுக்கு அனுப் ப ப்பட்டவர்களிடமிருந்து என்ன சேவைகள் பெறப்படுகின்றன?**

இந்த மக்கள் இராணுவ உதவியா ளர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். மிகத் தீவிரமாகப் போராடும் முனைக ளில் போரை முன்னெடுத்துச் செல்வ துதான் இவர்களிடமிருந்து பெறக்கூ டிய ஒரே சேவை. சொல்லப்போனால், கிராமத்து மொழியில் சொல்வதென் றால், இவர்கள் சண்டைக்கு அனுப்பப் பட்டவர்கள் அல்ல, பலி கொடுக்கவே அனுப்பப்பட்டவர்கள்.

**இந்த உண்மைகளை எப்படி சரியாக கண்டுபிடித்தீர்கள்?**

இவ்வாறு போர் முனைக்கு அனுப் பப்பட்டவர்களில் இருவர் தப்பித்து வந்து இந்த உண்மைகளை முதலில் தெரிவித்தனர்.

**இந்த நிலையைக் கட்டுப்படுத்த என்ன மாதிரியான திட்டத்தை முன்னெ டுக்க வேண்டும்?**

ஊடகங்களுக்கு இங்கு பெரும் பொறுப்புள்ளது. எவ்வளவுதான் மக்க ளுக்கு கூறினாலும் அதை மக்க ளிடம் கொண்டு செல்ல முடியவில்லை என்றால் பயனில்லை. எனவே, செய் தித்தாள்கள், இலத்திரனியல் ஊட கங்கள், சமூக ஊடகங்கள் உட்பட அனைத்துத் துறையினருக்கும் இது தொடர்பில் பொது மக்களுக்குத் தெரி விக்க வேண்டிய கூட்டுப் பொறுப்பு உள்ளது. மக்களை அறிவுறுத்துவதில் முன்னணியில் உள்ள உங்கள் நிறுவ னத்திற்கு நன்றி சொல்ல வேண்டும்.

**இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா?**

நான் முன்பு கூறியது போல், சுற்றுலா விசாவில் செல்பவர்கள் மீது கவனம் செலுத்துவது கடினம். ஆனால் அரசாங்கத்தால் இந்த சம் பவத்தின் ஆணிவேரை அறிந்து விசாரணை நடத்தி பாதிப்புக்கு உள்ளான போர்முனையில் உள்ள இலங்கையர்களை ஆபத்திலிருந்து மீட்பதற்கு தேவையான நடவடிக்கை களை எடுப்பதன் மூலம் இந்த துயர மான சம்பவத்தை தடுக்க முடியும்.

**ரஷ்ய அல்லது உக்ரைன் தூதரகங் களோ அல்லது இரு நாட்டு அரசாங் கங்களுக்கோ இது தெரியுமா? இதைப் பற்றி அவர்கள் என்ன வகையான கருத்தை வெளிப்படுத்துகிறார்கள்?**

ரஷ்ய தூதரகமும் இந்த நிகழ்வுக ளுக்கு எந்த தொடர்பும் அல்லது விழிப் புணர்வும் இல்லை என்று கூறியுள் ளது. சர்வதேச மரபுகளுக்கு கட்டுப்பட்ட இந்த நாடுகள் சர்வதேச தரத்திற்கு புறம்பாக செயல்படும் என்று எண்ண முடியாது. ஆனால், இன்றைய நில வரப்படி, ரஷ்ய போர் முனையிலும், உக்ரைன் போர் முனையிலும் இலங் கையர்கள் முன்னணியில் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**கடுமையான விதிகளால் இது போன்ற விஷயங்களைக் கட்டுப்படுத் துவது கடினமா?**

தற்போதும் சட்ட விதிகள் உள்ளன. இருப்பினும், சட்டத்தை மீறி இது போன்ற கடத்தல்களில் ஈடுபடுபவர்கள் உள்ளனர், மேலும் பணத்திற்காக இது போன்ற கடத்தல்காரர்களிடம் சிக்கிய வர்களும் உள்ளனர்.

எனவே இவ்வாறான விடயங்க ளுக்கு தாங்கள் ஏமாற வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றோம். உங்களை ஏமாற்ற பலர் காத்திருக்கின்றனர் எனவே ஏமாறாமல் உழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். சட்டம் தொடர் பான அதிகாரிகளும் இவற்றைக் கடுமையாக விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி நடந்தால், இது போன்ற தவறான செயல்களை எளிதில் கட்டுப்படுத்த முடியும்.

அத்துடன், இந்த நிலை இனங் காணப்பட்டவுடன் ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய ஜனாதிபதி அலுவலகம் செயற்பட்டு அதனைக் கட் டுப்படுத்துவதற்குத் தேவையான அறி வுறுத்தல்களை வழங்கி வருகின்றது.

**இந்த நிலையில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் வெளிநாட்டு பயணத்தின் போது எடுக்கப்படும் நட வடிக்கைகள் குறித்து திருப்தி அடைய முடியுமா?**

சட்டப்படி, நீங்கள் இவ் வகையான வேலைக்கு செல்ல முடியாது. ஆனால், தங்கள் சொந்த வாழ்க்கை இருந்த போதிலும், மக்கள் தங்கள் சொந்த மற்றும் குடும்பத்தின் பொருளாதார செழுமைக்காக இதைச் செய்கிறார் கள் எனவே, சட்டங்கள் மட்டுமின்றி, சரியான விழிப்புணர்வும் ஏற்படுத்தப் பட வேண்டும்.

**இந்த நாட்டை விட்டு வெளியேறிய மக்களுக்கு ரஷ்ய போர்க்களத்தில் உயிர் இழப்பு கூட ஏற்பட்டுள்ளதா?**

இதை நான் அதிகாரப்பூர்வமாக கூற முடியாது, ஆனால் எங்களுக்கு வரும் செய்திகளின்படி, கணிசமான மக்கள் தங்கள் உயிரை இழந்துள்ள னர். உண்மையில், நிலைமை சோக மானது என்றே விவரிக்கப்படலாம்.

**இந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினராகிய நீங்கள் எப்படி தலை யிட்டு விசாரணை செய்ய ஆரம்பித்தீர் கள்?**

எனது கிராமம் இரத்தினபுரி மாவட் டம். , மாவட்டத்தில் உள்ள பல நண் பர்கள் என்னிடம் இவ்வாறு நடப்பதாக கூறினார்கள் நீங்கள் தலையிடுங்கள் என்று கூறினார்கள்.

பின்னர் நான் இதைப் பற்றி ஆராய்ந்து பார்த்தேன். உண்மையில், தகவல் சரியாக இருந்தது. பின்னர் நான் ஊடகங்களுக்கும் ஜனாதிபதிக் கும் அரசாங்கத்திற்கும் அறிவித்தேன். ரஷ்யப் போர் முனையில் புதைந்து போகும் நம் நாட்டு மக்களைப் பற்றி ஒரு பெரிய சமூக உரையாடலையும், இராஜதந்திர மத்தியஸ்தத்தையும் உரு வாக்க முடிந்தது .

தற்போது ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் கவனமும் இதில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, இந்த நிலைமையை நாம் கட்டுப்படுத்த முடியும் என்று நம்புகிறேன்.

*உதித்த குணவர்தன*
*தமிழில் ; வீ.ஆர்.வயலட்*

## அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம்



இலக்கம் 19, மஜிட்பு ரம், கல்லேல்லை, கதுரு வல, பொலன்னறுவை எனும் முகவரியை வசிப் பிடமாகக் கொண்ட அஷ் ஷெய்ஹ், அல் ஹாபிழ் அப்துல் அஸீஸ் ஸஹ்ரான் (உமைர்) நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான உத்தியோகபூர்வ நிய மனக் கடிதம் முன்னாள் அமைச்சர் ரொசான் ரணசிங்கவினால் அண்மை யில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு மெல்சிரிபுர அல் உஸ்வதுல் ஹஸனா அரபுக் கல்லூரியில் அல்ஹா பிழ் பட்டமும், 2018ஆம் ஆண்டு வாழைச்சேனை அந் நஹ்ஜதுல் இஸ்லா மிய்யா அரபுக் கல்லூரி யில் அல்ஆலிம் பட்டமும் பெற்ற அஷ் ஷெய்ஹ் ஏ.ஏ. எம். ஸஹ்ரான் (நஹ்ஜி), கல்லேலை பொ / அல் அஸ்ஹர் மஹா வித்தியால யத்தின் பழைய மாணவருமாவார்.

மர்ஹூம் அல்ஹாஜ் அப்துல் அஸீஸ் , சித்தி மஸீஹா தம்பதிகளின் மகனான அஷ் ஷெய்ஹ் ஸஹ்ரான் (நஹ்ஜி), சமூக சேவைகளில் சிறு வயது முதல் ஆர்வம் காட்டிவரும் இளம் ஆர்வலருமாவார்.

## திருக்கோவிலில் நாற்பது குடும்பங்களுக்கு நிதி உதவி

**திருக்கோவில் தினகரன் நிருபர்**

அம்பாறையின் திருக்கோவில் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 40 குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சியான நிதி உதவி இஸ்லாமிய ரீலீப் நிறுவனத்தால் வழங்கி வைக் கப்பட்டது.

திருக்கோவில் பிரதேச செயல கத்தில் அப்பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமை யில் நேற்று மேற்படி குடும்பங்க ளுக்கு வாழ்வாதார உதவியாக இந்த உதவி வழங்கப்பட்டது.

திருக்கோவில் பிரதேச செயலா ளரின் கோரிக்கைக்கமைய பொரு ளாதாரத்தில் பின்தங்கியுள்ள, பாடசாலை செல்லும் பிள்ளைக ளுள்ள குடும்பங்களின் வாழ்வா தாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இலங்கைக்கான இஸ்லாமிய ரீலீப் நிறுவனத்தினூடாக கனடா இஸ்லா மிய ரீலீப் நிறுவனத்தால் இந்த நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டது. இதன்போது மேற்படி 40 குடும்பங் களுக்கு ஒரு இலட்சம் தொடக்கம் இரண்டு இலட்சம்வரை முதற்கட்ட நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டது.




## சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டிக்கு தெரிவான மாணவி

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

கணித ஒலிம்பியாட் போட்டி யில் வெற்றியீட்டி சர்வதேச போட் டிக்கு தெரிவாகியுள்ள மட்டக்க ளப்பு மீராவோடை அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவி எம். எச்.அய்னிபதுல் அண்மையில் பாடசாலை சமூகத்தால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

மேற்படி வித்தியாலய பழைய மாணவர்கள் சங்கத்தின் ஏற்பாட் டில் பாடசாலை அதிபர் ஏ.ஜே. மர்சூக் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.



இந்நிகழ்வில் பிரதம அதிதி யாக மட்டக்களப்பு மத்தி வலய கல்விப் பணிமனையின் பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.எச். எம்.றமீஸ், ஓட்டமாவடி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கே.பி.எஸ்.ஹமீட் உட்பட கல்வி அதிகாரிகள் பலர் கலந்துகொண் டனர்.

இப்பாடசாலையிலிருந்து தேசி யமட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் தெரிவு செய்யப் பட்ட எம்.எச்.அய்னிபதுல், சர்வ தேச மட்ட கணித ஒலிம்பியாட் போட்டிக்குக்கு தெரிவு செய்யப் பட்டுள்ளார்.


### அறிவித்தல்

**கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு**

**கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் பதவி வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2024**

கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் பதவிக்கு மாகாண இலங்கை சோசலிச குடியரசின் 1840/51 ஆம் இலக்க 13.12.2013 ஆந் திகதிய வர்த்தமானி பத்திரிகை மூலம் வெளியிடப்பட்ட இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் சேவை பிரமாண குறிப்பின் 11 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை அலுவலர்களிடமிருந்து அகில இலங்கை ரீதியில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 27.05.2024

அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிழக்கு மாகாண இணையதளத்தில் மேலதிக தகவல்களையும், தகைமைகளையும் பார்வையிட்டு மாதிரி விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். முறையாக பூர்த்தி செய்யப்படாது சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

www.ep.gov.lk → Exams and Results → Recruitment Exams

**ஆ.மன்சூர்**
**செயலாளர்**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு**
**கிழக்கு மாகாணம்**

**08.05.2024.**


### சுதேச மருத்துவம்;
## மட்டக்களப்பில் கலந்துரையாடல்

**புதிய காத்தான்குடி தினகரன், மணல் சேனை நிருபர்கள்**

சுதேச மருத்துவம் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான கலந்து ரையாடல் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் திங் கட்கிழமை நடைபெற்றது.

சுதேச பாரம்பரிய தமிழ் மருத் துவத்தின் உயர் கல்வி நிறுவனத் தலைவர் வைத்தியர் ஆர். சிறிகி ருஸ்ணன் தலைமையிலான சுதேச வைத்தியர்கள், மட்டக்களப்பு மாவட்ட அர சாங்க அதிபர் ஜஸ்டினா முர ளிதரனை சந் தித்து கலந்து ரையாடினர்.



இ தன் போது மட்டக்க ளப்பு மாவட்டத்தில் சுதேச பாரம் பரிய மருத்துவத்தை அபிவிருத்தி செய்தல், மூலிகை தோட்டம் அமைத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப் பட்டன.

## காத்தான்குடி பிரதேச பள்ளிவாசலில் திருட்டு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பின் புதிய காத்தான் குடி பிரதேசத்திலுள்ள பள்ளிவா சலொன்றில் உண்டியல் உடைக் கப்பட்டு அதிலிருந்த பணம் திருடப்பட்டுள்ளது.

புதிய காத்தான்குடி அப்ரார் பள் ளிவாசலில் வைக்கப்பட்டிருந்த உண்டியல் பணமே நேற்று முன்தி னம் திங்கட்கிழமை பகல் திருடப் பட்டுள்ளதாக, அப்பள்ளிவாசல் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல் - 2024-05-08

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான கேள்விப் பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | திருகோணமலை நீர் வழங்கல் திட்டம் - நகர நீர் வழங்கல் திட்டத்தில் மேன்ஹோல் மூடிகளை நிறுவுதல் மற்றும் வால்வு அறைகளை உயர்த்துதல்<br>ஒப்பந்த இல: **TRI/O&M/NRW/CHAMBER/ TOWN/2024/ SQ-54** | 2,000.00 + VAT | ரூபா 11,500/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C8, C9 தரத்தில் CIDA பதிவு | 1.15 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele:026-2222519/<br>026-2222028<br>Fax:026-2225225 | 22.05.2024 மு.ப. 10.00 |
| 02 | பதுளை நீர் வழங்கல் திட்டத்தில் தற்போதுள்ள சேவை இணைப்புகளை மேம்படுத்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/NRW/AE(BAD)/ BADULLA WSS/2024/04** | 6,000/- + VAT ** | ரூபா 123,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C7 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிா-ிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 22.05.2024 பி.ப. 2.00 |
| 03 | ஹப்புத்தளை, ஹல்துமுல்ல மற்றும் சீலதென்ன நீர் வழங்கல் திட்டத்தில் தற்போதுள்ள சேவை இணைப்புகளை சரிசெய்வதற்கான ஒப்பந்தம்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/NRW/ HAPUTALE/2024/12** | 12,500/- + VAT ** | ரூபா 257,250/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 17.15 மில்லியன் | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிா-ிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 22.05.2024 பி.ப. 2.00 |
| 04 | கிராந்துருகோட்டே நீர் வழங்கல் திட்டத்தில் பொறுப்பதிகாரி விடுதி நிர்மாணத்தின் மிகுதி வேலைகள்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/REH/AE(BAD)/ GIRADURUKOTTE/2024/03** | 12,500/- + VAT ** | ரூபா 230,150/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 15.34 மில்லியன் | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிா-ிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 22.05.2024 பி.ப. 2.00 |
| 05 | பண்டாரவளை நீர் வழங்கல் திட்டத்தில் உள்ள நயாபெத்த Gravity Main மற்றும் விதுஹல்பத்தன பரிமாற்ற பிரதானத்தை மேம்படுத்துவதற்காக HDPE/DI குழாய்கள், மற்றும் பொருத்தல்களை பதித்தல் மற்றும் இணைத்தல்.<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/REH/ BANDARAWELA/2024/19** | 12,500/- + VAT ** | ரூபா 231,750/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 15.50 மில்லியன் | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிா-ிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 22.05.2024 பி.ப. 2.00 |
| 06 | மொனராகலை நீர் வழங்கல் திட்டம் - மொனராகலை நிலக்கீழ் நீர் அலுவலகத்தை புனரமைத்தல் (கட்டம் 1)<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/REH/ MON/ GW/2024/29** | 12,500/- + VAT ** | ரூபா 300,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 19.03 மில்லியன் | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிா-ிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 22.05.2024 பி.ப. 2.00 |
| 07 | மொனராகலை நீர் வழங்கல் திட்டம் - மொனராகலை நிலக்கீழ் நீர் அலுவலகத்தை புனரமைத்தல் (கட்டம் 11)<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/REH/ MON/ GW/2024/47** | 12,500/- + VAT ** | ரூபா 300,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 21.15 மில்லியன் | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிா-ிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 22.05.2024 பி.ப. 2.00 |
| 08 | மொனராகலை நீர் வழங்கல் திட்டம் - மொனராகலை நிலக்கீழ் நீர் அலுவலகத்தை புனரமைத்தல் (கட்டம் 111)<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/REH/ MON/ GW/2024/48** | 12,500/- + VAT ** | ரூபா 300,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 19.14 மில்லியன் | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிா-ிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 22.05.2024 பி.ப. 2.00 |
| 09 | செவனகல நீர் வழங்கல் திட்டம் - செவனகலயில் உள்ள பொறுப்பதிகாரி அலுவலகத்தின் முதலாம் மாடியை புனரமைத்தல்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/REH/ MON/ SW/2024/52** | 12,500/- + VAT ** | ரூபா 300,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5, C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 19.07 மில்லியன் | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிா-ிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 22.05.2024 பி.ப. 2.00 |
| 10 | செவனகல நீர் வழங்கல் திட்டம் - செவனகல நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் வால்வை பிரதியீடு செய்தல்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/REH/ SEVANAGALA/2024/114** | 6,000/- + VAT ** | ரூபா 104,350/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C7 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 6.96 மில்லியன் | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிா-ிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 22.05.2024 பி.ப. 2.00 |
| 11 | பூகொட - கிரிந்திவெல நீர் வழங்கல் திட்டத்திலுள்ள உள்ளீர்ப்பு கட்டமைப்பை விஸ்தரித்தல்<br>ஒப்பந்த இல: **RSC(W/N)/P&D/GAM(RH)/2024/10R** | 12,500/- + VAT ** | ரூபா 200,000/- | கட்டிட நிர்மாணம் / நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C4, C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 13.96 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146 | 29.05.2024 10.00 hrs |
| | **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| 12 | கண்டி நகர கழிவு நீர் பொறித்தொகுதியில் உள்ள கழிவு நீர் சேற்றை சுத்திகரிக்கும் ஸ்றூ பிரஸ்ஸிற்கு 5000 கி.கிராம் Cationic Polymer வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: **RSC-C/KCWWTP/O&M/SUP/2024/03** | 6,000/- + VAT ** | ரூபா 85,000/- | 5000kg Cationic Polymer வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 29.05.2024 பி.ப. 2.00 |
| 13 | அனுராதபுரம் பிராந்தியத்திற்கு Portable type Ultrasonic Flow மீற்றர்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் செயற்படுத்துதல்<br>ஒப்பந்த இல: **NRW/RSC/NC/DGM/FLOWMETER/ ANU/2024/040** | 12,500/- + VAT ** | ரூபா 127,500/- | ஆவணத்தின் பிரகாரம் அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிஒநி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அனுராதபுரம்.<br>Tele: 0252222296/ 0252235339<br>Fax: 0252225609 | 29.05.2024 பி.ப. 2.00 |
| | **M & E கேள்விகள்** | | | | | | |
| 14 | திவிதொட்டவெல பம்பி இல்லத்திற்கு End Suction Vertical Delivery Centrifugal பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்துதல்.<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/REH/ DIVITHOTAWELA /2023/93R** | 12,500/- + VAT ** | ரூபா 220,000/- | நீர் பம்பித் தொகுதிகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிா-ிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 22.05.2024 பி.ப. 2.00 |
| 15 | மொனராகலை பிராந்தியத்திற்கு நீர் மட்டத்தைக் கண்காணிக்கும் மற்றும் தொலைக்கட்டுப்பாட்டு முறைமையை வழங்கி நிறுவுதல்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/NRW/ MONARAGALA/2024/45** | 6,000/- + VAT ** | ரூபா 133,200/- | நீர் மட்டம் அளவிடல் மற்றும் தொலைக் கட்டுப்பாட்டு முறைமைகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிா-ிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 22.05.2024 பி.ப. 2.00 |
| 16 | பிஒநி (தெற்கு) அலுவலகத்திற்கு Digital Multifunction Heavy Duty புகைப்படப் பிரதி இயந்திரங்கள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: **RSCS/M&E/WG/CIPC/3000/2024A** | 2,000/- + VAT | ரூபா 11,500/- | புகைப்படப் பிரதி இயந்திரம் மற்றும் துணைப்பாகங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் | | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 22.05.2024 பி.ப. 2.00 |
| | 2024-04-10ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. வவுனதீவு நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு மின்சார பெனல் போர்ட் மற்றும் கேபள்களை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல், நடைமுறைப்படுத்துதல் - ஒப்பந்த இல: **RSC/DGM/RH/ EPB&CABLING/ WTP-VAVU/BATTI/2023/011** - இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2024-05-15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | |
| 17 | மெதும்பர - பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC-C/M&E/HIRING/O&M/CE/2024/135** | 2,000 + VAT | ரூபா 2,000/- | வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | - | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 22.05.2024 பி.ப. 2.00 |
| 18 | காலி பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSCS/P&C/SHCC/GALLE/O&M/3300/2024E** | 4,000/- + VAT | ரூபா 15,000/- | வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 3.79 மில்லியன் | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 22.05.2024 பி.ப. 2.00 |
| 19 | அம்பலாங்கொட பிரதேச பொறியியலாளருக்கு பக்கோ லோடர் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(S)/P&C/SHJCB/GALLE/ O&M/3305/2024A (R)** | 6,000/- + VAT ** | ரூபா 15,000/- | இலங்கையில் கனரக இயந்திராதிகளை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது கனரக இயந்திராதிகளின் உரிமையாளர்கள் அத்துடன் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 12.59 மில்லியன் | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 22.05.2024 பி.ப. 2.00 |
| 20 | வவுனியா பிஒநி (வடக்கு), பிரதிப் பொது முகாமையாளருக்கு (வ) வாகனமொன்றை (கார்) வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC/N/DGM/O&M/Hiring of Vehicle/ 2024/050** | 4,000/- + VAT | ரூபா 15,000/- | வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 4.21 மில்லியன் | பிஒநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/<br>024-2225719/<br>024-2227340<br>Fax:024-2225088/<br>024-2227341 | 22.05.2024 பி.ப. 2.00 |
| 21 | கம்பஹா பிராந்தியத்திற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(W/N)/SS/HIRING/GAM(O&M)/ 2024/59** | 4,000/- + VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் குறைந்தபட்சம் 05 ஆசனங்கள் கொள்ளளவு சகிதமான வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 3.53 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146 | 29.05.2024 10.00 hrs |
| 22 | கம்பஹா பிராந்தியத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(W/N)/SS/HIRING/GAM(O&M)/ 2024/60** | 4,000/- + VAT | ரூபா 15,000/- | வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 3.91 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146 | 29.05.2024 10.00 hrs |
| | **கட்டிடங்களை வாடகைக்கமர்த்துதல் மற்றும் வாடகைக்கு விடுதல்** | | | | | | |
| 23 | தேநீவவச, நீர் மற்றும் துப்புரவேற்பாட்டிற்கான சிறப்பு நிலையத்தின் (CEWAS), 1ஆம் மாடியிலுள்ள அலுவலக அறைகளை வாடகைக்கு வழங்குதல்<br>ஒப்பந்த இல: **NWSDB/CEWAS/RENT/2024/01** | 2,000/- + VAT | ரூபா 17,200/- | ஆவணத்தின் பிரகாரம் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 29.05.2024 10.00hours |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

### பெறுகை அறிவித்தல்

### விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்திற்காக சுத்திகரிப்புச் சேவையை பெற்றுக் கொள்வதற்கான விலைமனுக்கோரல் – 2024/25

01) தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்திற்கான சுத்திகரிப்புச் சேவையை பெற்றுக் கொள்வதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02) விளையாட்டு அமைச்சு கட்டிடத்தின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவின் காசாளருக்கு மீளளிக்கப்படாத ரூ. 1000.00 தொகையை செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவிற்கு சமர்ப்பித்து 2024.05.08 முதல் 2024.05.28 வரை (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00) அலுவலக நாட்களில் குறித்த பெறுகை ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

03) சகல கேள்விதாரர்களும் மத்திய வங்கியின் அனுமதிபெற்ற எந்த வர்த்தக வங்கியிலிருந்து பணிப்பாளர் நாயகம், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பெயரில் பெற்றுக் கொண்ட ரூ. 50,000.00 பெறுமதியான கேள்விப் பிணையொன்றை (பிணைமுறி) கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படும் மாதிரியின் பிரகாரம் சமர்ப்பித்தல் வேண்டும். இக்கேள்விப் பிணை (2024.05.29 முதல் 2024.09.25) வரை செல்லுபடியாதல் வேண்டும்.

04) குறித்த மாதிரிப் பத்திரத்தில் சமர்ப்பிக்க வேண்டிய விலைமனுக்கள் "மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி" என்று இரு பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். இக் கேள்விப் பத்திரங்கள் 2024.05.29 பி.ப. 2.00 வரை ஏற்கப்படுவதுடன் பதிவுத் தபாலில் அனுப்பப்படும் கேள்விப் பத்திரங்கள் குறித்த நேரத்திற்கு முன்பு கிடைக்குமாறு பணிப்பாளர் (பெறுகை) விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், இல. 09, பிலிப் குணவர்தன மாவத்த, கொழும்பு 07 என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கும் கேள்விப் பத்திரங்கள் விளையாட்டு அமைச்சு கட்டிடத்தின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

05) கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் சுத்திகரிப்பு சேவையை பெற்றுக் கொள்வதற்கான விலைமனுக்கோரல் தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானம் - 2024/25 என்று குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவது 2024.05.29 பி.ப. 2.00 ஆவதுடன், அன்றைய தினம் உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அவ் வேளையில் சமுகமளிக்கலாம்.

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,**
**இலக்கம் 09,**
**பிலிப் குணவர்தன மாவத்த,**
**கொழும்பு - 07,**
**தொ.பே.இல. - 0112694566**
**பெக்ஸ் - 0112695822**
**மின்னஞ்சல் : departmentofsportsdevelopment@gmail.com**

## விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்

### பெறுகை அறிவித்தல்

### விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்திற்காக பாதுகாப்புச் சேவையை பெற்றுக் கொள்வதற்கான விலைமனுக்கோரல் – 2024/25

01) தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்திற்கான பாதுகாப்புச் சேவையை பெற்றுக் கொள்வதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02) விளையாட்டு அமைச்சு கட்டிடத்தின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவின் காசாளருக்கு மீளளிக்கப்படாத ரூ. 1000.00 தொகையை செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை பெறுகை பிரிவிற்கு சமர்ப்பித்து 2024.05.08 முதல் 2024.05.28 வரை (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00) அலுவலக நாட்களில் குறித்த பெறுகை ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

03) சகல கேள்விதாரர்களும் மத்திய வங்கியின் அனுமதிபெற்ற எந்த வர்த்க வங்கியிலிருந்து பணிப்பாளர் நாயகம், விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பெயரில் பெற்றுக் கொண்ட ரூ. 50,000.00 பெறுமதியான கேள்விப் பிணையொன்றை (பிணைமுறி) கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படும் மாதிரியின் பிரகாரம் சமர்ப்பித்தல் வேண்டும். இக்கேள்விப் பிணை கேள்வி திறக்கப்படும் தினம் முதல் 119 நாட்கள் (2024.05.29 முதல் 2024.09.25) ரை செல்லுபடியாதல் வேண்டும்.

04) குறித்த மாதிரிப் பத்திரத்தில் சமர்ப்பிக்க வேண்டிய விலைமனுக்கள் "மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி" என்று இரு பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். இக் கேள்விப் பத்திரங்கள் 2024.05.29 பி.ப. 2.00 வரை ஏற்கப்படுவதுடன் பதிவுத் தபாலில் அனுப்பப்படும் கேள்விப் பத்திரங்கள் குறித்த நேரத்திற்கு முன்பு கிடைக்குமாறு பணிப்பாளர் (பெறுகை) விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், இல. 09, பிலிப் குணவர்த்தன மாவத்த, கொழும்பு 07 என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கும் கேள்விப் பத்திரங்கள் விளையாட்டு அமைச்சு கட்டிடத்தின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் (பெறுகை) இன் உத்தியோகப்பூர்வ அறையில், வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

05) கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் பாதுகாப்பு சேவையை பெற்றுக் கொள்வதற்கான விலைமனுக்கோரல் தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானம் - 2024/25 என்று குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவது 2024.05.29 பி.ப. 2.00 ஆவதுடன், அன்றைய தினம் உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அவ் வேளையில் சமுகமளிக்கலாம்.

06) கேள்வி திறக்கப்படும் தினம் முதல் 91 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,**
**இலக்கம் 09,**
**பிலிப் குணவர்தன மாவத்த,**
**கொழும்பு - 07,**
**தொ.பே.இல. - 0112694566**
**பெக்ஸ் - 0112695822**
**மின்னஞ்சல் : departmentofsportsdevelopment@gmail.com**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்

### கம்பஹா மாவட்ட மட்ட விளையாட்டு தொகுதியில் உடற்பயிற்சிக்கூடம் மற்றும் உணவகம் ஆகியவற்றின் மீதி வேலைகளின் நிர்மாணம்

**ஒப்பந்த இல.: DSD/PRO/03/03/15-2024**

கீழே விபரிக்கப்பட்டவாறு கம்பஹா மாவட்ட மட்ட விளையாட்டு தொகுதியில் உடற்பயிற்சிக்கூடம் மற்றும் உணவகம் ஆகியவற்றின் மீதி வேலைகளின் நிர்மாணத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார். ஒப்பந்த இல.: DSD/PRO/03/03/15-2024

1. இவ்வேலையானது பின்வருவனவற்றை அடக்குகின்றது.
   கொன்கிறீட் வேலைகள், தரைச்சுவர் மற்றும் சீலிங் மெருகூட்டல், உலோக வேலைகள் மற்றும் பெயிண்ட் வேலைகள்.
   
   மின் மற்றும் குழாய் வேலைகள்
   
   நிர்மாணக் காலமானது 120 நாட்களாகும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவர்களாகவுமிருத்தல் வேண்டும்.
   
   3(அ) விலைமனுதாரர் நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் கீழ் கட்டிட நிர்மாணம் மற்றும் மின் நிறுவுதல் ஆகியதுறைகளில் சி-5 மற்றும் ஈஎம்4 அல்லது சி-4 மற்றும் ஈஎம்4 ஆகிய தரங்களில் செல்லுபடியாகும் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   
   3(ஆ) கடந்த ஐந்து வருடங்களில் நிகரான பெறுமதி மற்றும் சிக்கல்தன்மையில் ஆகக் குறைந்தது இரு செயற்றிட்டங்களை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 09 ஆம் இலக்கத்திலுள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள, பொறியியல் சேவைகளுக்கான பணிப்பாளரிடமிருந்து பெற்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம். (தொலைபேசி இல.: 0112677960)
5. 2024.05.08 ஆம் திகதியிலிருந்து 2024.05.28 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 7,500 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 09 ஆம் இலக்கத்திலுள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள, பெறுகைக்கான பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பண முறையிலேயே இருத்தல் வேண்டும்.
6. 2024.05.29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. விலைமனுவின் செல்லுபடியாகும் காலமானது விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் ஆறு இலட்சம் ரூபா (600,000 ரூபா) பெறுமதியான 'விலைமனுப் பிணையொன்றுடன்' இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. விலைமனுப் பிணையின் செல்லுபடியாகும் காலமானது அதனது மூடும் திகதியிலிருந்து 119 நாட்களாகும்.
10. 2024.05.17 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு கொழும்பு-07, விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்,**
**இல.: 09, பிலிப் குணவர்தன மாவத்தை,**
**கொழும்பு-07.**
**தொலைபேசி: 011 2677960**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்

### வவுனியா மாவட்ட மட்ட விளையாட்டு தொகுதியில் 400மீ வழித்தட விளையாட்டு மைதானத்திற்கான மீதி வேலைகளின் நிர்மாணம்

**ஒப்பந்த இல.: DSD/PRO/03/03/13-2024**

கீழே விபரிக்கப்பட்டவாறு வவுனியா மாவட்ட மட்ட விளையாட்டு தொகுதியில் 400மீ வழித்தட விளையாட்டு மைதானத்திற்கான மீதி வேலைகளின் நிர்மாணத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார். ஒப்பந்த இல.: DSD/PRO/03/03/13-2024

1. இவ்வேலையானது பின்வருவனவற்றை அடக்குகின்றது.
   - மண் வேலைகள், புல்பதித்தல் வேலைகள், Sprinkler நீர்ப்பாசன வேலைகள், வடிகாலமைப்பு முறை மற்றும் குழாய் இணைத்தல் வேலைகள்.
   
   நிர்மாணக் காலமானது 180 நாட்களாகும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவர்களாகவுமிருத்தல் வேண்டும்.
   3(அ) விலைமனுதாரர் நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் கீழ் நெடுஞ்சாலைகள் நிர்மாணம்/ விளையாட்டு மைதான நிர்மாணம் மற்றும் குழாய் இணைத்தல் மற்றும் வடிகாலமைப்பு துறையில் சி-4 மற்றும் ஈஎம்4 அல்லது சி-3 மற்றும் ஈஎம்-4 தரத்தில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   3(ஆ) கடந்த பத்து வருடங்களில் விளையாட்டு மைதானங்களின் நிர்மாணத்தில் இதன் நிகரான பெறுமதி மற்றும் சிக்கல்தன்மையில் ஆகக் குறைந்தது மூன்று செயற்றிட்டங்களை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 09 ஆம் இலக்கத்திலுள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள, பெறுகைக்கான பணிப்பாளரிடமிருந்து பெற்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம். (தொலைபேசி இல.: 0112677960)
5. 2024.05.08 ஆம் திகதியிலிருந்து 2024.05.28 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 17,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 09 ஆம் இலக்கத்திலுள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள, பெறுகைக்கான பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. 2024.05.29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. விலைமனுவின் செல்லுபடியாகும் காலமானது விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் பன்னிரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா (1,250,000 ரூபா) பெறுமதியான 'விலைமனுப் பிணையொன்றுடன்' இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையின் செல்லுபடியாகும் காலமானது அதனது மூடும் திகதியிலிருந்து 119 நாட்களாகும்.
9. 2024.05.17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு-07, விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்,**
**இல.: 09, பிலிப் குணவர்தன மாவத்தை,**
**கொழும்பு-07.**
**தொலைபேசி: 011 2677960**

The Housewives' companion
Classifieds on
Daily News

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want
Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
BANK OF CEYLON BOC Lake House Branch
Acc. No. 000000377

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக பொருட்களை வழங்கல்

01. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) நிட்டம்புவ நிறைவேற்று பொறியியலாளர் பிரிவின் கொள்முதல் குழுத் தலைவரினால் கி.மீ.1500 வீதி அபிவிருத்தி வேலைத்திட்டதின் கீழ் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக **நிட்டம்புவ, பூகொட** மற்றும் **மீரிகம** Ready Mix Concrete (Grade 30) 148m³ குறிப்பிடப்பட்டுள்ள மூலப்பொருட்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

**ஒப்பந்த இலக்கம் - RDA/SP/1500KM/WP/DL/44**

**ஒப்பந்த இலக்கம் - RDA/SP/1500KM/WP/DL/45**

**ஒப்பந்த இலக்கம் - RDA/SP/1500KM/WP/DL/46**

02. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - www.mohsl.gov.lk**

**வீதி அபிவிருத்தி அதிகார சபை - www.rda.gov.lk**

**தலைவர்,
கொள்முதல் குழு,
தலைமை பொறியியலாளர் அலுவலகம்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
நிட்டம்புவ.**

SEL ACINE

## பெறுகை அறிவித்தல்
## ரெயோன் நூல் கொள்வனவு செய்தல்
## மேல் மாகாண கைத்தொழில் திணைக்களம்

மேல் மாகாண கைத்தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான புடவைக் கைத்தொழில் நிலையங்களில் உற்பத்தி விடயங்களுக்குத் தேவையான நூல் கொள்வனவு செய்வதற்காக கீழ்க்காணும் நூல் அளவை மற்றும் அளவுகளுக்கு அமைவாக கேள்விகள் கோரப்படுகின்றன.

| ரெயோன் நூல் | | |
|---|---|---|
| நூல் அளவை | விபரம் | தேவைப்படும் அளவு (கோன்) |
| ரெயோன் நூல் | 125g (4500 யார்) | 12,000 கோன்கள் |

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான கேள்வி ஆவணங்களை, ரெயோன் நூல் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தையும் (ஒவ்வொன்றிற்கும் வேறுவேறாக) செலுத்தி 2024.05.08 முதல் 2024.05.22 வரை மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 வரை வாரத்தின் வேலை நாட்களில் கைத்தொழில் திணைக்களத்தின் தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2024.05.22 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு, தலைவர், பெறுகைக் குழு, கைத்தொழில் திணைக்களம் (மே.மா), 3ம் மாடி, இல. 204, மேல் மாகாண சபைக் கட்டிடம், டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு முறையாக முத்திரையிட்டு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது அவ் அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளர் 1 உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன், அவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
கைத்தொழில் திணைக்களம் (மே.மா)
இல. 204,
3ம் மாடி,
மேல் மாகாண சபைக் கட்டிடம்,
டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல**

### இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
### STHRD செயற்றிட்டம்
### கல்வி அமைச்சு
## விலைமனுக்களுக்கான அழைப்பு

| | |
|---|---|
| கடன் இலக்கம் மற்றும் தலைப்பு | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம் |
| ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு | STHRD/CRG/R2/SB1-E1 – சபரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் கற்கைநெறி பீடத்திற்காக Clean Room (Type3)-1 இன் பெறுகை ('பொருட்கள்' என அழைக்கப்படுவது) |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித்திகதி | 2024 மே 16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு (உள்ளூர் நேரம்) |

### விலைமனுக்களை மூடும் திகதியின் மாற்றம்

01. மேலேயுள்ள விலைமனு அழைத்தலின் மூடும்/ திறக்கும் திகதியானது பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| விலைமனுக்கோரலின் கால எல்லை | : 2024 ஏப்ரல் 8 ஆம் திகதியிலிருந்து 2024 மே 16 ஆம் திகதியன்று வரையும். |
| விலைமனுவின் மூடும்/திறக்கும் திகதி | : 2024 மே 16 ஆம் திகதியன்று (மு.ப. 10 மணிக்கு) |
| விலைமனு செல்லுபடியாகும் திகதி | : 2024 செப்டம்பர் 13 ஆம் திகதியன்று வரையும் |
| விலைமனுப்பிணை செல்லுபடியாகும் திகதி | : 2024 ஒக்ரோபர் 11 ஆம் திகதியன்று வரையும் |

02. விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்த விலைமனுதாரரின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிக்கு பிற்சேர்க்கையொன்று அனுப்பப்படும்.

**தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிஹுல்ஓய, இலங்கை.**

**ZIP code: 70140
தொலைபேசி: 0452280081
மின்னஞ்சல்: sposb-sthrd@mohe.gov.lk
திகதி: 08.05.2024**

## அறிவித்தல்

### இலங்கை புகையிரத ஊழியர் நலன்புரிச் சங்கம்
### 540, காலி வீதி, இரத்மலானை
### (1965 இல. 03 சட்டவாக்கத்தில் கூட்டிணைக்கப்பட்டுள்ளது)

மேற்படி சங்கத்தின் 47 ஆவது நூற்றாண்டு மற்றும் 48 ஆவது வாக்கெடுப்பு 2024.06.16 (ஞாயிறு) மு.ப.8.00 முதல் பி.ப.2.00 வரை இரத்மலானை பிரதான இயந்திரப் பொறியியல் அலுவலகம் முன்னிலையில் விநோத இலக்கிய மற்றும் சமூக நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

அன்று சங்கத்திற்காக தலைவர், உப தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகள் மற்றும் செயற்குழு அங்கத்தவர் பதவிகளுக்கு 12 பேர் (யாப்பின் பிரகாரம்) தேர்ந்தெடுக்கப்படுவதுடன் இதற்காக பெயர் குறிப்பிடுதல் விண்ணப்பங்கள் 2024.05.22 பி.ப.12.30 இற்கு முன்பு சங்கத்தின் விசேட நிர்வாகக் குழு தலைவருக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் அல்லது பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பெயர் முன்மொழிவுகளை பொறியிடப்பட்ட உறையில் இட்டு இடது மேல் மூலையில் "பெயர் குறிப்பிடுதல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

சகல விண்ணப்பதாரிகளும் சங்கத்தின் தலைமையகத்தில் அமைந்துள்ள இரத்மலானை முதல் பதினைந்து மைல் அரைவிட்டத்தில் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும். செயலாளர் அல்லது பொருளாளர் பதவிக்காக முன்வருகின்ற விண்ணப்பதாரிகள் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வாக்கெடுப்புக்காக தேர்தலை நடத்துவதற்கு ஏற்படின் உங்களது வாக்கை அளிப்பதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது திணைக்கள அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

பெயர் முன்மொழிவு விண்ணப்பங்களை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**கட்டளைப் பிரகாரம்
பீ. ஏ. கிரிசந்த (அதிகாரி பொறியியலாளர்)
விசேட நிர்வாகக் குழுத் தலைவர்
தொ.பே.இல : 011-2634175
2024.05.08**

**Repeat Your ad For Better Offers**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### மேல் மாகாண சபையின் மேல் மாகாண பொறியியல் அமைப்பு

### பிலியந்தலையில் சுகாதார வைத்திய அதிகாரி (MOH) அலுவலகத்திற்கு முன்மொழியப்பட்ட கழிவுநீர் முறைமையை வடிவமைத்தல், வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படவைத்தல் மற்றும் ஒப்படைத்தல்

1) பின்வருமாறு விபரிக்கப்படும் ''பிலியந்தலையில் சுகாதார வைத்திய அதிகாரி (MOH) அலுவலகத்திற்கு முன்மொழியப்பட்ட கழிவுநீர் முறைமையை வடிவமைத்தல், வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படவைத்தல் மற்றும் ஒப்படைத்தல்'' எனும் பணிக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சுகாதார அமைச்சின் (மே.மா) செயலாளர் சார்பாக பிரதிப் பிரதான செயலாளரின் (பொறியியல்) பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.
   - முன்மொழியப்பட்ட கழிவுநீர் முறைமையை வடிவமைத்தல், வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படவைத்தல் மற்றும் ஒப்படைத்தல் என்பன இந்த முன்மொழியப்பட்ட வேலையில் உள்ளடங்குகின்றன.
   - நேரடி நிர்மாணக் கிரயம் 4.5 மில்லியன் ரூபாவாகும்.
   - நிர்மாணக் காலம் 105 நாட்காட்டி நாட்களாகும்.
2) இந்த விலைக்கோரல் இரட்டை கடித உறை முறையில் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.
3) தகுதி வாய்ந்த விலைமனுதாரர் பின்வரும் ஆரம்ப தகைமைத் தேவைப்பாடுகளுக்கு இணங்குதல் வேண்டும்.
   அ) விலைமனுதாரர் தகுதிநீக்கம் செய்ய பட்டோர் பட்டியலுக்கு உட்படாதிருத்தல் வேண்டும்.
   ஆ) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நீர் / மாசுபாட்டைக் கட்டுப்படுத்துதல் தொழில்நுட்ப வழிகாட்டிக்கு ஆலோசகர் / நிபுணராக செல்லுபடியாகும் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   இ) இலங்கையில் ஆலோசனை நிறுவனம்/ நிறுவகமாக வியாபாரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4) தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் பின்வரும் தகைமைக்குப் பின்னரான தேவைப்பாடுகளுக்கு இணங்குதல் வேண்டும்.
   அ) இதனையொத்த அல்லது அதிக திறன் கொண்ட கழிவுநீர் முகாமைத்துவ முறைமை நிறுவுதலில் திட்டமிடுதல், பொறியியல், நிறுவுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்கு விலைமனுதாரர் தனது பணியாட் தொகுதியினரில் தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த பணியாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   ஆ) விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதியின் பிரகாரம் கடந்த ஐந்து வருடங்களில் செய்துள்ள நிர்மாண வேலைகளின் சராசரி வருடாந்த புரள்வு 23 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
   இ) கடந்த ஐந்து வருடங்களில் செய்து முடிக்கப்பட்ட 3.5 மில்லியன் ரூபாவிற்குக் குறையாத பெறுமதியுடைய இதனையொத்த தன்மை மற்றும் சிக்கலான தன்மையான இரண்டு கழிவுநீர் திட்டங்களை (குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு 2.3 $m^3$ கொள்ளளவு சகிதமான கழிவுநீர் திட்டம்) நிர்மாணித்தல் மற்றும் பூர்த்தி செய்தலில் அனுபவம்.
   ஈ) விலைமனுதாரர் கடந்த ஐந்து (5) வருடங்களில் குறைந்தபட்சம் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட கழிவுநீர் திட்டங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்த அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   உ) இந்த ஒப்பந்தத்திற்காக மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முற்பணக்கொடுப்பனவு நீங்கலாக (ஏனைய ஒப்பந்தரீதியிலான கடப்பாடுகளை பூர்த்தி செய்த பின்னர்) ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும்/அல்லது கடன் வசதிகளின் ஆகக் குறைந்த தொகை 3.5 மில்லியன் ரூபாவிற்கு குறையாமலிருத்தல் வேண்டும்.
5) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பத்தரமுல்ல, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 5ஆம் மாடி, பொறியியல் அமைப்பு (மே.மா), பெறுகைப் பிரிவு, பொறியியலாளரிடமிருந்து தொலைபேசி: 0112092504 மின்னஞ்சல்: procurementuniteng@gmail.com ஊடாக பெற்றுக்கொள்ளலாம் மற்றும் மேற்கூறிய அதே இடத்தில் சாதாரண வேலை நாட்களில் 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரை விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 3,000.00 ரூபாவை செலுத்தி மற்றும் 2024-05-08ஆம் திகதி முதல் 2024-05-28ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரை பத்தரமுல்ல, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 5ஆம் மாடி, பொறியியல் அமைப்பு (மே.மா), பெறுகைப் பிரிவு, பொறியியலாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
7) விலைக்கோரல் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 63 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
8) சகல விலைமனுக்களுடனும் விலைமனு ஆவணத்தின் 5ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள வடிவத்தின் பிரகாரம் பத்தரமுல்ல, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 5ஆம் மாடி, பொறியியல் அமைப்பு, பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்) பெயரில் விலைமனுதாரர்களுக்கான அறிவுறுத்தலின் 1ஆம் பிரிவிற்கு இணங்க நாற்பத்தையாயிரம் ரூபா தொகைக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று அல்லது இருபத்தியிரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா (22,500.00 ரூபா) விலைக்கோரல் ரொக்கப் பணவைப்பொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது விலைமனுதாரர்களுக்கான அறிவுறுத்தல்களின் 16.1ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரகமொன்றினால் வழங்கப்பட்டதும் விலைக்கோரல் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 91 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.
9) நகல்பிரதிகள் சகிதம் முத்திரைக் குறி பொறிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை (Volume 1A, Volume 2 & Volume 3) 2024-05-29ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 5ஆம் மாடி, பொறியியல் அமைப்பு (மே.மா), பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். (பொதுவான தகவல்களுடனான ''தொழில்நுட்ப முன்மொழிவு'' (கடிதவுறை 1) மற்றும் ''விலை முன்மொழிவு'' (கடிதவுறை 2) என்பவற்றை இரு தனித்தனியான கடிதவுறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் தனியொரு உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். (விலைமனுக்கள் (கடிதவுறை 1) சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடன் திறக்கப்படும்.)
10) விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 மே 16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பிலியந்தலை MOH அலுவலகத்தில் இடம்பெறும்.

**தலைவர்,
பிரதிப் பிரதான செயலாளரின் (பொறியியல்) பெறுகைக் குழு,
பொறியியல் அமைப்பு (மே.மா),
5ஆம் மாடி, இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல.**

**தொலைபேசி இல.: 0112092501
தொலைநகல் இல.: 011292505**

**2024-05-07.**

### 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி சுவீகரித்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்டவாறான காணி சுவீகரித்தல் சட்டத்தின் (460ஆம் சட்டம்) 7ஆம் அத்தியாயத்தின் கீழ் அறிவித்தல்

**எனது இலக்கம்:** MUL/LND/02/ACQ/90
**காணி அமைச்சின் இலக்கம்:** 4 – 3/8/2017/PC/145

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை வீதி அபிவிருத்திக்காக அரசாங்கத்தினால் சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2024-01-19ஆம் திகதிய 2367/17ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

| | |
|---|---|
| மாகாணம் | : தென் |
| மாவட்டம் | : மாத்தறை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : முலடியன |
| கிராம சேவகர் பிரிவு | : தித்தெனிபொத்த தெற்கு |
| கிராமம் | : தித்தெனிபொத்த |
| ஆரம்ப வரைபட இல. | : கெடஸ்டர் வரைபட இலக்கம் 820428இல் உள்ள வலய இலக்கம் 01இன் படிவ இலக்கம் 1 |
| துண்டு இலக்கங்கள் | : துண்டு இலக்கம் 01 முதல் 11 வரை |

**பிரதேச செயலாளர் / சுவீகரித்தல் அதிகாரி,
முலடியன பிரதேச செயலாளர் பிரிவு.**

2024-05-03ஆம் திகதி
**முலடியன பிரதேச செயலகத்தில்.**


SUNDAY OBSERVER ADZ it's what you want | வாரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements**
(Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

**Kurunegala District**

Kurunegala - 077 0 325 625
6217 - Sampath Advertising - No. 15/6, Convent Lane, Kurunegala.

Kurunegala - 077 3 512 600
6163 - Athugala Media Center - No. 21A, Uthuru Wewa Road, Kurunegala.

Kuliyapitiya - 037 22 832 88
6101 - Sasthrodaya Book Shop - No. 11, Mihindu Mawatha, Kuliyapitiya.

Nikaweratiya - 077 6 064 640
6154 - Kumuditha Book Shop - No. 101/C, Puththalam Road, Nikaweratiya.

Wariyapola - 037 22 672 58
6188 - Kalugamuwa Road, Wariyapola.

Giriulla - 077 9 542 492
6233 - Chathura Book Shop - No. 49, Giriulla.

Pannala - 076 7 861 313
6118 - Miyumi Book Shop - No. 7, Negombo Road, Pannala.

Alawwa - 037 22 78 189
6145 - Gunasiri Welandasela - No.52, Main Street, Alawwa.

Narammala - 037 22 49 211
6155 - Sisira Stores & Pharmacy - Negombo Road, Narammala.

Ibbagamuwa - 037 22 59 508
6202 - Hiriyala Agencies - Dehelgamuwa, Ibbagamuwa.

Polgahawela - 071 6 375 293
6119 - Sagara Stores - Kurunegala Road, Polgahawela.

**Galle District**

Galle - 091 3 021 001
3117 - C. S. Munasingha - New Aradana Traders, No. 83, Main Street, Galle.

Galle - 075 9 699 402
3222 - J. A. S. Jayakodi - 28, P&J City, Gamini Mawatha.

Ambalangoda - 091 22 557 44
3132 - H. D. Mendis - 264, Cooperative Building, Main Street, Ambalangoda.

**Badulla & Nuwaraeliya District**

Hatton - 051 22 225 63
2145 - T. P. C. Chinthaka Nanayakkara - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

Hatton - 052 22 773 47
2506 - C. T. Perumal - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

Nuwaraeliya - 052 22 341 34
2507 - A. Rajalingam - No. 6, New Market Building, Nuwaraeliya.

Thalawakele - 071 7 236 799
2517 - G. G. L. Ravindra Kumara - No. 119, 121, Nuwaraeliya Road, Thalawakele.

Kotagala - 051 4 924 447
2555 - D. Deonis Kodikara & Sons - Rosita Bazaar, Kotagala.

Haputale - 077 7 278 899
8117 - R. M. K. Fizar Khan - Multi Centre, No. 2, Main Street, Haputale.

Bandarawela - 071 0 796 060
8126 - L. Eubert Silva - Nayana Book Shop, No. 343, Main Street, Bandarawela.

Kandy - 055 22 571 30
8131 - Nimal Attanayake - Per Siripura Contractor, Ex-Kandy, Kandy.

Haputale - 057 22 443 92
8139 - A. K. P. Hemawathi - Multi Centre, No. 2, Main Street, Haputale.

Lunugala - 055 22 639 84
8140 - E. M. Lal - Maduka Gold House, No. 111, Main Street, Lunugala.

Bandarawela - 057 22 301 60
8172 - K. P. Kodagoda - 'Sri Subasetha', 2nd Floor, Sinhagiri Building, Bandarawela.

Badulla - 055 22 256 16
8196 - Advertising Office (Lake House), No. 14, Opposite Muthiyangana Clock Tower, Badulla.

Passara - 055 22 888 89
8202 - M. K. M. Ismath - Rishana Book Shop, No. 354, Main Street, Passara.

Badulla - 072 7 998 533
8207 - K. G. Prasanna Kumara - No. 9, Nadukara Kanda Road, Badulla.

Diyatalawa - 057 22 290 24
8228 - A. S. De Alwis - Alwis Book Shop, No. 16, Main Street, Diyatalawa.

**ADZ HOTLINE - 011 2 429 369**
**CALL - 011 2 429 342/ 343**


Daily News Classifieds, the Housewives' companion

# கேள்விக்கான அழைப்பு

## ஹோமாகம வலயக் கல்விப் பணிமனை – 2024

ஹோமாகம வலயக் கல்விப் பணிமனையின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் உருப்படிகளை 2024ம் ஆண்டின் எதிர்வரும் காலத்திற்காக கொள்வனவு செய்வதற்கு **2024.05.29 பி.ப. 2.00 வரை** தகைமையைப் பூர்த்தி செய்யும் வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விக்காக அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| | உருப்படி | மீளளிக்கப்படாத தொகை (ரூ) | மீளளிக்கப்படும் தொகை (ரூ) |
|---|---|---|---|
| P1 | சங்கீத உபகரணம் (ஜேஸ்டிரம் செட், வயலின், கிட்டார், தபேலா செட், ஓர்கன், மெலோடிக்கா, சைட் டிரம், பேஸ் டிரம், சிம்பல் செட், வெள்ளித்தடி, டெம்பரின்) | 1,000.00 | 20,000.00 |
| P2 | கல்வி உபகரணம் (அப்பியாசப் புத்தகம், காபன் பேனா, உபகரணப் பெட்டி) | 1,500.00 | 60,000.00 |

- ஒவ்வொரு உருப்படிக்கும் வேறுவேறாக விலைமனுக்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன், ஒரு உருப்படிக்கு மட்டும் கூட விலைமனுக்களைச் சமர்ப்பிக்க முடியும்.
- கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கும் அளவு 2024ம் ஆண்டின் மிகுதி காலத்திற்கான தேவைப்பாட்டின் அடிப்படையில் மாற்றமடையலாம்.

01. கேள்விக்கோரல் தேசியபோட்டி கேள்வி கோரல் முறைமையின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.
02. மேற்படி கேள்விக்கு ஆர்வம் காட்டுகின்ற தகைமையுடனான கேள்விதாரர்கள் 2024.05.09 முதல் 2024.05.28 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை அலுவலக நேரங்களில் கேள்விகோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்
03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு, வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து, ஒவ்வொரு வகுதிக்கும் வேறுவேறாக மீளளிக்கப்படாத கட்டணத்தை வலயக் கல்விப் பணிப்பாளரின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை நிர்வாகப் பிரிவிற்கு சமர்ப்பித்த பின்னர் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
04. சமர்ப்பிக்கப்படும் சகல கேள்விக்காகவும் கேள்விப் பிணைக்கு பொருந்தும் மீளளிக்கப்படும் வைப்புத்தொகையைசெலுத்திய பின்பு, அதற்காக விநியோகிக்கப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை இணைத்திருத்தல் கட்டாயமாகும்.
05. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை 2024.05.29 பி.ப. 2.00 இற்கு முன் குறித்த வலயக் கல்விப் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது வலயக் கல்விப் பணிமனைக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும், தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகளை எற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விதாரர்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பரிதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்
06. மேலதிக விபரங்களை 011-2855245 இலக்கத்தை அழைத்து, ஹோமாகம வலயக் கல்விப் பணிமனையின் பொது நிர்வாகப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.
07. இவ் விலைமனுக்கோரலை இரத்துச் செய்தல் அல்லது வேறு ஏதாவது மாற்றத்தை மேற்கொள்ளல் பற்றிய அதிகாரம் பெறுகைக் குழுவின் தலைவருக்குரியது.

**எச்.சீ.பீ. கமகே**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வலயக் கல்விப் பணிமனை,**
**நீதிமன்ற வீதி,**
**ஹோமாகம.**

**2024 மே 08ம் திகதி**

# கேள்வி அறிவித்தல்

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - கொழும்பு மாவட்டம்**

## மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

கொழும்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரித்தான சுகாதார நிறுவனங்களுக்கு 2024ஆம் வருடத்திற்கான மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

விலைமனுக்களை 2024-05-08ஆம் திகதி முதல் 2024-05-28 ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.45 மணி வரை பின்வரும் வகையில் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை கொழும்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

| லொட் இலக்கம் | உபகரணம் | எண்ணிக்கை | விலைமனு ஆவணக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| 1 | Point of care ultra sound scan machine | 01 | 1,750.00 |
| 2 | Neonatal warmer | 01 | 1,000.00 |
| 4 | Dressing trolley | 01 | 1,000.00 |
| | Dressing bed | 02 | |
| 6 | Spot lamp | 01 | |
| | BP (Aneroid) | 10 | |
| 8 | Distiller deionized water plant | 02 | |
| 5 | Autoclave | 02 | 1,000.00 |
| | Sterilizer | 08 | |
| 7 | Patient monitors | 04 | |
| | ECG machine | 01 | |
| 9 | Portable dental unit | 01 | 1,100.00 |
| | Contra-angle hand pieces | 17 | |
| | Mirror handle | 1000 | |
| | Mirror tops | 2000 | |

தேவையாயின் கேள்வி ஆவணங்களை இந்த அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக விபரங்களை 0112326248 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்திய இரு நகல்களிலான கேள்வி ஆவணங்களை (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென) வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து இந்த அலுவலகத்தின் நிர்வாக அதிகாரியின் அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது பதிவுத் தபாலில் தவிசாளர், பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், த.பெ. 1287, புதிய செயலகக் கட்டிடம், மாளிகாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பலாம்.

கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் - 2024'' லொட் இல. (......) எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2024-05-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் 2024-05-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இவ்வலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர் - பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**த.பெ. இல. 1287, புதிய செயலகக் கட்டிடம்,**
**மாளிகாவத்தை,**
**கொழும்பு-10**

# சிறு விளம்பரம்



வேலைவாய்ப்பு

காணி/தோட்டம்

321

**வெற்றிடங்கள்**

**தோட்டத்துறை**

இறப்பர் பால் வெட்டுவதற்கு மற்றும் கருவா வேலை தெரிந்த தொழிலாளர் குடும்பம் தேவை. 0769259188. 030495

616

**வீடு சொத்து**

**கொழும்பு மாவட்டம்**

**விற்பனைக்கு**

பேர்ச் 14.40 இற்கு அண்ணளவான இடம் குத்தகைக்கு அல்லது பகுதியொன்றை விற்றல். நாராஹேன்பிட்ட பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு முன்னாலுள்ள 14.40 காணி குத்தகைக்கு அல்லது பகுதியொன்று விற்பனைக்கு. முகவரி 651/ 36, எல்விட்டிகல மாவத்தை, நாராஹேன்பிட்ட, கொழும்பு 05. தொலைபேசி 072470797 4, 072470797 5, 0723666427. 030533

Repeat Your Ad For Better Offers

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

Repeat Your ad For Better Offers

# INVITATION FOR BIDS (IFB)

### DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE
### VALIKAMAM EAST PRADESHIYA SABHA
### LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a **Grant** from the **European Union** towards the cost of **Local Development Support Project**, and intends to apply part of the proceeds of this credit to payments under the Contract for the work(s) stated in the Table below.
2. The **Chairman, Local Authority Procurement Committee, Local Development Support Project (LDSP) on** behalf of the **Valikamam East Pradeshiya Sabha** now invites sealed bids from eligible and qualified bidders for the work(s) stated in the Table below.

| No | Contract No | Contract Name | Estimated Cost (Rs. Mn) Without VAT | CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Validity Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/JAF/VEPS/2024/PT-2/02/R | IMPROVEMENT OF INFRA STRUCTURE FACILITIES FOR MARKETING LOCAL ANIMAL PRODUCT AT VALI EAST PRADESHIYA SABHA | 10.99 | C6 or above BUILDING | 90 | 77 Days | 110,000.00 | 12-Sep-2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).
5. Qualification requirements to qualify for contract award are included in Section 4 (Qualification Information) and Section 5 (Bidding Data and Contract Data) in the Bidding Document.
6. Interested bidders may obtain further information from **Secretary, Valikamam East Pradeshiya Sabha, Point Pedro Road, Puttur, (T.P No: 021 205 8867)** and inspect the bidding documents at **Valikamam East Pradeshiya Sabha, Point Pedro Road, Puttur,** from 08-**may-2024** until 29-**may-2024** between **09:00 Hrs** to **15:00 Hrs** on normal working days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Valikamam East Pradeshiya Sabha, Point Pedro Road, Puttur** from 08-**may-2024** until 29-**may-2024** between **09:00 Hrs.** to **15:00 Hrs.** on normal working days upon payment of a non-refundable fee of **Rs.3,500.00**. The method of payment will be **by cash.**
8. Bids (Original and Copy) shall be delivered to **Chairman, Local Authority Procurement Committee (LAPC), Local Development Support Project (LDSP), Valikamam East Pradeshiya Sabha , Point Pedro Road , Puttur, Jaffna** on or before **10.30** Hrs on **30-may-2024** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. The Bid shall be valid up to 77 days after the deadline for Bid submission. All bids shall be accompanied by a Bid Security as stated in the Table above.
10. The Pre-Bid meeting will be held at Valikamam East Pradeshiya Sabha -Head Office, Point Pedro Road – Puttur on 15th may 2024 at 14.00 hrs, Interested Bidders may participate in this meeting their own expenses.

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC),**
**Local Development Support Project (LDSP),**
**Valikamam East Pradeshiya Sabha , Puttur.**

**08.05.2024**

## வத்தளை மாபோல நகர சபை

# பெறுகை அறிவித்தல்

வத்தளை, மாபோல நகர சபைக்கு சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் செயற்றிட்டங்களை பூர்த்தி செய்வதற்காக தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் பிரகாரம் தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு கேள்விகளை சமர்ப்பிப்பதற்காக அழைப்பு விடுக்கப்படுகின்றது.

**அட்டவணை**

| தொடர் இல. | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பிப்பட்ட தொகை (ரூபா) | CIDA பதிவு எல்லை | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கடப் படாத) ரூ | கேள்விப் பிணை (மீளளிக்கப் படாத) ரூ |
|---|---|---|---|---|---|
| 01 | வத்தளை மாபோல நகர சபைக்குச் சொந்தமான வத்தளை பொது மயான பூமி உட்பக்க வீதியை கொங்கிறீட் குட்டிகல் பதித்தல், மயான பூமியை சுற்றியுள்ள மதிலை மறுசீரமைத்தல், உட்பக்கம் மின் விளக்கு அமைப்பு மூலம் ஒளியூட்டுதல் மற்றும் மயான பூமியை அலங்கரித்தல் | 7,000,000.00 | C6, C7, C8 | 5000.00 | 52,500.00 |

01. பெறுகை விபரம்
    - i. **பெறுகைப் படிவம் விநியோகித்தல் - 2024.05.10 மு.ப. 9.00 முதல் 2024.05.31 பி.ப. 3.00 வரை**
    - ii. **கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் - 2024.06.03 பி.ப. 3.00 இற்கு முன்பு**
    - iii. **கேள்விகள் திறத்தல் - 2024.06.03 பி.ப. 3.00 இற்கு**
02. பெறுகை ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்காக எழுத்துமூல வேண்டுதல் கடிதம் மற்றும் நாளதுரைக்குட்பட்ட CIDA பதிவை நகர சபை தலைமையகத்திற்கு சமர்ப்பித்து கேள்விப்படிவங்கள் அபிவிருத்தி பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.
03. விபரங்களைத் தெரிந்து கொள்வதற்காக வத்தளை மாபோல நகர சபையின் அபிவிருத்தி பிரிவில் வேலை அதிகாரி மூலம் விசாரிக்கலாம் - (தொ.பே.இல. 011-2932132)
04. அட்டவணையில் குறிப்பிடப்படும் கேள்விப்படிவக் கட்டணத்தை காசாகச் செலுத்தி இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட கேள்விப்படிவங்கள் மூலம் மாத்திரம் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.
05. அவ்வாறே அட்டவணையில் குறிப்பிடப்படும் கேள்விப் பிணையுடன் சம்பந்தப்பட்ட கட்டணத்தை இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வங்கியிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப் பிணையொன்றின் மூலம் அல்லது நகர சபையில் வைப்புச் செய்து பற்றுச்சீட்டு அல்லது கேள்விப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
06. சரியாக பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட நகல்பிரதியுடன் கேள்விப் பத்திரங்களை 2024.06.03 பி.ப. 3.00 இற்கு முன்பு கிடைக்குமாறு தலைவர், வத்தளை மாபோல நகர சபை, வத்தளை முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
07. சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளுடன் தயாரித்து மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியெனக் குறிப்பிட்டு இரு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டிற்கும் கேள்விகள் சமர்ப்பிக்கும் ஒரு உறையில் இட்டு அவ் உறையில் இட்டு அவ் உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரை குறிப்பிட்டு வலது பக்கம் கீழாக தலைவர், வத்தளை மாபோல நகர சபை என குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
08. கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது கேளவிதாரரின் எழுத்துமூல அனுமதிப்பெற்ற பிரதிநிதியொருவருக்கு மாத்திரம் சமுகமளிக்கலாம்.
09. இதுபற்றிய இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் வத்தளை மாபோல நகர சபைக்கு உரியது.

**பீ.ஏ.எஸ்.எஸ். சந்தருவன்**
**நகர சபையின் செயலாளர் மற்றும் சபையின்**
**அதிகாரம், செயற்பாடுகளை செயற்படுத்தும் அதிகாரி**
**வத்தளை மாபோல நகர சபை**
**2024.05.07**

**தொ.பே. இலக்கம் - 011-2932275**

The Housewives' companion
Classifieds on
Daily News

SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
Pay online & Save your precious time
BOC Acc. No. 000000377 Corporate Branch
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383 E-mail - classified@lakehouse.lk WE ACCEPT

# தொடரை வென்ற இலங்கை ஏ அணிக்கு ஆப்கான் ஏ அணியிடம் மீண்டும் தோல்வி



ஆப்கானிஸ்தான் ஏ அணிக்கு எதிரான ஐந்தாவது மற்றும் கடைசி உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் சர்வதேச போட்டியிலும் இலங்கை ஏ அணி 5 விக்கெட்டுகளால் தோல்வியை சந்தித்தது.

இதன்படி இலங்கை ஏ அணி கடைசி இரண்டு போட்டிகளிலும் தொடர்ந்து தோல்வியை சந்தித்தபோதும் முதல் மூன்று போட்டிகளிலும் தொடர்ந்து வெற்றியீட்டி தொடரை 3–2 என கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

ஹம்பாந்தோட்டையில் நேற்று (7) நடைபெற்ற ஐந்தாவது ஒருநாள் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை ஏ அணி ஆரம்பம் தொட்டு விக்கெட்டுகளை காத்துக்கொள்ள தவறியது. அணித் தலைவரான ஆரம்ப வீரர் நிஷான் மதுஷ்க 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததோடு முக்கிய இடைவெளிகளில் அடுத்தடுத்து விக்கெட்டுகள் பறிபோயின.

மத்திய வரிசையில் பசிந்து சூரிய பண்டார நிதானமாக ஆடி அணியின் ஓட்டங்களை அதிகரிக்க உதவினார். 92 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 8 பௌண்டரிகளுடன் 70 ஓட்டங்களை பெற்றார். எனினும் வேறு எந்த வீரரும் 25 ஓட்டங்களைக் கூட எட்டவில்லை.

இதனால் இலங்கை ஏ அணி 43 ஓவர்களில் 197 ஓட்டங்களுக்கு சுருண்டது. பந்துவீச்சில் ஆப்கான் ஏ அணி சார்பில் நவீட் சத்ரான் 4 விக்கெட்டுகளையும் நங்காலியா கரோட் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த ஆப்கான் அணியின் முதல் இரண்டு விக்கெட்டுகளையும் 5 ஓட்டங்களுக்குள் சாய்த்து மொஹமட் ஷிராஸ் அதிர்ச்சி கொடுத்தபோதும் ஆரம்ப வீரர் ரியாஸ் ஹசன் கடைசிவரை களத்தில் இருந்து அந்த அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இதன்படி ஆப்கானிஸ்தான் அணி 45 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 198 ஓட்டங்களை எட்டியது. ரியாஸ் ஹசன் 117 பந்துகளில் ஆட்டமிழக்காது 74 ஓட்டங்களை பெற்றார். இலங்கை ஏ அணி சார்பில் பந்துவீச்சில் மொஹமட் ஷிராஸ் மற்றும் துஷான் ஹேமந்த தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் ஆப்கான் ஏ அணி அடுத்து நான்கு நாட்கள் கொண்ட உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டி ஒன்றில் இலங்கை ஏ அணியை எதிர்கொள்ளவுள்ளது. இந்தப் போட்டி வரும் சனிக்கிழமை (11) கொழும்பு, பீ. சரா ஓவல் மைதானத்தில் ஆரம்பமாகும்.

## புளூ மௌண்டன் வெற்றி

மாளிகைக்காடு குறூப் நிருபர்



நிந்தவூர் பொது மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற புளூ மௌண்டன் சம்பியன் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் புளூ மௌண்டன் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

24 அணிகள் பங்குபற்றிய இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில் நிந்தவூர் அட்வென்சர் அணியை புளூ மௌண்டன் அணி தோற்கடித்தது. தொடர் நாயகனாக புளூ மௌண்டன் அணியின் நஜாத், மற்றும் இறுதி போட்டியின் ஆட்ட நாயகனாக பிர்னாஸ் ஆகியோர் தெரிவாகினர்.

## யங்மன் அணி சம்பியன்

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்



அக்கரைப்பற்று பவர் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு யங்மன் விளையாட்டு கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (05) நடைபெற்ற இறுதிப்போட்டிக்கு பனங்காடு அக்னி விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்ட யங்மன் அணி 10 ஓவர்களில் நிர்ணயிக்கப்பட்ட 95 ஓட்ட வெற்றி இலக்கை 7 விக்கெட்டுகளை இழந்த எட்டியது. இறுதிப் போட்டியின் ஆட்டநாயனாக 51 ஓட்டங்களை பெற்ற நப்லி அஹமட் தெரிவானார்.



## சர்வதேச செய்திகள்

# எகிப்துடனான உதவிகள் வரும் ரபா எல்லையை கைப்பற்றியது இஸ்ரேல்

## ஹமாஸ் இணங்கிய போர் நிறுத்தத்திலும் இழுபறி

காசாவின் தெற்கு நகரான ரபா மீது இரவு முழுவதும் சரமாரித் தாக்குதல்களை நடத்திய இஸ்ரேலிய இராணுவம் அங்குள்ள எகிப்து மற்றும் காசாவுக்கு இடையிலான ரபா எல்லை கடவையை நேற்று (07) கைப்பற்றியதோடு இஸ்ரேலிய டாங்கிகள் ரபாவுக்குள் மேலும் முன்னேறி வருகின்றன.

காசா போர் நேற்றுடன் 8 ஆவது மாதத்தை எட்டியதோடு, இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு மத்தியஸ்தர்கள் போராடி வரும் நிலையில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தீவிரம் அடைந்துள்ளன.

போர் நிறுத்த முன்மொழிவு ஒன்றுக்கு இணங்குவதாக பலஸ்தீன போராட்ட அமைப்பான ஹமாஸ் கடந்த திங்களன்று அறிவித்தபோதும், அந்தப் போர் நிறுத்த விதிகள் தமது கோரிக்கையை பூர்த்தி செய்வதாக இல்லை என்று இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

காசாவில் பொதுமக்கள் நிரம்பி வழியும் ரபா தொடர்பில் சர்வதேச அளவில் கவலை அதிகரித்திருக்கும் சூழலில், அங்கு பல இடங்கள் மற்றும் வீடுகள் மீது இஸ்ரேலிய டாங்கிகள் மற்றும் போர் விமானங்கள் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

நேற்று அதிகாலையில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட ரபாவில் 21 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்தது. குறிப்பாக அங்குள்ள வீடுகளை இலக்கு வைத்தே இஸ்ரேல் உக்கிர தாக்குதல்களை நடத்தியுள்ளது.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 54 பேர் கொல்லப்பட்டு மேலும் 96 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி வெடித்த இந்தப் போரில் இஸ்ரேல் தொடர்ந்து நடத்தும் இடைவிடாத தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 34,789 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 78,204 பேர் காயமடைந்திருப்பதாக அந்த அமைச்சின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரபாவில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான பலஸ்தீனர்கள் அடைக்கலம் பெற்றிருப்பதோடு அவர்கள் கூடாரங்கள் மற்றும் தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளனர். இவர்களை வெளியேற இஸ்ரேல் உத்தரவிட்டிருக்கும் நிலையில் பலரும் அங்கிருந்து வெளியேற முயன்று வருகின்றபோதும், காசாவின் பெரும்பகுதி இஸ்ரேலின் தாக்குதல்களில் ஏற்கனவே இடிபாடுகளாக மாறியுள்ளன. இதனால் செல்வதற்கு பாதுகாப்பான இடங்கள் இல்லை என்று அவர்கள் கூறி வருகின்றனர்.

ரபாவில் முன்னெடுக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கை ஒன்றில் காசாவில் ஆட்சி புரியும் ஹமாஸ் அமைப்பு பயன்படுத்தும் உட்கட்டமைப்புகள் அழிக்கப்பட்டு போராளிகள் கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிட்டது.

பிரசல்ஸில் நேற்று பேசிய ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரக் கொள்கைகளுக்கான தலைவர் ஜோசப் பொரல், 'ரபா மீதான தாக்குதல் பொதுமக்களுக்கு உயிராபத்துக் கொண்டது' என்று எச்சரித்தார்.

'அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள், அனைவரும் தாக்குதல் நடத்த வேண்டாம் என்று (இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின்) நெதன்யாகுவை கேட்டுக்கொண்டபோதும், சர்வதேச சமூகத்தின் அனைத்துக் கோரிக்கைகளையும் மீறி ரபா தாக்குதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் பல உயிரிழப்புகள் ஏற்படும் என்று நான் அஞ்சுகிறேன். காசாவில் பாதுகாப்பான இடம் எதுவும் இல்லை' என்று பொரல் குறிப்பிட்டுள்ளார்.

ரபா மீது தாக்குதல் நடத்துவது தொடர்பில் இஸ்ரேல் பல வாரங்களாக எச்சரித்து வந்தது. அங்கு ஆயிரக்கணக்காக ஹமாஸ் போராளிகள் நிலைகொண்டிருப்பதாகவும் பல டஜன் பணயக்கைதிகள் இருக்கக் கூடும் என்றும் இஸ்ரேல் குறிப்பிட்டது. ரபாவை கைப்பற்றாது ஹமாஸுக்கு எதிரான வெற்றி சாத்தியமில்லை என்றும் அது குறிப்பிட்டிருந்தது.



### ரபா எல்லைக் கடவை மூடல்

இந்நிலையில் இஸ்ரேலிய டாங்கிகள் நிலைகொண்டிருப்பதால் காசாவுக்கு உதவிகள் வருவதற்கான பிரதான வழியாக இருக்கும் ரபா எல்லைக் கடலை மூடப்பட்டிருப்பதாக காசா எல்லை நிர்வாகத்தை மேற்கோள் காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி வெளிட்டுள்ளது.

படைகள் அங்கு நுழைந்திருப்பதாக இஸ்ரேல் இராணுவ வானொலி முன்னதாக குறிப்பிட்டிருந்தது.

ரபா மற்றும் இஸ்ரேல் கட்டுப்பாட்டு கெரம் ஷலோம் எல்லை கடவையில் காசாவுக்கான உதவிகள் முற்றாக நிறுத்தப்பட்டிருப்பதாக எகிப்தில் உள்ள செம்பிறை சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

ரபாவில் அடைக்கலம் பெற்றிருக்கும் பலஸ்தீனர்களுக்கான மனிதாபிமான திட்டம் ஒன்று வகுக்கப்படும் வரை ரபா படை நடவடிக்கையை ஆரம்பிக்கக் கூடாது என்று அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் இஸ்ரேலை வலியுறுத்தி வந்தன.

'ரபா எல்லைக் கடவை மூடப்பட்டதை அடுத்து காசா குடிமக்கள் மீது இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்கள் மரண தண்டனையை விதித்துள்ளனர்' என்று காசா எல்லைக் கடவை நிர்வாகத்திற்காக பேசவல்ல ஹிஷாம் எத்வான் தெரிவித்தார்.

ரபா எல்லையை இஸ்ரேல் கட்டுப்படுத்துவது குறித்து பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனம் கவலை வெளியிட்டுள்ளது. 'கடந்த 24 முதல் 48 மணி நேரத்தில் எங்களுக்கு இருக்கும் மிகப்பெரிய பிரச்சினை, எல்லையை கடப்பதும், போதிய உதவி பொருட்கள் வராததும் ஆகும்' என்று அந்த ஐ.நா. நிறுவனத்தின் பேச்சாளர் லுயிஸ் வட்ரிட்ஜ் பி.பி.சி. தொலைக்காட்சிக்கு தெரிவித்துள்ளார். நிலைமை பெரும் கவலையை ஏற்படுத்துவதாக உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காசாவின் ரபா நகரில் இஸ்ரேலின் படை நடவடிக்கை மற்றும் ரபா எல்லைக் கடவையில் பலஸ்தீன பக்கத்தை இஸ்ரேல் கைப்பற்றியதை எகிப்து வெளியுறவு அமைச்சு கண்டித்துள்ளது. ரபா மீதான தாக்குதல் போர் நிறுத்த முயற்சிக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கும் பகுதிகளில் உள்ள பெரும் எண்ணிக்கையான மக்கள் வெளியேற்றப்பட்டதாக இஸ்ரேல் குறிப்பிடுகிறது. அந்த மக்களை 20 கிலோமீற்றருக்கு அப்பால் இருக்கும் 'நீடிக்கப்பட்ட மனிதாபிமான வலயம்' என்று அழைக்கும் பகுதிக்கு செல்வதற்கு இஸ்ரேல் நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தது.

சில பலஸ்தீன குடும்பங்கள் மீண்டும் ஒருமுறை கழுதை வண்டிகள் மற்றும் ட்ரக் வண்டிகளில் தமது குழந்தைகள் மற்றும் உடைமைகளை ஏற்றியபடி மீண்டும் ஒருமுறை வெளியேற ஆரம்பித்துள்ளனர்.

சிலர் சேறும் சகதியுமான வீதிகள் வழியே நடைபாதையாகவே வேளியேற ஆரம்பித்துள்ளனர்.

ஒக்டோபரில் போர் வெடித்தது தொடக்கம் வெளியேறிச் செல்வது இது நான்காவது முறை என்று அப்துல்லா அல் நஜர் என்ற பலஸ்தீனர் தெரிவித்துள்ளார். 'எங்கே செல்வது என்று இறைவனுக்குத் தான் தெரியும். இன்னும் அது பற்றி நாம் தீர்மானிக்கவில்லை' என்றார்.

### கெய்ரோவில் போர் நிறுத்த பேச்சு

போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகளில் குழப்பம் நீடித்து வரும் சூழலில், இஸ்ரேல் மற்றும் ஹமாஸுக்கு இடையிலான மறைமுக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் பொருட்டு, தமது தூதுக்குழு நேற்று கெய்ரோ பயணித்ததாக மத்தியஸ்தம் வகிக்கும் கட்டார் குறிப்பிட்டுள்ளது.

ஹமாஸ் அமைப்பு கடந்த திங்கட்கிழமை வெளியிட்ட அறிவிப்பில், போர் நிறுத்தம் ஒன்றுக்கான முன்மொழிவை ஏற்பதாக தமது அமைப்பின் தலைவர் இஸ்மைல் ஹனியோ கட்டார் மற்றும் எகிப்திடம் குறிப்பிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அலுவலகம் வெளியிட்ட அறிவிப்பில், இந்த முன்மொழிவு இஸ்ரேலிய கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை என்றும் ஆனால் உடன்பாடு ஒன்றை எட்டும் முயற்சியாக பேச்சுவார்த்தையாளர்களுடனான சந்திப்புக்கு இஸ்ரேல் தூதுக்குழு ஒன்றை அனுப்புவதாகவும் தெரிவித்துள்ளது.

மறுபுறம் ரபாவில் தொடர்ந்து படை நடவடிக்கையை முன்னெடுக்க நெதயாகுவின் போர் கால அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பதாகவும் அந்த அலுவலகம் கூறியது.

இதில் ஹமாஸ் ஏற்றுக்கொண்டிருக்கும் முன்மொழிவு எகிப்தினால் வழங்கப்பட்ட பலவீனமான ஒன்று என்றும் அதில் இஸ்ரேல் ஏற்காத கூறுகள் உள்ளடங்கி இருப்பதாகவும் இஸ்ரேலிய அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

ஹமாஸ் அமைப்பு மூன்று கட்டங்களைக் கொண்ட போர் நிறுத்தம் ஒன்றுக்கே இணங்கி உள்ளது. ஒவ்வொன்று 42 நாட்களைக் கொண்டதான இந்த போர் நிறுத்தத்தின் முதல் கட்டத்தில் 33 பணயக்கைதிகள் விடுவிக்கப்படுவதோடு இரண்டாவது கட்டத்தில் எஞ்சிய பணயக்கைதிகளுக்கு பகரமாக இஸ்ரேல் காசாவில் இருந்து முழுமையாக வெளியேறவுள்ளது. மூன்றாவது கட்டத்தில் காசாவில் மூன்று தொடக்கம் ஐந்து ஆண்டுகள் கொண்ட மீள்கட்டமைப்பு திட்டம் ஆரம்பிக்கப்படும்.

இந்நிலையில் போர் நிறுத்தம் தொடர்பில் பேசுவதற்கு ஹமாஸ் பிரதிநிதிகள் இன்றைக்குள் கெய்ரோ செல்லவிருந்ததாக பேச்சுவார்த்தையுடன் தொடர்புபட்ட பலஸ்தீனர் தரப்பை மேற்கோள் காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

எட்டப்படும் எந்த ஒரு உடன்படிக்கையும் கடந்த நவம்பரில் பாதி எண்ணிக்கையான பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்ட ஒரு வாரம் போர் நிறுத்தத்திற்கு பின்னரான முதலாவது போர் நிறுத்தமாக அமையும்.

ஆனால் அது தொடக்கம் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்று இன்றி பணயக்கைதிகளை விடுவிப்பதை ஹமாஸ் அமைப்பு மறுத்து வருவதோடு தற்காலிக போர் நிறுத்தம் ஒன்று தொடர்பில் மாத்திரமே பேச்சுவார்த்தை நடத்துவதாக இஸ்ரேல் வலியுறுத்தி வருகிறது.

### ரபா எல்லைக் கடவை



★ ரபா எல்லைக் கடவை காசா மற்றும் எகிப்து எல்லையில் அமைந்துள்ளது. அது காசாவில் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இல்லாத ஒரே எல்லைக் கடவையாகவே இருந்து வந்தது.

★ 2007 ஆம் ஆண்டு இஸ்ரேலுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒன்றின்படி, எகிப்து இந்த எல்லைக் கடவையை கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோதும் ரபா வழியாக காசாவுக்குள் பொருட்கள் செல்ல இஸ்ரேலின் ஒப்புதல் தேவையாக உள்ளது.

★ ஒக்டோபர் 7 ஆம் திகதி காசாவுடனான எல்லைகளை இஸ்ரேல் மூடியதை அடுத்து ரபா எல்லைக் கடவையே காசாவுக்கு உதவிகள் செல்வதற்கான உயிர் நாடியாக இருந்து வந்தது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 8ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

SUNDAY OBSERVER adz it's what you want | தினகரன் வாரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements** (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

## Gampaha District

**Mahara - 011 2 925 168**
1474 - H. M. Induka Herath - Adz soon Advertising, 57/D, Kandy Road, Mahara.

**Mirigama - 033 22 740 19**
1964 - M. D. Mohan Jayalal - No. 219, Pasyala Road, Mirigama.

**Veyangoda - 033 22 903 86**
1984 - H. M. De Seram - No. 37, Main Street, Veyangoda.

**Weliweriya - 077 4 965 266**
